# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

# காப்பிய இலக்கியம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 627 012.

## காப்பிய இலக்கியம்

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

## Learning Objective:

- உலகளாவிய நிலையில் காப்பிய வகை இலக்கியங்களை அறிதல்
- தமிழில்காப்பிய இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, வளம் ஆகியவற்றை அறிதல்.
- சிலப்பதிகாரம் தொடங்கி தமிழில் தோன்றியுள்ள முதன்மையான காப்பியங்களின் தெரிவு செய்த பகுதிகளைக் கற்றல், தமிழ்க்காப்பிய இலக்கியங்களில் பரந்த நிலையில் ஆழமான நிலையிலும் புலமைபெறல்.
- காப்பிய இலக்கியக்கோட்பாடுகளை நன்கறிதல்.

| | |
|---|---|
| **Expected Course Outcomes: இப்பாடத்தைக் கற்பதால் விளையும் பயன்கள்.** | |
| **On the Sucessful Completion of the Studentswil be able to** | |
| **இப்பாடத்தைக் கற்பதால் பின்வரும் பயன்களை மாணவர் அடைவர்** | |
| 1. | தமிழில் சமயங்களுக்கும் காப்பியங்களுக்கும் இடையிலான உறவை, பங்களிப்பை அறிதல். |
| 2. | சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் எழுதிய காப்பிய இலக்கியங்களில் புலமைபெறல். |
| 3. | காப்பிய இலக்கியங்களின் நோக்கம் போக்கும் குறித்த தெளிவான பார்வையைப் பெறுதல் |
| 4. | காப்பியங்களின் அமைப்பு, யாப்பு, பொருண்மை, இலக்கிய நலன்கள் முதலியவற்றைத் திறனாய்வுப் பார்வையோடு நன்கறிந்திருத்தல். |
| 5. | தமிழ்க்காப்பியங்களின் தனித்தன்மைகளை ஆழமாக அறிதல். |

**அலகு - 1 சிலப்பதிகாரம்**

- மதுரைக்காண்டம்
- வஞ்சிக்காண்டம் (முழுமையும்) (21-30) காதைகள்

**அலகு - 2 மணிமேகலை, சீவகசிந்தாமணி**

- மணிமேகலை - பாத்திரமரபு கூறிய காதை
- சீவகசிந்தாமணி - விமலையார் இலம்பகம்.

**அலகு - 3 கம்பராமாயணம், பெரியபுராணம்.**

- கம்பராமாயணம் - திருவடிதொழுத படலம் (27 - 81) 55 பாடல்கள்.
- பெரியபுராணம் - இளையான்குடிமாறன் நாயனார் புராணம்.

**அலகு - 4 இரட்சண்ய யாத்திரீகம்**

- குமாரபருவம் - இரட்சணிய சரிதப்படலம் என்னும் உய்யக்கொண்ட வரலாறு (50 பாடல்கள் முடிய) சிலுவைப்பாடுகள்

**அலகு - 5 சீறாப்புராணம்**

- விலாதத்துக்காண்டம் - நதிகடந்த படலம்.

**துணைநூற்பட்டியல்**

1. இளங்கோஅடிகள் அருளிய சிலப்பதிகாரம் (மூலமும் தெளிவுரையும்), உரையாசிரியர் சிலம்பொலிசு செல்லப்பன், பாரதிநிலையம் சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர். 2016.
2. து.சீனிச்சாமி, தமிழில் காப்பியக்கொள்கை, முதற்பகுதி, தமிழிப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு ஜூலை, 1985.
3. அ.ச.ஞானசம்பந்தன், கம்பன்கலை, கங்கை புத்தக நிலையம், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர். 1996.

4. ம.பெ.சீனிவாசன், கம்பனும் ஆழ்வார்களும், மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, முதற்பதிப்பு, டிசம்பர். 2011.
5. அ.ச.ஞானசம்பந்தன், தேசிய இலக்கியம் (பெரியபுராணம் பற்றிய விளக்கம்), கங்கை புத்தக நிலையம், சென்னை, கங்கை முதற் பதிப்பு, 1997.
6. அ.ச.ஞானசம்பந்தன், சேக்கிழார் தந்தசெல்வம், கங்கை புத்தக நிலையம், சென்னை, முதற் பதிப்பு, 1997.
7. சாமி சிதம்பரனார், மணிமேலை காட்டும் மனிதவாழ்வு, சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை, முதற் பதிப்பு, பிப்ரவரி, 1960.
8. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி ஒன்று), ம.முகம்மது உவைஸ், பீ.மு.அஜ்மல்கான், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு, 1986.

## OUTCOME MAPPING

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PO 1 | PO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CO1 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 3 | 2 | 3 | 3 | 3 |
| CO2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 1 |
| CO3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 |
| CO4 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 |
| CO5 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |

**Strong -3, Medium -2, Low -1**

# அலகு - 1

## சிலப்பதிகாரம்

## மதுரைக்காண்டம்

இது தமிழில் தோன்றிய முதல் காப்பியம். சிலம்பு – அதிகாரம் என்ற இரு பொருள்களைக் கொண்டது. சிலம்பு காரணமாக விளைந்த கதை என்பதால் சிலப்பதிகாரம் என்று கூறப்படுகிறது. ஆசிரியர் இளங்கோவடிகள். காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு என்பர்.

**நூல் எழுந்த வரலாறு**

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றபோது, அங்கே இருந்த மலைவாழ் மக்கள், “வேங்கை மரத்தடியில் ஒரு பெண் தங்கள் கண்முன்னே புட்பக விமானத்தில் ஏறி விண்ணகம் சென்றதைக் கண்டோம்” என்று வியந்து கூறினர். உடனிருந்த சீத்தலைச் சாத்தனார் கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகளுக்கு விவரித்தார். “அடிகள் நீரே அருளுக” எனச் சாத்தனார் வேண்ட, இளங்கோவடிகள் கண்ணகியின் வரலாற்றைச் சிலப்பதிகாரமாகப் படைத்தார்.

**நூல் அமைப்பு**

சிலப்பதிகாரம் புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது. புகார்க்காண்டத்தில் 10 காதைகளும், மதுரைக்காண்டத்தில் 13 காதைகளும், வஞ்சிக்காண்டத்தில் 7 காதைகளும் இடம்பெற்றுள்ளன.

**சிலம்பு கூறும் மூன்று உண்மைகள்**

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்

3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

**சிலம்பின் வேறு பெயர்கள்**

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புதுமைக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம், புரட்சிக் காப்பியம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

**சிலம்பில் காணப்படும் புதுமைகள்**

1. சாதாரண குடிமக்களாகிய கோவலன், கண்ணகியைக் கதைத் தலைவனாக, தலைவியாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
2. கணிகையர் குலத்தைச் சார்ந்தவளாக இருப்பினும் மாதவி "ஒருவனுக்கு ஒருத்தி" என்று வாழ்ந்து நற்குடிப் பெண்ணாக உயர்ந்தமை.
3. மாதவி தன் மகள் மணிமேகலையைத் துறவு பூணச் செய்தமை.
4. பல்வேறு பாக்களைப் பயன்படுத்தியுள்ளமை.
5. ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த நடுகல் வழிபாடு பெண்ணிற்கும்

உரியதாக்கிப் பத்தினிக் கோட்டத்தை எழுப்பியமை எனப் பல புதுமைகளை உள்ளடக்கியது.

**காப்பியக் கதை**

கோவலன் கண்ணகியை மணந்து அவளுடன் சில ஆண்டுகள் இன்பமாக வாழ்ந்தான். பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியின் மேல் காதல் கொண்டு கண்ணகியை விட்டு நீங்கி மாதவியுடன் வாழ்ந்து வந்தான். மாதவிக்கும் கோவலனுக்கும் மணிமேகலை என்ற குழந்தை பிறக்கின்றது. இந்திரவிழாவின்போது மாதவி பாடிய கானல்வரிப் பாடலின் பொருளைத் தவறாக உணர்ந்த கோவலன் அவளை விட்டுப் பிரிந்து கண்ணகியை அடைந்தான். மாதவியின் தாய் மூலமாகப் பொருள் முழுவதும் இழந்ததால் கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான்.

அங்கே கண்ணகியின் கால் சிலம்பை விற்று வணிகம் செய்ய விரும்பினான். பொற்கொல்லன் சூழ்ச்சியினால் கள்வன் எனக் கருதப்பட்டு கொலை செய்யப்பட்டான். கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைப் பாண்டியன் அவையில் வழக்காடி வெற்றி பெற்றாள். சினம் தணியாத கண்ணகி மதுரையை எரித்து விட்டு, சேர நாடு சென்று ஒரு வேங்கை மரத்தின் அடியில் தங்கினாள். வானோர்களுடன் கோவலன் வந்து அவளை அழைத்துக் கொண்டு சென்றான். இதை உணர்ந்த சேர மன்னன் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் எழுப்பி விழா எடுக்கின்றான்.

## 21. வஞ்சின மாலை

### காதைச்சுருக்கம்

அரச மாதேவி உயிர் நீத்ததை அறியாத கண்ணகி அவளை நோக்கி," ஒப்பற்ற கற்புடை மகளிர் பலர் பிறந்த ஊரில் நானும் பிறந்தேன், யானும் ஒரு பத்தினியாவேன். அரசரோடு மதுரையையும் அழிப்பேன்" என்று வஞ்சினம் கூறி அவ்விடத்தை விட்டு அகன்றாள். பின், நான்மாடக்கூடலில் உள்ள மகளிரே, ஆடவரே, மாதவரே, கேளுங்கள்! குற்றமில்லாத என் கணவனைக் கொலை செய்த மதுரையை நான் அழிப்பது குற்றமாகாது" என்று கூறி இடமுலையைக் கையால் திருகி எறிந்தாள். உடனே தீக் கடவுள் வெளிப்பட்டு ஏவல் கேட்டுப் பணிந்து நின்றது! ‘‘நல்லோர் பக்கம் சாராது தீயோரை அழிப்பாயாக!" என ஆணையிட்டாள். அவ்வாறே தீத்திறத்தார் பக்கம் சேர்ந்தது தீ!

### கண்ணகி மதுரை நகர் மீது கொங்கையை எறிதல்

‘‘நான்மாடக்கூடல் என்னும் மதுரைவாழ் மகளிரும், ஆடவரும், தேவரும், மிக்க தவமுடையோரும் கேளுங்கள்!’’ நான் விரும்பிப் போற்றிய என் கணவனைக் கொலை செய்த மன்னனையும் அவன் ஆட்சி செய்த இந்நகரத்தையும் சீறினேன்; ஆதலால் நான் குற்றமேதும் செய்திலேன்!" என்று கூறி, விளங்கிய அணியினையுடைய கண்ணகி, மதுரை நகரை மூன்று முறை வலமாக வந்து, தேன் நிறைந்த மணமுடைய

தெருவில் நின்று, தனது இடப்பக்கத்துக் கொங்கையை வலக்கையினால் திருகி எடுத்துச் சுழற்றி விட்டெறிந்தாள்!

**கண்ணகி மதுரையை எரித்தல்**

**பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**

**மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்**

**தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று**

அவ்வாறு அவள் எறிந்தபோது , தான் பற்றிய பொருளை எரிக்கும் அக்கினி தேவன், நீல நிறத்தையும், முறுக்குண்ட சிவந்த நீண்ட சடையையும் பால்போன்ற வெண்பற்களையும் உடைய பார்ப்பன வடிவத்தோடு, தானே கண்ணகி முன்னர் வந்து தோன்றினான்!. தோன்றி, ‘‘சிறந்த பத்தினித் தெய்வமே! நினக்கு மிகவும் தவறு இழைத்த அந்நாளிலே, இந்நகரில் பரவி எரியூட்ட யானோர் ஏவலை முன்னரே பெற்றுள்ளேன்! ஆதலால் இங்கு அத்தீயினின்றும் பிழைத்தற்குரியோர் யார்? யார்? அறிவிப்பாயாக!” என இரங்கிக் கேட்டான். ‘‘அந்தணர், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், முதியோர், குழந்தைகள் ஆகியோருடைய இருப்பிடங்களை விட்டு விட்டு, தீவினையாளர் பகுதிகளை மட்டுமே எரிப்பாயாக!” எனச் சினம் கொண்ட கண்ணகி ஏவிய அப்பொழுதே, நல்ல தேரையுடைய பாண்டிய வேந்தனது மதுரை நகரத்தைப் புகையுடன் கூடிய தீப்பிழம்பு பற்றி அழித்தது!.

## 22. அழற்படு காதை

**காதைச்சுருக்கம்**

அரசு கட்டிலில் வீழ்ந்த அரசனும் அரசியும் இறந்து விட்டனர் என்பதை அறியாது, ஆசான் முதலானோர் ஓவியம் போல் உரைபின்றி அசைவற்றுக் கிடந்தனர். படைவீரர் தீயைக் கண்டு அஞ்சி அரண்மனை வாயிலில் வந்து கூடினர். நால்வகை வருணப் பூதங்களாகிய தெய்வங்களும் நகரை விட்டு நீங்கின. பசுக்களும் கன்றுகளும் மேல் அகப்படாது அகன்ற தெருவில் ஓடின. பானைகளும் குதிரைகளும் மதிற்புறத்தே சென்றன, தீ அறவோர் பக்கம் சாராது மறவோர் பக்கம் மண்டியது, இல்லற

நெறியினின்றும் பிறழாத முது மகளிர் கணவனை இழந்த கண்ணகியின் செயல் சிறந்ததே” எனத் தீக்கடவுளை வணங்கினர். தீயின் வெம்மையைத் தாங்காத மதுராபதித் தெய்வம் கண்ணகியின் முன் வந்து தோன்றியது.

**மதுரையில் நிகழ்ந்த மாற்றம்**

கண்ணகி என்னும் கற்புத் தெய்வத்தின் ஏவல் பெற்ற தீக்கடவுளின் எரி முகம் திறந்தது; நகரெங்கும் தீப்பற்றியது, நகரைக் காக்கும் தெய்வங்கள் கோட்டை வாயிலைக் காவாது ஒழிந்தன. வெல்லும் போரினையுடைய நெடுஞ்செழியன், தனது நீதி வளைந்ததனை அறிந்தான். அப்பொழுதே, வளைந்த செங்கோலைத் தன் உயிராகிய ஆதாரத்தினை ஈடாகக் கொடுத்து அதனைப் பெரிய நிலமடந்தைக்கு உணர்த்தும் பொருட்டு, குற்றமற்ற கற்பினையுடைய தன் பெருந்தேவியுடன் அரியணையிலே இறந்தான். புரோகிதன், பெருங்கணி தலைமை நிமித்திகன், அறங்கூறு அவையத்தார், வரியிலார், ஆலோசனை முடிவுகளை ஓலையில் எழுதுவோர் என்னும் இவர்களுடன் அரண்மனையில் உள்ளாரும் வளையணிந்த ஏவல் மகளிரும் ஆகியோர் சுவர் ஓவியம் போல் பேச்சின்றி அச்சத்துடன் அசைவற்றிருந்தனர். குதிரைப் பாகர், யானைப் பாகர், விரைந்து தேரோட்டும் தேர்ப்பாகர், வெற்றி பொருந்திய வாளை ஏந்திய மறவர் ஆகியோர் மன்னனது வெற்றி மிக்க அரண்மனை வாயிற்கண் தீயின் பெருக்கத்தை நோக்கித் திகைத்து அங்கிருந்து விலகிச் சென்றனர். ‘ஆதிப் பூதமாகிய கடவுளும், மதுரையை விட்டு அகன்றது!’ அரச பூதமாகிய கடவுளும் மதுரையை விட்டு அகன்றது. வணிகப் பூதமாகிய மிகப்பெரிய கடவுளும், மதுரையை விட்டு அகன்றது வேளாண் பூதம் மதுரையை விட்டு அகன்றது. “பூதங்கள் அனைத்தும் வெளியேறின.” இந்நாட்டு மன்னன் செங்கோன்மையில் தவறிய நாளிலே, இந் நகரினைத் தீயானது உண்ணும் முறையால் உண்ணும் என்பதனை யாம் அறியும் முறையாலே அறிந்தோம்! ஆதலால் அதற்கேற்ப யாமும் காவலைக் கைவிட்டுப் போவது இயல்பேயன்றோ?” எனக் கருதி, தனது கொங்கையால் நகரத்தை எரியூட்டி வெற்றி கொண்ட கண்ணகியின் எதிரே நால்வேறுபட்ட பூதங்களும், வெவ்வேறிடங்களை நோக்கிச் சென்று விட்டன. நெல் முதலான கலப் பொருள்கள் விற்கும் கடை வீதியும்,

கொடியுடைய தேர் ஓடும் வீதியும், பகுதி வேற்றுமை உணரப்பட்ட நான்கு வேறு வகையான தெருக்களும், வலிய குரங்குக் கொடியுடைய வில்லாளனாகிய அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரியூட்டிய அந்நாளில், அவ்வனத்தில் வாழ்ந்த உயிரினங்கள் கலங்கினாற் போலக் கலங்கி, முழுதும் எரிந்து சாம்பலாயிற்று. நெருப்பு அறநெறியாளர் வாழும் இடங்களில் செல்லாது தீயோர் வாழும் இடங்களையே பற்றி எரித்தது“ யானையும் குதிரையும் விரைந்தோடின. கறவைப் பசுக்களும் அவற்றின் கன்றுகளும் கொளுத்தும் தீயில் துன்புறாமல் அறப்பண்புமிக்க ஆயர்களின் அகன்ற தெருக்களை அடைந்தன, அஞ்சாமை மிக்க ஆண் யானைகளும் பெண் யானைகளும் விரைந்து செல்லும் குதிரைகளும் மதில் அரணுக்குப் புறத்தே ஒடி பிழைத்தன. மாலையிலே நிகழும் விழாக்களும், வேத ஒலியும், சிவந்த தீயில் ஓமம் செய்தலும், தெய்வ வழிபாடும் , மகளிர் மலர் தூவி விளக்கேற்றி மகிழ்தலும், மாலைக் களியாட்டமும், முரசின் முழக்கமும் ஆகிய அனைத்தும் அன்று நிகழா தொழிந்தன. எங்கும் துயரம் படர்ந்தது.

**கண்ணகி முன் மதுராபதித் தெய்வம்**

**காதலற் கெடுத்த நோயொ டுளங்கனன்று**

**ஊதுலைக் குருகின் உயிர்த்தன ளுயிர்த்து**

**மறுகிடை மறுகுங் கவலையிற் கவலும்**

**இயங்கலும் இயங்கும் மயங்கலும் மயங்கும்**

**ஆரஞ ருற்ற வீரபத் தினிமுன்**

**கொந்தழல் வெம்மைக் கூரெரி பொறாஅள்**

**வந்து தோன்றினள் மதுராபதியென்.**

கண்ணகி தன் கணவனை இழந்த பெருந்துன்பத் தீயினால் உள்ளம் வெதும்பி, கொல்லனது உலைக் களத்துத் துருத்தியைப் போல வெய்தாக நெடு மூச்செறிந்து நெடுந் தெருக்களிலே சுழன்று திரிவாள்; குறுந் தெருக்களிலே கவலையுடன் திகைத்து நிற்பாள்; சென்று கொண்டே இருப்பாள்; பின் மீண்டும்

செயலற்று மயங்கி நிற்பாள்! இவ்வாறு பொறுத்தற்கரிய வீரபத்தினியின் முன், திரண்ட அழலாகிய வெம்மைமிக்க தீயினைக் கண்டு நெஞ்சு பொறுக்காத மதுராபதி என்னும் காவல் தெய்வம் வந்து தோன்றியது.

## 23. கட்டுரை காதை

**காதைச்சுருக்கம்**

''மதுராபதித் தெய்வம் கண்ணகியை நோக்கி,'' நான் மதுரையின் காவல் தெய்வம்! உனக்குற்ற துன்பம் கண்டு நானும் துன்புற்றேன்! இந்நாட்டை ஆண்ட பாண்டியர் அனைவருமே பதியுடன் படராதவர். நெடுஞ்செழியனும் அத்தகையவனே! ஊழ்வினை காரணமாக உனக்கு இத்துன்பம் நேர்ந்தது, நின் கணவனின் பழம் பிறப்பைக் கூறுகிறேன் கேள்! கலிங்க நாட்டில் சிங்கபுரத்தில் இருந்த வசு என்பவனும், கபிலபுரத்தில் இருந்த குமரன் என்பவனும் தாய் உரிமை காரணமாகப் பகை கொண்டிருந்தனர். ஒருநாள் சங்கமன் என்னும் வணிகன் வாணிபத்தின் பொருட்டுச் சிங்கபுரத்துக் கடைவீதியில் சென்று கொண்டிருந்தான். அப்போது பரதன் என்பவன் அச்சங்கமனைப் பகைவனின் ஒற்றன் என்று கருதி மன்னனிடம் அழைத்துச் சென்று கொன்று விட்டான், கொலை செய்யப்பட்ட சங்கமன் மனைவி நீலி தாங்கொணாத் துயருடன் பதினான்கு நாட்கள் எங்கும் திரிந்து ஒரு மலை உச்சியை அடைந்து, ''எனக்குத் துன்பம் செய்தவர் மறுபிறப்பில் இத்தகைய துன்பத்தை அடைவாராக!'' எனச் சாபமிட்டுக் கீழே வீழ்ந்து மாண்டாள்! அந்தச் சாபமே இன்று கோவலனது உயிரைக் கவர்ந்தது. நீ பதினான்காம் நாளில் நின் கணவனை அடைவாய்!'' எனக் கூறி மறைந்தது. பின் துயரமே வடிவான கண்ணகி கொற்றவை கோயிலில் பொற்றொடி உடைத்து, மேற்கு நோக்கிச் சென்றாள்! திருச்செங்குன்றம் என்னும் மலைமீது ஒரு வேங்கை மரத்தடியில் செயலற்று நின்றாள்! மதுராபதித் தெய்வம் உரைத்தது போலப் பதினான்காம் நாள் பகல் பொழுது கழிந்ததும், அங்குத் தெய்வ வடிவுடன் வந்த கணவனுடன் வான ஊர்தி ஏறி வானவர் போற்ற வானகம் அடைந்தாள்!

### மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் பேசுதல்

சடையில் இளம்பிறை உடைய சென்னியள்; குவளை மலர் போலும் மைபூசிய கண்களை யுடையவள்; வெள்ளிய ஒளி பொருந்திய முகத்தை யுடையவள்; கடைவாய்ப் பல் வெளிப்பட்டுத் தோன்றுகிற பவளம் போன்ற சிவந்த வாயையுடையவள்; நிலவொளி, திகழும் முத்துப் போன்ற பற்களையுடையவள்; இடது பாகம் இருண்ட நீலநிறமாக இருப்பினும் வலது பாகம் பொன்நிறமாகத் திகழும் வடிவுடையவள்; இடக்கையில் பொன்னிறத் தாமரை மலரை ஏந்தியிருப்பினும் வலக்கையில் ஒளிவிடும் மழுப்படையை ஏந்தியிருப்பவள்; வலது காலில் வேலைப்பாடு மிக்க வீரக் கழலை அணிந்திருந்தாலும் இடது காலிலே ஒப்பற்ற சிலம்பு ஒலிக்கும் தன்மையுடையவள். இத்தகைய தோற்றமுடைய மதுராபதித் தெய்வம், கொற்கை நகரத் தலைவனும், குமரியாற்றுத் துறைக்கு உரிமையுடையவனும், இமய மலையைத் தனது ஆட்சியின் வட எல்லையாக உடையவனும் பொதிய மலையை உரிமையாக உடையவனுமாகிய பாண்டியனின் குலதெய்வமாகும். அது கண்ணகியின் பின்னே வந்து, நங்கையே, நான் உன்னிடம் சொல்ல ஒன்று உண்டு என வேண்டினாள்.

### கோவலனின் முற்பிறப்பு வரலாறு

**உம்மை வினைவந் துருத்த காலைச்**

**செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது**

**வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை**

**ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி**

**வானோர் தங்கள் வடிவின் அல்லதை**

**ஈனோர் வடிவிற் காண்டல் இல்லென**

**மதுரைமா தெய்வம் மாபத் தினிக்கு**

**விதிமுறை சொல்லி அழல்வீடு கொண்டபின்**

‘‘நிரைத்த வளையல்களையுடையவளே! கேட்பாயாக! நறுமணம் கமழும் பொழில்கள் சூழ்ந்த கலிங்கம் என்னும் நல்ல நாட்டில் உள்ள, தீம்புனல் கழனிகள் நிறைந்த சிங்கபுரத்திலும், மூங்கிற் காடுகளையுடைய கபிலபுரத்திலும் இருந்து அரசாள்கின்ற செல்வத்தையுடைய, ஒழுங்காகத் தொடுத்த மாலையணிந்து வேந்தர்களாக வசு என்பவனும் குமரன் என்பவனும் விளங்கினர். அவர்கள் கெடாத செல்வம் மிக்க சிறந்த குடியிலே பிறந்த தாயத்தராவர். அதன் காரணமாக ஒருவர் மீது ஒருவர் பகை கொண்டிருந்தனர். அவ்விருவர் தம் நாட்டுக்கும் இடைப்பட்ட ஆறு காவத தொலைவுடைய நிலத்தின்கண் எவ்விடத்தும் ஒருவரையொருவர் தாக்கி வீழ்த்தி வெற்றி பெறும் பொருட்டு இடையறாது போர் செய்து வந்தனர். எப்போதும் போர் நிகழுமிடம் ஆதலால் அங்குப் போவார் யாருமிலர்! ‘‘ஆயினும் பெறற்கரிய செல்வத்தை ஈட்டும் விருப்பத்துடன சிறந்த அணிகளைச் சுமந்து ஒற்றர்களைப் போல மாறுவேடம் பூண்டு, தன் காதலியுடன் கூடிக் கபிலபுரத்து வாணிகனான சங்கமன், அழியாத வளத்தை புடைய சிங்கபுரத்துக் கடைவீதியில் புகுந்து, தனது விலை மதிப்பற்ற அணிகளை விற்றுப் பொருள் ஈட்டினான். பசிய வளையல்களை உடையாய்! முற்பிறவியில் நின் கணவன் வெவ்விய ஆற்றல் மிக்க வசு என்னும் மன்னனுக்கு அரச வினை செய்பவனாக இருந்தான். அப்போது அவன் பெயர் பரதன்! அவன், சங்கமன் கொல்லா விரதத்தினின்றும் விலகியதால் வெறுப்புக் கொண்டு, “இவன் பகை நாட்டு ஒற்றன்!’’ என்று கூறி அச்சங்கமனைப் பற்றியிழுத்துக் கொண்டு போய் வெற்றிவேல் மன்னனுக்குக் காட்டிக் கொன்று விட்டான்! ‘‘கொலைக்களப்பட்ட சங்கமன் மனைவி நீலி ஓரிடத்திலும் நிலை கொள்ளாது கதறியழுதாள்; பதறித் துடித்தாள்!’’ மன்னனே! நீ என் கணவனைக் கொன்றது நீதியோ? வணிகர்களே, இது நீதியோ? பார் வாழ் மாந்தரே! உங்கள் மன்னன் செய்தது நீதியோ? “என்று கூறி மன்றங்களிலும் தெருக்களிலும் முறையிட்டுத் திரிந்தாள்.’’ பதினான்கு நாட்கள் சென்றபின் “கணவனை வணங்குதற்குரிய நாள் இது“ என்று கருதி அவனை வாழ்த்தி, வானத்தில் ஏறுதற்குரிய ஏணியைப் போன்ற மிக உயர்ந்த மலை உச்சியில் ஏறி நின்று கொலை செய்யப் பட்ட தன் கணவனை அடைதற்கு ஆயத்தமானாள். அந்நிலையில்“ எமக்கு இங்ஙனம்

மிகக் கொடிய துன்பத்தினைச் செய்தவர் எவ்வகையானும், தாமும் இத்தகைய துன்பத்தை அடைவாராக!" என்று சாபமிட்டுக் கீழே விழுந்து உயிர் துறந்தாள்! குற்றமற்ற அவள் இட்ட சாபத்தின் பயனாக இப்பிறவியில் நீங்கள் இக் கொடுந்துன்பமுற்றீர்!

**கண்ணகி மதுரையை விட்டு நீங்குதல்**

கண்ணகி, "என்னுள்ளத்தில் நிறைந்த கணவனைக் காணா முன்னர் அமரவும் மாட்டேன், நிற்கவும் செய்பேன்" என்று கூறியவாறு அலமந்து சென்று, கொற்றவை கோயிலின் முன்றிலில் தன் அழகிய வளையல்களை உடைத்தெறிந்தாள், பின் அத்தெய்வத்தை நோக்கி," இந்நகரில், கீழ்த்திசை வாயிலாக வரும்போது கணவனுடன் வந்தேன்; இப்போதோ கணவனை இழந்து, நகரின் நீங்கி மேற்றிசை வாயில் வழியாகத் தனியே செல்கிறேன்" என்று கூறி மதுரையை விட்டு வெளியேறினாள். அவ்வாறு மதுரையை நீங்கியவள் இரவென்றும் பகலென்றும் அறியாளாகி மயங்கிச் செயலற்று, ஒலிக்கும் நீர் மிகுந்த வையையின் ஒரு கரையிலே சென்றாள். துன்பம் மிகுந்து பதறி இறங்குதலால் பள்ளம் என்று பாராள்; கணவனிடம் உள்ளத்தை வைத்து ஏறுதலால் மேடுகள் என்றும் கருதாள். வழியில் இத்தகைய தன்மையைச் சிறிதும் பொருட்படுத்தாது மேலும் மேலும் நடந்து சென்றவள், கடலினது நடுவிடத்தைக் கிழித்து, கிரவுஞ்சம் என்னும் மலையினது நெஞ்சத்தைப் பிளந்து அங்கே அசுரரை வென்று அழித்த ஒளிவிடும் இலை வடிவான நீண்ட வேலினை ஏந்திய முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள குன்றத்தின்கண் அடி வைத்து ஏறினாள்.

**கண்ணகி, கணவனுடன் வானுலகு சென்றாள்!**

பூக்கள் நிறைந்த கொம்புகளையுடைய வேங்கை மரத்தின் கீழே நின்று எம் குலத் தெய்வமான வள்ளி போல்வீர்! யாரம்மா நீர்? என வினவிய குறவரை நோக்கி யான் ஒப்பற்ற தீவினையுடையேன்!" எனக் கூறி ஏங்கியிருந்தனள்! பதினான்கு நாள் கடந்த பின்னர் தான் கணவனைக் கண்டு தொழுதற்குரிய நாள் இது எனக் கருதிக் கோவலனை நினைந்து வாழ்த்தினாள். அப்போது இந்திரன் சுற்றத்தார் கோவலனுடன் வானுலகினின்றும் இறங்கி, அக் கற்புடையாள் நிற்குமிடம் வந்து வாடாத கற்பக

மலர்களை மழை போல் அவள் மீது பொழிந்து கை குவித்து வணங்கித் துதித்தனர். அந்நிலையில், மணம் கமழும் கூந்தலையுடைய கண்ணகி, மதுரையில் கொல்லப்பட்ட தன் கணவனான கோவலனுடன் வான ஊர்தியில் ஏறி விண்ணுலகு அடைந்தாள்.

## 24. குன்றக் குரவை

**காதைச்சுருக்கம்**

மதுரை மாநகரில் கணவனை இழந்த கண்ணகி, செய்வதறியாது மேற்கு நோக்கிச் சேர நாட்டை அடைந்து, திருச்செங்குன்றத்து வேங்கை மர நிழலில் நின்றபோது, குன்றக் குறவர்கள் அவளைக் கண்டு திகைப்பும் வியப்பும் எய்தி, "எம் குல தெய்வமான வள்ளி போல்வீர், யாரம்மா நீ என வினவினர். மதுராபதியின் கட்டுரையால் ஒருவாறு சீற்றம் தணிந்திருந்த கண்ணகி, தன் தீவினையால் மதுரை கெட்டதும், மன்னன் மாண்டதும், தான் கணவனை இழந்ததுமான நிகழ்ச்சிகளைக் கூறி வருந்தினாள். அப்போது வானவர், கோவலனுடன் வந்து தெய்வக் கற்பினளான கண்ணகியைப் போற்றிக் துதித்துக் கணவனை அவளுக்குக் காட்டினர். பின் கோவலனுடன் கண்ணகியை அழைத்துக் கொண்டு வானவூர்தியில் ஏறி விண்ணுலகு அடைந்தனர். இந்த வியத்தகு நிகழ்ச்சியைக் கண்ணால் கண்ட குன்றக் குறவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். "புதியதொரு தெய்வம் நம்மை வாழ்விக்க வந்தது! அதற்குக் கோயில் எடுப்போம்! விழாச் செய்வோம்!" எனக் கொண்டாடினர். இக் குன்றக் குரவையில் அமைந்துள்ள அகத்துறைப் பாடல்கள் எண்ணி எண்ணி இன்புறத்தக்கன.

**குறமகளிர் வினாவும் கண்ணகி விடையும்**

**"மணமதுரையோ டரசுகேடுற வல்வினை வந்துருத்தகாலை**

**கணவனையங் கிழந்துபோந்த கடுவினையேன் யானென்றாள்"**

தினைப் புனங்களில் குருவிகளை ஓட்டியும், கிளிகளை விரட்டியும், அருவியில் நீராடியும் சுனையில் மூழ்கியும் வருகிறோம் நாங்கள். அப்படி வரும் எங்கள் முன்னர், குன்றத்து வேங்கையின் நல்ல நிழலில் எங்கள் குலதெய்வமான வள்ளிபோல் விளங்குகின்றீர்! எம் உள்ளம் நடுங்கும் வண்ணம் இரு முலையிழந்து நிற்கின்றீர்!

நீவிர்தான் யாரோ?” எனக் கண்ணகியை குன்றக் குறமகளிர் திகைத்தும் வியந்தும் நயந்தும் வினவினர். அதுகேட்ட மாபெரும் பத்தினி சிறிதும் சினம் கொள்ளாமல், “மணம் மிக்க மதுரை மாநகருடன் அதன் அரசனும் அழியுமாறு பழைய தீவினை வந்தெய்தியபோது என் கணவனையும் அம்மதுரையிலேயே இழந்த தீவினையுடையேன் யான்!” என்றாள்.

**கண்ணகித் தெய்வம்**

கண்ணகி அவ்வாறு கூறக்கேட்ட குறமகளிர் அச்சமுற்று வளையல் அணிந்த தம் கைகளைக் குவித்து வணங்கினர். அப்போது தேவர்கள் மலர்மாரி பொழிந்து கண்ணகியைப் போற்றித் துதித்தனர். பின், கோவலனை அக்கற்புடை நங்கைக்குக் காட்டி, அவளையும் கணவனுடன் அழைத்துக்கொண்டு, அக்குறமகளிர் காணும் வண்ணம் விண்ணுலகமடைந்தனர். அக்காட்சியைக் கண்ட குறமகளிர் பெரிதும் வியப்புற்றனர். ”இவள் போலும் ஒரு பெரிய தெய்வம் நம் குலத்துக்கு வேறு இல்லை!” எனக் கூறி அனைவரையும் அக்கண்ணகியை வழிபடுமாறு வேண்டினர். ‘‘சிறுகுடியீரே! சிறுகுடியீரே“ இக் கற்புடையாளைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளுங்கள் “வெள்ளை நிறம் விளங்குகின்ற அருவிகளுடையது நெடுவேள் குன்றம். இதன் பக்கத்தே நறுமணம் கமழும் மலர்களையுடைய வேங்கை மரத்து நிழலில் இது தெய்வத்திற்கு ஒரு கோயிலைக் கட்டுங்கள். “வாயில் திசைத் தெய்வங்களைக் காவலாக அமையுங்கள்!. கொண்டகப் பறையினை அறையுங்கள். சிறு பறையை முழக்குங்கள். “கொம்புகளை வாயில் வைத்து ஊதுங்கள்! மணியை அசைத்து ஒலி எழுப்புங்கள் “குறிஞ்சிப்பா பாடுங்கள்! நறுமணப் புகையினை ஏந்துங்கள்! பூவால் அர்ச்சனை செய்யுங்கள்! இத் தெய்வத்தின் புகழ்பாடித் துதியுங்கள் “பல்வேறு மலர் கொண்டு தூவி வழிபடுங்கள்! ஒரு முலை இழந்த இந்நங்கையை நோக்கி, “இப்பெரிய மலை நிலம் ஓயாது வளம் பெருக அருள்வாய் தாயே!“ “என அனைவரும் வேண்டிக் கொள்ளுங்கள்!” என்றனர்.

## 25. காட்சிக் காதை

**காதைச்சுருக்கம்**

சேரன் செங்குட்டுவன் படைகள் சூழ்ந்து வர, தன் தேவி வேண்மாளுடன் மலை வளம் காணச் சென்று பேரியாற்றங்கரையில் தங்கியிருந்தான். குன்றக்குறவர்கள் அங்கே வந்து மலைபடு பொருள்களைக் காணிக்கையாகக் கொண்டு வந்து தம் வேந்தனுக்கு அளித்து, தாம் கண்ட தெய்வம் காட்சியை, கண்ணகி விமானத்தில் ஏறிச் சென்ற அதிசயத்தை அவனிடம் கூறினர். மன்னனின் அருகில் இருந்த தமிழ் ஆசான் சாத்தனார் கோவலன் கொலையுண்டது, கண்ணகி பாண்டியனைக் கண்டு வழக்குரைத்தது, பாண்டிமாதேவி உயிர் விட்டது போன்ற செய்திகளை விரிவாக எடுத்துரைத்தார். அது கேட்ட செங்குட்டுவன், உயிர் கொடுத்துப் பழி துடைத்துப் புகழ் படைத்த பாண்டியனின் பண்பினைப் பாராட்டினான்; நாடாள்வது எத்தகைய துன்பம் தருவது எனச் சுட்டிக் காட்டினான். அருகில் இருந்த சேரமாதேவி, ”பத்தினித் தெய்வத்தை வணங்கி வழிபடல் வேண்டும்” என்றாள். பொதிய மலையில் கல்கொண்டு காவிரியில் நீர்ப்படுத்தலைவிட இமய மலையில் கல் கொண்டு, என்கையில் நீர்ப்படுத்தலே வீரக் குடியில் பிறந்த தனக்கு ஏற்றதாகும் எனச் செங்குட்டுவன் முடிவு செய்தான். “பத்தினிக்குக் கல் கொள்ள இமயமலைக்கு எம் வேந்தன் புறப்படுகிறான்! வடதிசையில் உள்ள மன்னரெல்லாம் திறையுடன் வந்து வணங்குக! வணங்கீராயின் இல்லம் நீத்துத் துறவு பூண்டு காட்டுக்குச் செல்க” என வஞ்சி நகரில் பறை அறையப்பட்டது.

**சேரன் செங்குட்டுவன் மலை வளம் காணல்**

கடலையே வேலியாகவுடைய கடம்ப மரத்தை வெட்டி தேவர்களும் மருளும்படி வில் கொடியைப் பொறித்த சேரர் குடியில் தோன்றிய, வீர வாளினையுடைய செங்குட்டுவன், வெள்ளி மாடத்திலே தன் தேவியான வேண்மாளுடனும் இளங்கோவுடனும் அமர்ந்திருந்தான். அப்போது, இடையறாது ஒலிக்கும் முழவினைப் போன்று அருவிகள் ஒலிக்கின்றதும், மேகங்கள் கவிந்த சோலைகளைப் பெற்றதுமான மலையினைச் சென்று காண்போம்“ எனக்கூறி பசிய

வளையலை அணிந்த ஆய மகளிரும், நால்வகைச் சேனையும் ஒருசேரத் திரள, வஞ்சி நகரில் முன்வாயிலைக் கடந்து மலை வளம் காணச் செல்லலானான். வளமுள்ள மலர்களைக் கொண்ட பொழிலின்கண் தேவ மகளிருடனே விளையாடுதலை விரும்பிய ஆற்றல் மிகுந்த வேலினையுடைய இந்திரன், அழகான பூங்காவினையும், நீர் மிகுந்த ஆற்றுப் பரப்பினையும்' ஆற்றிடைக்குறையையும், இளமரச் சோலையினையும், அரங்குகளையும், மண்டபங்களையும், ஒரு நூற்று நாற்பது யோசனை அளவாக விரிந்து விளங்குமாறு ஒருசேரப் பரவ வைத்துத் தன் பெருமதங் கொண்ட களிற்றின் மேலேறிச் செல்வது போலச் செங்குட்டுவன் மலை வளம் காணச் சென்றான். சென்று, கோங்கமும், வேங்கையும், வயிரம் பாய்ந்த நல்ல சந்தன மரங்களும் ஆகியவற்றின் உதிர்ந்த மலர்களின் பரப்பினால் தன் புனலை மறைத்துக்கொண்டு திருமாலின் மார்பிலே விளங்கும் மரம் போன்று பெரிய மலையைக் குறுக்கிட்டுச் செல்லும் பேரியாற்றின் கரைக்கண், ஆறு குவித்த மணல் மேட்டினிடத்தே அவன், தன் பரிவாரங்களுடன் தங்கினான்.

**குறவர் கண்ணகி பற்றிக் கூறுதல்**

**கான வேங்கைக் கீழோர் காரிகை**

**தான்முலை இழந்து தனித்துய ரெய்தி**

**வானவர் போற்ற மன்னொடும் கூடி**

**வானவர் போற்ற வானகம் பெற்றனள்**

**குறவர்கள் மன்னனை நோக்கி,**

''ஏழு பிறப்பினும் நாங்கள் உமக்கு அடியவராவோம். நும் வெற்றி வாழ்வதாக'' எனப் போற்றிக் ''காட்டில் உள்ள வேங்கை மரத்தின்கீழ்க் காரிகை ஒருத்தி தனது ஒரு முலை இழந்து பெருந்துயர் எய்தினளாக இருக்க, அவள் தேவர்கள் எல்லாரும் போற்றுமாறு தன் கொழுநனொடு கூடி வானகம் சென்றாள், அவள் எந்நாட்டைச் சோந்தவளோ? எவருடைய மகளோ? நினது நாட்டில் நடந்த இவ்வாறான நிகழ்ச்சியை

இதற்கு முன் எம் நினைவால் கூட அறிந்திலேம்" என்று கூறிப் பல நூறாயிரம் ஆண்டுகள் வாழ்க என்று வாழ்த்தினர்.

**தண்டமிழ் ஆசான் சாத்தனாரின் விளக்கம்**

**காதலன் துன்பம் காணாது கழிந்த**

**மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து**

**அத்திறம் நிற்கநம் அகல்நா டடைந்தவிப்**

**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென**

நெடுவேல் மன்னனின் பெருஞ் சிறப்பைக் கண்டதனால் வியப்பையும், குறவர்கள் கொண்டு வந்த மலை வளத்தைக் கண்டதனால் உவப்பையும் பெற்ற சீத்தலைச் சாத்தனார் அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறலானார். "ஒள்ளிய தொடியணிந்தவளான கண்ணகிக்கு நிகழ்ந்ததையெல்லாம் திண்மையும் திறமையும் உடைய அரசனே" யான் சொல்லக் கேட்பாயாக" முற பிறப்பில் செய்த தீவினை, சிலம்பைக் காரணமாகக் கொண்டு அழகிய வளையலை அணிந்து கண்ணகியின் கணவனுக்கு இறப்பினை விளைவித்தது 'வெற்றியைத் தரும் படையையுடைய பாண்டியன் முன்னர்,' கண்ணகி எஞ்சிய சிலம்போடு சென்று வழக்காடி அச்சிலம்பினை வீசியெறிந்து உடைத்து உண்மையை உணர்த்தினாள்! மாபெரும் பத்தினியாகிய அவன் பாண்டியனின் தேவி முன்பு, "அழகிய கூந்தலை யுடையாய்! என் வஞ்சினத்தை அறிவாயாக! மதுரையை எரிப்பேன்!" என்று கூறி அவ்விடத்தை விட்டு நீங்கி, மதுரையைச் சுட்டெரித்தாள். அரியணையில் வீற்றிருந்த தென்னர் கோமான் விளங்கும் பூங்கொத்துக்களாலான மாலையணிந்த கண்ணகிக்கு நேர்ந்த துயரினைக் காணப் பொறாத வளாகி இங்ஙனம் மயங்கினானோ என்று நினைத்து அவனுடைய மலர்போன்ற திருவடிகளை வருடிய கோப்பெருந்தேவி, கண்ணகி கூறிய நெடுமொழிகளைக் கேளாதவளாய், கலக்கமும் கொள்ளாதவளாய், கணவன் துஞ்சியது அறிந்து துயரம் பொறாளாகி, அரசன் உயிர் சென்றவிடத்தே என் உயிர் செல்லக் கடவதாக!" என்று கூறித் தன்னுயிர் கொண்டு மன்னன் உயிரைத் தேடிப் போவாள் போல, அரசனுடன்

ஒருசேர உயிர் துறந்தாள், "வெற்றி வேந்தனான தென்னவனின் கொடுங்கோல் தன்மை இவ்வாறாக இருந்தது என நினைக்குக் கூறுவாள் போலக் கணவனையிழந்து தனிமையளாகிய கண்ணகி, தனது நாட்டிற்குச் செல்லாதவளாகி, நின் நாட்டிடத்தே வந்து சேர்ந்தாள் போலும்!" என்று நடந்தவற்றையெல்லாம் நிறைவாக கூறிய சாத்தனார், மேலும் "நினது வலம்படு கொற்றமானது ஊழிதோறும் வழிவழிச் சிறப்பதாக" என மன்னனை வாழ்த்தினார்.

**சேரன் செங்குட்டுவன் கண்ணகியை வழிபட எண்ணுதல்**

அது கேட்ட செங்குட்டுவனின் மாபெருந்தேவி, "பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவி தன் கணவனுடன் உயிர் துறந்து வானுலகம் சேர்ந்ததனால் அவள் அங்குப் பெரும் சிறப்பினைப் பெறுவாளாக! நாம் நம் அகல் நாடடைந்த இப்பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் போற்றித் துதித்தல் வேண்டும்" என்றாள். வெற்றிமாலையும் வெண்குடையும் கொண்ட செங்குட்டுவன் தன் தேவி கூறிய கருத்தை விருப்புடன் ஏற்று, மேல் நிகழ வேண்டுவன குறித்து அரசியல் அறிந்த அமைச்சரை நோக்கினன். அரசனது குறிப்புணர்ந்த அவர்கள்," அழியாத முறைமையையுடைய பொதிய மலையிலாயினும், நம் வில்லைத் தன் தலையிலே கொண்டுள்ள மிகப்பெரிய இமயத்திலாயினும் கல்லினை எடுத்து வந்தால் அது கடவுளாகும். பொதிய மலையிலிருந்து கொணர்வதைக் காவிரியாற்றிலும், இமயத்திலிருந்து கொணர்வதைக் கங்கையிலும் நீராட்டித் தூய்மை செய்வித்தல் மிகவும் தகுதியுடையதாகும்" என்று பத்தினிக் கடவுள் அமைப்பதற்கான கல் கால் கொள்ள வேண்டிய வகையைக் கூறினர்.

## 26. கால்கோட் காதை

**காதைச்சுருக்கம்**

சேர வேந்தர் முன்னரே கனகன், விசயன் என்ற இரு ஆரிய அரசர்கள் தமிழ் மன்னர்களை இகழ்ந்தனர் என்பதனை வடக்கே இருந்து வந்த முனிவர் மூலம் அறிந்திருந்தான். அவர்கள் செருக்கை அடக்கக் காலம் பார்த்திருந்தான்; "பத்தினித்

தெய்வத்தின் உருவம் அமைப்பதற்கான சிலையினை அந்தக் கனக, விசயர் முடித் தலையிலேற்றிக் கொணர்வேன்!" எனச் சூளுரைத்து வடபுலம் செல்லத் தயாரானான். வாளும் குடையும் நல்ல நேரத்தில் புறப்பட்டன. சேரன் நால்வகைப் படை புடை சூழ முதலில் நீலகிரி சென்றான். பின், அங்கிருந்து புறப்பட்டு வடநாடு சென்று, நூற்றுவர் கன்னர் உதவியால் கங்கையைக் கடந்து பகை நாட்டில் புகுந்தான்; கனக, விசயருக்கு உதவியாக வந்த மன்னர்களையெல்லாம் வென்று வாகை சூடினான், செங்குட்டுவன். அமைச்சரையும் சேனையையும் ஏவ இமயமலையில் பத்தினித் தெய்வத்திற்குரிய கல்லைத் தேர்ந்தெடுத்தான்.

**செங்குட்டுவன் வஞ்சினம்**

**வடதிசை மருங்கின் மன்னர்த முடித்தலைக்**

**கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது**

**வறிது மீளுமென் வாய்வா ளாகில்**

**செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்**

**பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்**

பெருமையுடன் விளங்கும் வெண் கொற்றக் குடையையுடைய சேரன் ஆற்றல் மிக்க சேனைத் தலைவர்களுக்கெல்லாம் கூறுவானானான்: இமயமலையினின்றும் இங்கு வந்த முனிவர்கள் இப்பொழுது அறிவித்த, பொருந்தாத வாழ்க்கையினுடைய வடபுல வேந்தர்களின் பழிச்சொல் எம்மிடத்துக் கிடப்பதாயின் அது சோழ, பாண்டியர் எம்மை இகழ்வதற்கு இடமாகி விடும். ஆதலின், வடநாட்டில் உள்ள அவ்வரசர்களின் முடித்தலை மீது, பத்தினிக் கடவுளுக்கு உருவம் எழுதுதற்குரிய கல்லை ஏற்றிக்கொண்டு வருவேன். அவ்வாறின்றி எனது வெற்றி வாள் வறிதே மீண்டு வருமாயின், நெருங்கிய வீரக்கழல் அணிந்த கொடிய போர்க் கோலத்தோடே சென்ற பகைவர்களை அச்சத்தால் நடுங்கச் செய்யாமல், பயன் மிகுந்த நாட்டில் உள்ள குடிமக்களை நடுங்கச் செய்யும் கொடுங்கோலன் எனக் குடி பழி தூற்றும் இழிதகைமை யுடையவன் ஆவேன்!" என்றான்.

சேரனது சூளுரையைக் கேட்ட ஆசான், அரசனை நோக்கி," அவ்வாரிய அரசர், ஆத்தி மாலையை முடியில் சூடிய சோழனையும், வேப்பம் பூமாலையை முடியில் குடிய பாண்டியனையும் இகழ்ந்தனரேயன்றி, இமய மலையை எல்லையாக உடைய நின்னை இகழவில்லை. அஞ்சியவர்க்கு அருள் புரியும் போர்த்திறன் மிக்க அண்ணலே! நினது வஞ்சின மொழி கேட்டு அஞ்சுவ தல்லாது எதிர்க்கும் மன்னரும் உளரோ? எனவே சினம் தணிக!" என்றான்.

**செங்குட்டுவன் வடநாடு அடைதல்**

பன்னிரு திங்களிலும் கோள்கள் நிற்கும் நிலையை ஆராய்ந்தறிந்து, திதி முதலிய ஐந்தின் கல்வியும் அமையப்பெற்ற நிமித்திகன் எழுந்து, வெந்திறல் வேந்தே! வாழ்க நின் கொற்றம் "பெரிய இந்நில உலகில் வாழும் மன்னர் எல்லாரும் அழகிய செந்தாமரை மலரையொத்த நினது சிவந்த திருவடிகளைப் பணிவதற்குரிய நற்பொழுதாகும் இக்காலம்" ஆதலால் இப்பொழுதே நீ குறித்த திசை நோக்கிப் போருக்கு எழுவாயாக!" என்றான். அது கேட்ட மன்னன், படைத் தலைவரை விளித்து நமது வாளையும் குடையையும் வடதிசை நோக்கிப் புறப்படுமாறு செய்வீராக!" எனக் கட்டளையிட்டான்.

நிலை பெற்ற கடல் சூழ்ந்த உலகை ஆள்பவனாகிய செங்குட்டுவன், பெருமை பொருந்திய நாட்டை ஆளும் அரசர்கள் தனது வெற்றியைப் பாராட்ட, தான் வீற்றிருந்த நீலகிரிப் பாடி வீட்டினின்றும் புறப்பட்டுச் சென்று, நூற்றுவர் கன்னரால் தரப்பெற்ற இடங்களில் ஏறிக் கங்கையாற்றைக் கடந்து அதன் வடகரையை அடைந்தான். அங்கு நூற்றுவர் கன்னர் சேர வேந்தனை எதிர்கொண்டு வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். பின், அவர் நாட்டையும் கடந்து, கடலை வேலியாக உடைய வட நாட்டைச் சென்றடைந்தான். அதன்பிறகு, பகை அரசர் நாட்டில் நுழைந்து பாடி வீடமைத்திருந்தான்.

**போர்க்களநிலை**

தடுத்தற்கரிய படைகளையுடைய மாவீரனான செங்குட்டுவன் முன்னர் உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன்,

சிவேதன் என்ற வடநாட்டு அரசர்கள் அனைவரும் ஒன்றுகூடி, “தென்னாட்டு அரசர்களின் ஆற்றலை யாம் காண்போம்“ என்று கனகவிசயருடன் கலந்த நட்பினராய் நிலவுலகம் சுருங்குமாறு பெரும் படையுடன் போரிட எதிர்த்து வந்தனர். அது கண்ட சேரவேந்தன், இரை தேடும் பொருட்டு வேட்டைக்கு எழுந்த சிங்கமானது, எதிரே வரும் யானைகளின் பெருங் கூட்டத்தைக் கண்டதும் மனம் மகிழ்ந்து அவ் யானைக் கூட்டத்தின்மேல் பாயும் தன்மைபோல, எதிர்த்துவரும் வேற்படையுடைய பகை மன்னர்களுடன் போர் புரியத் தொடங்கினான். அப்போது , ஞாயிற்றுக் கதிர்களை மறைத்த துகில் கொடிகளாகிய பந்தரின்கீழ், பதனிட்ட தோலால் போர்க்கப்பட்ட வளைந்த போர்ப்பறை, வெள்ளிய சங்கு, நீண்ட கொம்பு, இடிபோல் முழங்கும் போர்முரசு, இழும் என்னும் ஒலியுடைய கஞ்ச தாளம், பேரிடி போல் முழங்கி உயிர்களை நடுங்கச் செய்து உயிர்ப்பலி கொள்ளும் வீரமுரசு ஆகிய அனைத்தும் திசைகள் அதிரப் பேராரவார ஒலி எழுப்பின!. வில்லைத் தோளில் உடைய மறவர், போர் வேல் ஏந்திய வீரர், கரிய கிடுகினையுடைய வீரர், விரைந்து செல்லும் தேரினைச் செலுத்தும் வீரர், வெண்மையான கொம்புகளையுடைய யானை மீதேறி வரும் யானை மறவர், விரைந்து செல்லும் குதிரைமீது ஏறி வரும் குதிரை வீரர் என்னும் இவர்கள் எழுப்பிய ஒலி எங்கும் நிறைந்தது.

**கனக விசயர் சிறைப்படுதல்**

நாவை அடக்கியாளும் தன்மையின்றி, வளவிய தமிழ் மன்னரை இகழ்ந்த, கொல்லும் வேலேந்திய பெரிய கையையுடைய கனகனும் விசயனும் விரைந்து செல்லும் தேருடன் கூடிய அவர்களுடைய நண்பர் ஐம்பத்திருவரும் செங்குட்டுவன் சினத்திற்கு ஆளாகிச் சிறைப்பட்டனர் அந்நிலையில் பிறர் தப்பியோட முயன்றனர். சிலர் சடையும் காவியுடையும் சாம்பல் பூச்சும் உடையவராகிச் சைவத் துறவியர் கோலம் பூண்டு ஓடினர். சிலர் மணையும் மயில் பீலியும் உடையவராகிச் சமணத் துறவியர் கோலம் கொண்டு ஓடினர். சிலர் பண்ணிசைத்துப் பாடும் பாணர் வேடம் தாங்கி ஓடினர். சிலர் இசைக் கருவிகளைத் தோளில் இட்டுக் கூத்தர் வேடத்துடன் ஓடினர். இவ்வாறு பகைவர்கள் தாம் போருக்கு வந்தபோது ஏந்தி வந்த வாள் முதலிய

கருவிகள் அழிந்து ஒழிய, தாம் கற்ற வித்தைகளுக்கு ஏற்பக் கோலம் கொண்டு விரும்பிய இடங்களுக்கு ஓடினர். கழுத்தில் கயிற்றைக் கட்டிய யானைகளையுடைய பகை அரசர்கள் அச்சத்தால் நடுங்கும்படி மருப்பினையுடைய களிறுகளையே எருமைக் கடாக்களாகப் பட்டிவாளைத் தாற்றுக்கோளாகக் கொண்ட பகை வீரர்களாகிய வைக்கோலைக் களத்திலே கடாவிட்ட வாளேர் உழவனான செங்குட்டுவனின் போர்க்கள வெற்றியை வாழ்த்தி பிணம் தின்னும் பெண் பேய்கள், வீர வளையணிந்த மறவர் தம் நீண்ட கைகள் அசையுமாறு தூக்கி, முடியணிந்த அவர்தம் கருந்தலைகள் முற்படத் தோன்றுமாறு ஏந்திக் கொண்டு, கடல் வண்ணன் பண்டொரு நாள் கடலைக் கலக்கியபோது உண்டான போர்ச் சிறப்பையும், கடலை அகழியாக உடைய இலங்கையில் நிகழ்ந்த போரின் மேன்மையையும், பாண்டவர்க்காகத் தேரூர்ந்து நிகழ்த்திய பாரதப் போரின் வெற்றியையும் பாடி, இம்மூன்று போர்க்களப் பெருமை உடைய சேரன் செங்குட்டுவனின் தேர் முன் நின்று குரவைப் பாட்டுக்களால் அவனை வாழ்த்தி மீண்டும் வெற்றி பெற்று வாகை சூடிய அவன் தேர் இயங்கும் போதும் அத்தேர் பின் நின்று அப்பேய்கள் குரவைக் கூத்தாடும் இடமாகப் போர்க்களம் விளங்கியது.

**கண்ணகி சிலைக்குக் கல்**

வீர மன்னர்களின் முடியணிந்த தலையாகிய அடுப்பிலே, யானையின் தலையாகிய தாழியிலே தொடியணிந்த தோளாகிய துடுப்பினால் துழாவிச் சமைத்த ஊனாகிய சோற்றை, வீரம் பொருந்திய பேய் மடையன் பதம் அறிந்து பேய்களுக்கு ஊட்ட அச்சிறப்பான உணவினைப் பேய்கள் மகிழ்ந்து உண்டன. உண்டு, செங்கோல் பிறழாத வெற்றியால் மறக்களமாகிய போர்க் களத்தையும் எமக்கு உணவளித்து அறக்களமாக ஆக்கியவன் ஊழிதோறும் வாழ்க!” என வாழ்த்தின. இவ்வாறு வட நாட்டில் தனது மறக்கள வேள்வியைச் செய்து முடித்தான் வாளேந்திய செங்குட்டுவன். “வடதிசைக்கண் இமய மலைச்சாரலில் மறையினைப் பாதுகாக்கும் அந்தணரின் ஓம குண்டத்து முத்தி அவியாது பேணும் பெரிய அருள் வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டு காப்பீராக! என்று காற்றுப்போல் விரைந்து செல்லும் தூதரை அழைத்து

அவர்கள் மூலம் படையினர்க்கு அறிவித்தான். பின்னர் சேரன், வில்லவன் கோதை என்னும் அமைச்சனுடன், வெற்றியுடன் போரை முடித்த வேலேந்திய வீரர் பலரை ஏவி பொன்னிறமாக மின்னும் உச்சியையுடைய இமயமலையின்கண், ஒப்பற்ற பத்தினியான கண்ணகி கடவுளுக்குத் திருவுரு அமைக்க வேண்டிய கல்லைப் பெயர்த்து எடுத்துக் கொண்டான்.

## 27. நீர்ப்படைக் காதை

### காதைச்சுருக்கம்

இமயமலையிலிருந்து எடுத்த பத்தினிக் கடவுளுக்கான கல்லைக் கனக விசயர் தம் முடித்தலை ஏற்றிச் சென்று கங்கையில் நீர்ப்படை செய்தான் செங்குட்டுவன். பின், ஆரிய அரசர் அமைத்த பாடி வீட்டில் வீற்றிருந்தான். போரில் வீரம் காட்டி விண்ணுலகடைந்த வீரர் தம் உறவினர்க்குத் தக்க பரிசளித்துச் சிறப்புச்செய்தான். அப்போது, கங்கையாடி வந்த மாடலமறையோன் மூலம் கோவலன் மதுரையில் கொலையுண்ட நிகழ்ச்சியையும், அவனது கொலைச் செய்தி கேட்டுப் புகார் நகரில் இருந்த அவன் தந்தையும், கண்ணகி தந்தையும் துறவு மேற்கொண்டதையும், இருவர் தாயரும் இறந்ததையும் அறிந்தான். மேலும் பாண்டி நாட்டுச் செய்திகளையும் மாடலமறையோனிடம் கேட்டறிந்தான் . அம்மறையோனுக்கு, அவன் நிறையளவு பொன்னைத் தானம் செய்தான். பின் தன்னால் சிறைப்படுத்தப்பட்ட கனக, விசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு நீலன் முதலான கஞ்சுக மாக்களை ஏவினான், வினை முடித்த பெருமிதத்துடன் சேரன் செங்குட்டுவன் பெருந்தேவி மகிழ வஞ்சி மாநகர் வந்து சேர்ந்தான்.

### பத்தினிக் கல்லை நீராட்டுதல்

வீரக்கழல் அணிந்த சேரன் செங்குட்டுவன், வட திசையிலே பத்தினிக் கடவுளுக்கு உரிய கல்லை வரை செய்து கொண்ட பின் அதனை, பொருந்திய வேற்படையின் வலிமையால் போர்க்கெழுத்து, தோற்றோடிப் பிடிபட்ட கனக விசயரின் ஒளிமிக்க முடித் தலையில் ஏற்றினான்! அவ்வேந்தன் தென் திசையிலே உள்ள தமிழ் வீரர்களின் ஆற்றலை அறியாது போரிட்ட பிற ஆரிய அரசர்களின் உயிர்களையும்,

அவருடன் சேர்ந்து வந்த படை வீரர்களின் உயிர்களையும் கொலைத் தொழிலில் வல்ல கூற்றுவனது தொழில் மிகுமாறு உயிர்க் கூட்டத்தையுண்ட போர்கள் பதினெட்டு ஆண்டிலும், திங்களிலும், நாளிலும், நாழிகையிலும் முடிந்தன. பின்னர் செங்குட்டுவன் சினம் மிக்க வேலேந்திய படையுடன் கங்கைப் பேராற்றின் கரையை அடைந்து யாவரும் வணங்கும் பத்தினிக் கடவுளுக்குரிய கல்லை நீர்ப்படை நூல்களில் வல்லவரைக் கொண்டு முறைப்படி நீராட்டினான்.

**மாடலன் வருகை – மன்னனுடன் உரையாடல்**

**கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி**

**குடவர் கோவே நின்னாடு புகுந்து**

**வடதிசை மன்னர் மணிமுடி யேறினள்**

சேர மன்னன் வீற்றிருந்தபோது மாடலமறையோன் வந்து தோன்றி, ”எம் மன்னர் பெருமானே“ வாழ்வாயாக! கடல் சூழ்ந்த நில உலகை வென்று அடிப்படுத்தி ஆட்சி புரிந்த அரசனே, நீடு வாழ்வாயாக!” என வாழ்த்தினான். செங்குட்டுவன், ”நான்கு மறைகளையும் கற்றுத் தேர்ந்த அந்தணனே! பகை நாட்டரசர் பலரும் அறிந்திராத கைத்திறம் ஒன்றினை இங்கு நீ கூறினாய்! நீ கூறிய சொல்லின் பொருள்தான் யாதோ?” என வினவினான். மாடல மறையோனும் மன்னர்க்கு அதனை விளக்கினான். கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வந்தபின் நடந்த நிகழ்ச்சிகளை மட்டுமே சேரன் அறிவான். புகார் நகரச் செய்திகளை அவன் அறியான், இப்போது மாடலன் அவற்றைக் கூறுகிறான். சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கென்றே படைக்கப்பட்ட ஒப்பற்ற பாத்திரம் மாடல மறையோன்! கடற்கரைச் சோலையாகிய குளிர்ந்த அழகிய கடல் துறையில் கடல் விளையாட்டில் மாதவி பாடிய வரிப்பாடல் காரணமாக நேர்ந்த ஊடலால் முன்னை வினை பயனளிக்கத் தொடங்கியது. அதனால் கோவலன் மாதவியுடன் கூடாது அவளை விட்டுப் பிரிந்தான். தன் குலக் கொடியான கண்ணகியுடன். மாட மாளிகைகளையுடைய பழைய நகரமாகிய மதுரையை அடைந்தான். அந்நகரில் வேப்ப மாலை சூடிய பாண்டிய மன்னன், அழகிய

வானுலகத்தை அடைந்தான் . சேரநாட்டு வேந்தே! கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி, நின் நாட்டினுள் வந்து புகுந்து வானுலகு அடைந்ததன்றியும் வடதிசையுள்ள ஆரிய மன்னர் மணிமுடி மீதும் ஏறினாள் . இதுவே நான் கூறியதன் பொருள்!

**மாதரி உயிர் விடல்**

வெற்றி வேலது கையையுடைய மன்னர் மன்ன, "யான் இங்கு வந்ததன் காரணத்தைக் கேட்டருள்வாயாக! அகத்திய முனிவன் உறையும் பொதிய மலையை வலம் வந்து, குமரிப் பெருந்துறையில் நீராடி எனது ஊருக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தேன்! எனது ஊழ்வினைப் பயன் போலும்! புகழ் மிக்க சிறப்பினையுடைய வெற்றி வாய்ந்த வாளேந்திய பாண்டியனின் தலை நகராகிய மதுரையை அடைந்தேன். வெற்றிமிக்க படையுடைய பாண்டிய வேந்தனை ஒப்பற்ற சிலம்பினால் கண்ணகி வென்றாள் என்ற செய்தியைக் கேட்டதும் மன்றத்தே மாதரி தோன்றி, கோவலன் தீதிலன் "நம் வேந்தனே செங்கோன்மை தவறினான் "பாதுகாக்க வேண்டிய அடைக்கலப் பொருளை யான் இழந்து விட்டேன். அரசனின் வெண்கொற்றக் குடையும் செங்கோலும் இவ்வாறு தவறு செய்து விட்டனவோ? " எனக் கதறி அழுதவாறு இருள் செறிந்த நள்ளிரவில் எரிமுட்டி அதில் வீழ்ந்து மாண்டு போனாள்!".

**கவுந்தி உயிர் துறத்தல்**

தவச் சிறப்புடைய கவுந்தியடிகளின் சீற்றத்தை மிக உயர்ந்த செங்கோலினையுடைய பெருநில வேந்தனான பாண்டியனது பிரிந்த உயிர் ஒருவாறு தணித்தது. அப்பொறுமை மிக்க கவுந்தியடிகள், "இவர்கள் தீவினை என்னுடன் இவர்களைக் கொணர்ந்து பயனளித்ததோ? என் எண்ணி உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் துறந்தார்!

**கோவலன் பெற்றோர் நிலை**

பொன்னாலான தேரையுடைய பாண்டியனின் மதுரை தீப்பற்றி எரிந்த செய்தி அனைத்தையும் ஒன்றுவிடாமல் அறிந்து, இவற்றால் நேர்ந்த என் துயரத்தையெல்லாம்

ஒருவாறு பொறுத்துக்கொண்டு எனது ஊருக்கு மீண்டும் செல்லத் தொடங்கினேன். அப்படிச் செல்லும்போது சோழனின் பழம்பதியான புகாரை அடைந்து கோவலன் கண்ணகி ஆகியோரின் பெற்றோர்க்கு நான் அறிந்த மதுரைச் செய்தியைத் தெரிவித்தேன். கோவலன் தந்தையான மாசாத்துவான் தன் மைந்தனுக்கு நேர்ந்த பழியும், மரணமும், அதனால் கண்ணகி அடைத்த துன்பமும், செங்கோல் வேந்தனுக்கு உண்டான கேடும் கேட்டுக் கொடுந்துயர் அடைந்தான் தனது சிறந்த செல்வம் அனைத்தையும் மாபெரும் தானமாக அளித்துவிட்டு இல்லத்தின் நீங்கினான்; அந்நகரில் இந்திரனால் அமைக்கப்பட்ட ஏழு அரங்குகளையுடைய தவப்பள்ளி சென்றான். அங்கு இந்தப் பிறப்பே இறுதிப் பிறப்பாகுமாறு முயற்சி செய்யும் அந்தரசாரிகள் முந்நூற்றுவர் முன்னிலையில் தீட்சை ஏறுத் துறவு பூண்டான். அவ்வாறு துறந்து சென்ற மாசாத்துவானின் மனைவி, மகனுக்கு நேர்ந்த துயரைப் பொறுக்கலாற்றாது பெருந்துன்பம் அடைந்து ஏங்கித் தவித்து, இறந்தாள்!.

**கண்ணகி பெற்றோர் நிலை**

கண்ணகியின் தந்தையான மாநாய்கன் முனிவர் கோலத்துடன், தலை சிறந்த தவத்துடன் கூடிய ஆசீவகர் முன்னர், புண்ணியத்திற்குரிய தானம் செய்து அவர் தம் துறவற நெறியை மேற் கொண்டார்! தானம் புரிந்து தவநெறியை மேற்கொண்ட அம் மாநாய்களின் மனைவியான கண்ணகியின் தாய் வாழ்நாளைச் சிறிது சிறிதாக விடும் தனது நல்லுயிரினை அப்போதே நீத்தாள்!

**மாதவி துறவு**

கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த துயரத்தைக் கேட்ட மாதவி மனம் உடைந்தாள்! தன் தாயான சித்திராபதியை நோக்கி “நான் இனி நன்னெறியாகிய துறவறத்தில் செல்லத் துணிந்தேன்! மணிமேகலையை மாபெருந்துன்பம் தருகின்ற பொல்லாத கணிகையர் கோலத்தினளாகச் செய்யாதொழிக! “என்று கூறி, தான் அணிந்திருந்த தலைமாலையைக் கூந்தலுடன் ஒருசேரக் களைத்தெறிந்து விட்டுப் புண்ணியம் தரும் தானம் புரிந்து துறவறம் மேற்கொண்டாள்.

**சேரன் செங்குட்டுவன் வஞ்சியடைதல்**

அமுத மொழி பேசும் மகளிர் இனிய நெய்தல் பண்ணைப் பாடினர். அந்த நெய்தல் முதலான பல்திணைப் பாடல்களையும், பிரிவாற்றாமையால் உறங்காதிருக்கும் சேரமாதேவி கேட்டு மகிழ்ந்திருந்தாள். இவ்வாறு நானிலப் பாடல்களையும் கேட்டு மகிழ்ச்சியால் பூரிப்படைந்த கோப்பெருந்தேவியின் கை வளையல்கள் செறிந்தன. வலம்புரிச் சங்குகள் வெற்றியைப் புலப்படுத்தி முழங்கின! மாலை அணிந்த வெண் கொற்றக்குடையின் கீழ், வாகை சூடிய முடியையுடையனவாய் விரைந்து வரும் பட்டத்து யானையின் பிடரியின் மீது அமர்ந்து பொலிவுடன் திகழும் சேர வேந்தன், யானைக் கூட்டத்துடன் தலை நகரமே திரண்டு வரவேற்க, வஞ்சி நகரத்துள் புகுந்தான்.

## 28. நடுகற் காதை

**காதைச்சுருக்கம்**

வஞ்சிக்குத் திரும்பிய செங்குட்டுவன் தன் தேவியுடன் அரண்மனை நிலா முற்றத்தைச் சார்ந்தான்; கூத்தச் சாக்கையன் நிகழ்த்திய கூத்தினைக் கண்டு களித்தான். பின் அரியணையில் வீற்றிருந்தான். அப்பொழுது நீலன் முதலானோர் வந்து வேந்தனைத் தொழுதனர். நீலன், ”ஆரிய அரசர்களைச் சோழநாடு கொண்டு சென்றபோது சோழன்,“ முனி வேடந்தாங்கிப் போர்க்களத்தினின்றும் தப்பிப் பிழைத்து ஓடிய மன்னர்களை வென்றது ஒரு வெற்றியாகுமா?’’ என்று வினவினான் என்றும், பின்னர், பாண்டிய நாடு சென்றபோது பாண்டியன், “தவ வேடம் தாங்கியவர் மீது கொண்ட சினம், ஒரு சினமா? என எள்ளி நகையாடினான் என்றும் கூறினான். அது கேட்ட சேர வேந்தனின் கண்கள் சினத்தால் சிவந்தன. அருகில் இருந்த மாடலன் எழுந்து, ‘‘அரசர் ஏறே! அடங்குக நின் சினம்! இளமை, யாக்கை, செல்வம் ஆகியவை நிலையானவை அல்ல! நின் ஆட்சிக் காலத்தில் இதுவரை நீ ஆற்றிய மறக்கள கேள்வியைக் கைவிடுக! இனி அறக்கள கேள்வி செய்க!” என அறிவுரை கூறினான். மன்னன் மனம் மாறினான். ஆரிய அரசரை அந்தச் சிறையினின்றும் விடுதலை செய்தான். ”குடிமக்களிடமிருந்து வரி வாங்க வேண்டாம் ” என கட்டளையிட்டான்.

கண்ணகிக்குக் கோயில் கட்டினான். அதில் சிலையைப் பிரதிஷ்டை செய்தான். பல நாட்டு மன்னர்களும் அப்பத்தினிக் கடவுளைத் தொழுது வணங்கினர். பத்தினி வழிபாடு வெளி நாட்டிலும் பரவியது.

**செங்குட்டுவன் தன் தேவியைச் சந்தித்தல்**

ஒலி கடல் சூழ்ந்த பயன் பொருத்திய இப்பெரிய உலகத்தின் நடுவிலே நின்று உயர்ந்த நீண்ட உச்சியையுடைய மேருமலை போல, கொடி கட்டிய மதில் சூழ்ந்த பழம்பதியான வஞ்சி மாநகரின் இடையே நின்று பார்த்த பொன் மாளிகையில் மணிகளால் அழகு செய்யப் பெற்ற நிலா முற்றத்திலிருந்து திங்களின் அழகைக் காண செங்குட்டுவளின் பட்டத்தரசியான வேண்மாள் என்றும் மங்கலத்தன்மை பொருந்திய கோப்பெருந்தேவி அங்கு வந்தாள். அவள் வரும்போது, ஒளி வீசும் வளையல் அணிந்த மகளிர் அத்தேவிக்குப் பல்லாண்டு வாழ்த்துக் கூறி ஏந்திய விளக்குகள் ஒரு பக்கம் விளங்கின; வளைந்த தண்டினையுடைய யாழோசையும், இசை இன்பம் மிகுந்த பாடல்களும் ஒரு பக்கம் மிகுந்தன கத்தூரிக் குழம்பும் தொய்யில் எழுதுதற்குரிய வெள்ளிய சந்தனமும் ஆகிய இவற்றைக் கூனரும் குள்ளரும் ஒரு பக்கம் ஏந்தி நின்றனர். வண்ணங்களையும், சுண்ணங்களையும், மலர் மாலைகளையும் பெண் தன்மை மிக்க பேடியர் ஒரு பக்கம் சுமந்து நின்றனர்; பூவும், நறுமணப்புகையும், விரும்பும் மணப் பொருளும் அன்னத் தூவியால் அமைந்த படுக்கையை ஒரு பக்கம் சூழ்ந்திருந்தன, கண்ணாடியும், ஆடையும், அணிகலனும் ஆகியவற்றைக் கையில் கொண்டு பணி மகளிர் ஒரு பக்கம் அழகுடன் நின்றனர். அங்ஙனம் பலர் சூழ வந்த பெருந்தேவியுடன், அழகிய மணிகள் பதித்த அந்த நிலா முற்றத்தில், கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆளும் செங்குட்டுவன் தானும் அமர்ந்தான். பறையூரிலிருந்து வந்த கூத்தச் சாக்கையன் என்னும் கலைஞன் செங்குட்டுவன் முன் ஆடினான். அந்த ஆட்டத்தைக் கண்டு மகிழ்வுற்றான் வேந்தன். அச் சாக்கையன் தன்னைப் போற்றிப் புகழ்ந்து நீங்கிய பின் பெரிய நிலவுலகை ஆளும் சேரன், அரசவை கூடும்" அத்தாணி மண்டபத்தை அடைந்தான்.

**நீலன் முதலானோர் வருகை**

நீலனைத் தலைவனாகக் கொண்ட கஞ்சுக மாக்கள் திரும்பி வந்தனர். நான்மறை வல்ல மாடல மறையோனும் அவர்களுடன் வந்தான். அவர்கள் தம் வருகையை வாயில் காப்போர் வாயிலாக அரசனுக்குத் தெரிவித்தனர். அனுமதி பெற்று அரண்மனைப் பணியாளருடன் உள்ளே சென்று வேந்தனை வணங்கி வாழ்த்தினர். பின், நீலன் கூறலுற்றான். தும்பை சூடிய கொடுமையான போரில் வல்ல, வீரக்கழல் புனைந்த அரசே! முதலில் தாங்கள் சோழனது பழைய நகரத்தை அடைந்தோம். போர்க்களத்தில் தோற்றோடிய கனக விசயருடனே அரசனுடைய பணியாளர் வழிவிடச் சென்று, அம்மன்னனின் அழகிய திருவடிகளை வணங்கிச் செய்தி அறிவித்தோம்! அது கேட்டு, பெரிய போர்க்களத்தில் மிக்க வீரத்துடன் தாம் கொணர்ந்த வாளையும் குடையையும் போட்டு விட்டுச் சாதலுக்கு அஞ்சித் தவக்கோலம் கொண்டு தப்பி ஓடியவரைக் கைப் பற்றி வருதல் வெற்றி அன்று!" என்று தன் தேர்ப்படைத் தலைவரிடம் கூறி நகைத்தான், வில்லையும் ஆத்தி மாலையையும் உடைய சோழன்! அறநெறி போற்றும் செங்கோல் வேந்தே! பிறகு நாங்கள் சோழ நாட்டினின்றும் நீங்கி, உயர்ந்த சிறப்பு பினையுடைய மதுரை சென்று கனக விசயருடன் பாண்டிய வேந்தனைக் கண்டோம் . இப்படித் தப்பி ஓடிச் சென்றவர் மீது கொடு அமல் சீற்றம் கொண்டு நம் மன்னன் பெற்ற வெற்றி புதுமையுடையதாகும் "என்று கூறி அவ் வெற்றிவேற் செழியனும் நகைத்தான்" என அம்மன்னர் இருவரும் கூறியவற்றை யெல்லாம் நீலன் சொல்லி முடித்தான்.

**மாடலன் அறிவுரை**

**வானவர் போற்றும் வழிநினக் களிக்கும்**

**நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்**

**அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய**

**பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்**

**நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே**

**கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்**

**இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்**

**முதுநீர் உலகில் முழுவது மில்லை**

அந்த இழிமொழிகளைக் கேட்ட செங்குட்டுவனின் தாமரை மலர் போலும் சிவந்த கண்கள் மேலும் தீயெனச் சிவந்தன. அவன் சினம் கொண்டு நகைத்தான். அப்போது, மிகுந்த நாற் கேள்வியுடைய மாடலன் எழுந்து நின்று, ‘‘மன்னர் மன்ன! நின் வெற்றி வாழ்வதாக! நீ நீடு வாழ்க” என வாழ்த்திக் கூறலுற்றான் மிளகுக் கொடி வளரும் மலையிலே உறங்கும் யானையையும், சிறிய கொத்தாகப நெய்தல் பூக்களையும் உடைய வியலுரை அழித்து நீ வெற்றி பெற்றாய்! பின்னர், அத்திமாலை சூடிய ஒன்பது சோழ அரசர்களையும் ஒருசேர நேரி வாயில் என்னுமிடத்தில் நிலைபெற்ற போரில் வெற்றி பெற்றாய்! பின்னர், பெரிய தேர்ப் படையுடன் சென்று இடும்பில் என்னும் ஊர்ப்புறத்தே தங்கியிருந்து, கொடும் போர் புரிந்து பகைவரை வெற்றி பெற்றாய்! பின்னர் , பரந்த கடலிலே மரக்கலத்தைச் செலுத்தி, எதிர்த்த அரிய அரசரை, விரைந்து செல்லும் நீரையுடைய கங்கைப் பேராற்றின் கரையிலே வெற்றி பெற்றாய்!” இவ்வாறு புகழ் மிக்க வாகை மாலை அணிந்த பெரும் படையுடைய வேந்தனே! உயர்ந்த சான்றோர்க்கு ஒப்ப மெய்ப் பொருள் உணர்ந்த அரசர்க்கு அரசே நின் சீற்றம் தணிவதாக! உலகம் அனைத்தையும் ஆளும் மன்னனே! நின் வாழ்நாட்கள் குளிர்ச்சி பொருந்திய பொருநையாற்றின் மணலினும் மிகுவனவாக! கடல் சூழ்ந்த இவ்வுலகினை ஆளும் அரசனே! நீ நீடுழி வாழ்வாயாக! என் சொற்களை இகழ்ந்து ஒதுக்காது கேட்டு அருள்வாயாக! என மாடலன் மேலும் தொடர்ந்தான். நீ நாடாளும் பொறுப்பினை ஏற்று, ஐம்பது ஆண்டுகள் உருண்டு ஓடி விட்டன “இன்னமும் நீ அறக்கள வேள்வி செய்யாது மறக்கள வேள்வியே செய்கின்றாய்“ சிறிது எண்ணிப் பார்! மன்னர்க்குரிய கடமைகளைக் குறைவில்லாமல் முடித்த, வாளேந்திய வெற்றியுடைய பனம் பூ மாலை சூடிய நின் முன்னோருள், கடலிடத்தே சென்று பகைவர் கடம்பினை வெட்டி வீழ்த்திய காவலன் இன்றில்லை! இமயமலையின் உச்சியிலே வில்லைப் பொறித்த வெற்றி மிக்க ஆற்றல் உடையவனும் இன்றில்லை !

நான்கு மறைகளில் வல்ல அந்தணன் பாடிய பாடல்களை ஏற்று, அவன் விரும்பியவாறு வேள்வி செய்தற்கு ஏற்ற செல்வத்தை மிகுதியாக அளித்து அவனைத் துறக்கத்திற்கு அனுப்பியவனும் இன்றில்லை! "நிலைபெற்ற உயிர்களைக் கொல்வதில் ஒரு வரையறையை மேற்கொள்வாயாக!" எனக் கூற்றுவனுக்கே ஆணையிட்ட ஆற்றல் மிக்க வேந்தனும் இன்றில்லை" கொடிய சொற்களையுடைய யவனரது வளமிக்க நாட்டினை வென்று ஆண்டு, இமயம்' வரை சென்று வாகை சூடியவனும் இன்றில்லை! மிகப் பெரும் படையுடன் சென்று பகைவர் மதிலை அழித்த ஆற்றல் மிக்க மன்னனும் இன்றில்லை. அச்சம் தருதற்குக் காரணமான அயிரை மலையில் இருந்த கொற்றவையை நீராட்டி வழிபட்டு ஒரு பகல் பொழுதில் மேற்குக் கடல் கிழக்குக் கடல் ஆகிய இரு கடலிலும் சென்று நீராடிய ஆற்றல் மிக்க மன்னனும் இன்றில்லை. இந்திரனுடைய அமராபதியினின்றும் சதுக்கப் பூதங்களை வஞ்சிக்குக் கொணர்ந்து, மது அருந்துதற்குரிய சோம யாகத்தினைச் செய்தவனும் இன்றில்லை. யாக்கை நிலையில்லை என்பதை உணர்வாய்.

**கண்ணகி கடவுள் மங்கலம்**

மதுரை மாநகரம் அழிவுறுமாறு, சினத்தால் கொடிய தீயைத் தனது கொங்கையின் மூலம் தோற்றுவித்து, பின் நமது நல்ல நாட்டினை அடைந்து செறிந்த கிளைகளையுடைய, பொன்போல் அழகுடன் புதிதாகத் தவிர்த்து மலர்ந்த வேங்கை மர நிழலில் தங்கிய கண்ணகி கடவுளுக்குக் கோயில் எடுப்போம்! எனவே, அறக்கள வேள்வி செய்த அந்தணரும் , நல்லாசிரியனும், சோதிடனும் சிறப்புடைய சிற்பியருடன் சென்று, தேவரும் விரும்பும் சிற்ப நூல் உணர்ந்த கம்மியரால் பகுதிப்பட வகுத்த பத்தினிக் கோயிலில் வானவர் உறையும் இமய மலையின் உச்சியில் உள்ள இறைவனை வழிபட்டு, செய்ய வேண்டிய அனைத்தும் செய்து முடிக்கப்பட்ட அத்தெய்வத் திருவடிவத்திற்கு, கைத்தொழில் வல்லார் செய்த சிறந்த அழகினையுடைய அணிகலன்கள் அனைத்தையும் அணிவித்து, மலர்தூவி வழிபட்டு, காவல் தெய்வங்களைக் கடை வாயிலில் நிறுத்தி, நாள்தோறும் பூசையும் விழாவும்

நடைபெற ஏற்பாடு செய்து பிரதிட்டை செய்க!" என்று ஏவினான், வடநாட்டு மள்ளரை வணங்கச் செய்த மன்னர்க்கு மன்னனான செங்குட்டுவன்.

## 29. வாழ்த்துக் காதை

**காதைச்சுருக்கம்**

செங்குட்டுவன், கண்ணகி கோயிலில் வீற்றிருந்து பிற நாட்டு மன்னர்கள் அளித்த திறையைப் பெற்றான். அப்போது, பூம்புகாரிலிருந்து புறப்பட்ட கண்ணகியின் செவிலித் தாயும் அடித் தோழியும், தேவந்திபும் மதுரையை அடைந்து மாதரி மகள் ஐயையை அழைத்துக் கொண்டு வஞ்சியில் உள்ள கண்ணகி கோயிலுக்கு வந்து சேர்ந்தனர். சேர வேந்தன் முன்னிலையில், கண்ணகிக்கும் தங்களுக்கும் உள்ள உறவைக் கூறி வாய்விட்டு அழுதனர்., பூம்புகாரில் கண்ணகி கோவலன் ஆகியோரின் தந்தையர் துறவு மேற்கொண்டதும், தாயார் இருவரும் இறந்ததும், மாதவி, மணிமேகலை ஆகிய இருவரது துறவும், மாதரி உயிர் நீதத்தும் ஆகிய செய்திகளைச் சொல்லி அரற்றினர் . கண்ணகி தெய்வ வடிவத்துடன் சேரன் செங்குட்டுவனுக்குக் காட்சியளித்தாள். கண்ணகி சேரனை வாழ்த்தினாள்.

**தேவந்தி முதலானோர் மதுரை மாநகர் செல்லல்**

கோவலன் தன் பழவினை உறுத்த குறுமகன் ஒருவனால் கொலையுண்ட நிலையில் மிக துயருற்ற கண்ணகி மதி போலும் முகத்தின் கண்களில் இருந்து சில நீர் துளி விழ, புழுதி படிந்த கருங்கூந்தல் அவிழ்ந்து முதுகை மறைக்க அறத்தினைப் பழித்துக் காவலனின் அரண்மனைக்கு வழக்குரைக்கச் சென்றாள். புகாரிலிருந்து கண்ணகியின் செவிலித் தாயும் தோழியாகிய தேவந்தியும் சேயிழையான கண்ணகியைக் காண்போம் என்று மதுரை மாநகர் புகுந்தனர். கண்ணகியால் மதுரையில் விளைந்த பூசலைக் கேட்டனர். மாதரியின் இல்லத்தை அடைந்தனர். அங்கிருந்து அவள் மகளான ஐயையோடு வைகை நதியின் கரையை ஒரு வழியாகக் கொண்டு நெடுவேள் குன்றத்தில் மேல் ஏறினர். பின் கண்ணகியின் கோயிலை அடைந்து அவளுக்கு விழா நிகழ்த்திய செங்குட்டுவனை கண்டு அவனுக்கு தன் நிலையைப் பற்றிக் கூறினர்.

**பலரும் அரற்றுதல்**

அழகு மிக்க மேன்மைத் தன்மை வாய்ந்த மாதவியை வெகுளாதவள் தன் அன்பு நிறைந்த கணவனது கையினைப் பிடித்துச் செல்லுதலை மீறாமல், குடம் புகுதல் இல்லாத கிணறுகளையுடைய கொடிய காட்டை அடைந்தாள். மிக நீண்ட கண்களையுடைய அக் கண்ணகிக்கு நான் செவிலித் தாயாவேன் என்றாள் காவற்பெண்டு. தண்ணிய பூம்புகாரில் தோன்றிய பாவைக்கு நான் செவிலித் தாயாவேன்! தன்னைப் பெற்றெடுத்த தாயிடமும் ஒரு சொல் சொல்லவில்லை! தனக்குச் செவிலியான என்னைப் பெற்ற தாயிடமும் ஒரு சொல் சொல்லவில்லை! என்னிடமும் ஒரு சொல் சொல்லவில்லை! கற்பாகிய கடமையையே தலையாய அறமாகக் கொண்டு தன் காதலன் பின்னே சென்ற, பொன் வளையல் அணிந்த இக்கண்ணகிக்குத் தோழி யான் கண்டீர் என்றாள் அடித்தோழி! பூம்புகார்ப் பாவைக்குத் தோழி நான் கண்டீர்! " முன் செய்த நல்ல தவம் இல்லாதேன் யானது கண்ட தீக் கனாவைக் கூறிய அந்நாளில் அதைப் பற்றிச் சிறிதும் ஆராய்ந்து பாராதொழிந்தேன்! ஐயோ! என்ன காரியம் செய்தேன்! செறிந்த கூந்தலையுடைய மங்கையே! நீ மதுரையில் செய்த கொங்கைப் பூசலைக் கேட்டபோது, நின் அன்னை உயிர் துறந்த செய்தியைக் கேட்டாயோ தோழி! நின் மாமி உயிர் துறந்த செய்தியையும் கேட்டாயோ தோழீ! என்றாள் தேவந்தி.

**கண்ணகிக் கடவுளின் நயவுரை**

**தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்**

**நன்விருந் தாயினான் நானவன் றன்மகள்**

அணிகளை உடைய மின்னல் கொடி போன்ற பெண் உருவம் வானில் தோன்றுகிறதே எனச் செங்குட்டுவன் வியந்தான். தென்னாட்டு வேந்தனான பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றம் இல்லாதவன். ஆதலால் அவன் இந்திரன் அரண்மனையில் நல்ல விருந்தினன் ஆயினன். நான் அப்பாண்டியன் மகளாவேன். வெற்றிவேல் ஏந்திய முருகனுடைய இக்குன்றில் வந்து எப்போதும் விளையாடுவேன்! மேலும் "செங்குட்டுவன் நீடு வாழ்க!" எனத் தன் தெய்வ மொழியால் வாழ்த்தி அருளினாள் கண்ணகி.

## 30. வரந்தரு காதை

**காதைச்சுருக்கம்**

தேவந்தி செங்குட்டுவனுக்கு மணிமேகலையின் துறவு வரலாற்றை உரைத்தாள். பின், அத்தேவந்தி சாத்தன் என்னும் தெய்வத்தின் ஆணைப்படி மாடலன், அங்கு வந்திருந்த சிறுமியர் மூவர்மீது கரக நீரைத் தெளித்தான். கண்ணகி நற்றாய், கோவலன் நற்றாய், மாதரி என்னும் முவரே அச் சிறுமியராகப் பிறந்த வரலாற்றை மாடலன் செங்குட்டுவனுக்கு எடுத்தியம்பினான். வேந்தன் பத்தினி வழிபாடு நாளும் நடைபெற தேவந்தியைப் பூசை செய்பவளாக அமர்த்தினான். பத்தினிக் கடவுளை மும்முறை வலம் வந்து பணிந்து வணங்கிப் போற்றினான். அப்பொழுது சிறை நீங்கிய கனக விசயரும், குடகக் கொங்கரும், மாளுவ மன்னனும், இலங்கை அரசனான கயவாகுவும், ‘‘எங்கள் நாட்டு வேள்வியிலும் வந்தருள்க!” என்று கண்ணகி தெய்வத்தை வேண்டினர்.” வரம் தந்தேன்” என்னும் ஒலி எழுந்தது . அது கேட்ட அனைவரும் வியப்புற்றனர். பின் செங்குட்டுவன் மாடலனுடன் வேள்விச் சாலைக்குச் சென்றான். இளங்கோவடிகள் பத்தினிக் கோயிலுக்குச் சென்றார். பத்தினித் தெய்வம் தேவந்திமேல் வெளிப்பட்டு அடிகளாரின் துறவு வரலாற்றை உரைத்தது. தன் வரலாற்றைக் கூறிய பேறு பெற்றமைக்கு அடிகளார் பெரிதும் மகிழ்ந்தார். இதனைக் கேட்கும் பேறு பெற்ற உலகோர் தீதின்றி வாழ்வாராக! என வாழ்த்தி அருளினார்.

**செங்குட்டுவன் வினா**

வடநாட்டு வேந்தர்களை வென்று பணியச் செய்த சேரர் பெருமானாகிய செங்குட்டுவன் கண்ணகியின் தெய்வ வடிவத்தைக் கண்ணாரக் கண்டு களித்தான். பின் , தேவந்தியை நன்கு நோக்கி, ‘‘நீ வாய் விட்டு அரற்றிய மணிமேகலை யார்? அவள் துறவு மேற்கொள்ளக் காரணம் யாது? இங்கு அவற்றை எனக்குக் கூறுவாயாக!” என்றான்.

**தேவந்தியின் விடை**

தேவந்தி, ‘‘வேந்தர் பெருமானே! நினது வெற்றி ஓங்குவதாக! நாடு வளம் தருவதாக!” என வாழ்த்தி, அழகிய மேகலை முதலானவற்றை அணிந்த தோழியரிடையே உயர்ந்து விளங்கிய மணிமேகலையின் மேலான துறவுபற்றி விரிவாகக் கூறலுற்றாள். கரிய ஈரிய நெய்ப்புடைய கூந்தலானது, கூறுபடுத்தலால் உண்டாகும் அழகுடன் ஐந்து வகையாகப் பகுக்கும் பருவத்தினை உற்றது! செவ்வரி படர்ந்த வளமான கடையினையுடைய கண்கள் கண்டாரைக் கவரும் தன்மையை அறிந்தன! ஆனால் அதனை அவள் அறியவில்லை! தம்முள் ஒத்து விளங்கும் இரு பவளத்துள்ளே ஒளி வீசும் முத்துக் கோவை போன்ற பற்கள் முதிராத அளவினவாயின! நெருங்கிய முலைகள் அடிபரந்து எழுந்தன! தழுவுதற்குரிய மார்பும் பரந்து அகன்றது! துவளும் இடை சிறுத்தது! அழகிய அல்குல் அகன்றது! இரு தொடைகளும் திரட்சியுற்றன! அழகு செய்தலையும் பொறாதவாறு விளங்கும் அவளது பாதங்கள் நெய்யில் தோய்த்த தளிரினைப் போன்றன! அவளுக்கு ஆடல் பயிற்றுவிக்கும் தலைக்கோல் ஆசான் முன் வராமையால் அவளை உயர்குடி மாக்கள் சிறந்த கணிகையாக ஏற்றுக் கொள்ளார். ஆதலால் இந்நிலையில் அவளைப் பற்றிய நின் கருத்து யாது!“ என மாதவியின் நற்றாய் சித்திராபதி, மாதவியை நோக்கி வினவினாள்,‘‘ தன் தாய் இவ்வாறு கூறக்கேட்ட மாதவி, இளமை அழகு மிகும் என் மகளே! மணிமேகலையே! இங்கே வருக! எனத் தன் மகளை அருகே அழைத்தாள்! உருவமில்லாதவனான காமன் தனது ஒப்பற்ற கரும்பு வில்லையும் மணம்மிகு மலர் அம்புகளையும் வறிய நிலத்திலே வீசியெறியுமாறு ஒழுங்கான மாலையைக் கூந்தலோடு களைந்து அவளைப் புத்தப்பள்ளியில் சேர்த்துத் துறவற நெறியை மேற்கொள்ளச் செய்தாள்! மணிமேகலை துறவு மேற்கொண்ட செய்தியைக் கேள்வியுற்ற சோழ வேந்தனும், புகார் நகரில் வாழும் மக்களும், உயர்ந்த மாணிக்கத்தை அழும் மிக்க கடலிலே இழந்தவர்களைப் போலப் பெருந்துன்பம் எய்தினர். மெய்ப்பொருளை உணர்த்தும் மொழிகளையே உரைக்கும் மாதவராகிய அறவணவடிகள், “மணிமேகலை தன்னுடைய துறவினை எமக்கு அறிவித்தாள்“ என அவளது அன்புமிக்க நல்லுரையை

அருளொடும் உரைத்தார். துறவு மேற்கொள்வதற்குரிய பருவம் இல்லாதபோதும் பசிய வளையலை அணிந்த மணிமேகலை, திருமகளும் விரும்பும் தனது பேரழகைத் துறந்தாள்! ஆதலால் அதனை நினைந்து நான் வாய்விட்டு அழுதேன்!" என்று தேவந்தி அரசனிடம் உரைத்தாள்.

**கண்ணகி தெய்வம் வரம் தரல்**

**எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்**

**நன்னாட் செய்த நாளணி வேள்வியில்**

**வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்**

**தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்**

அரிய சிறையினின்று விடுவிக்கப் பட்ட கனக விசயர் முதலான ஆரிய அரசரும், முன்னரே வஞ்சி மாநகரப் பெருஞ் சிறையில் கிடந்த பிறகும், குடக நாட்டுக் கொங்கரும், மாளுவ நாட்டு மன்னரும் கடல் சூழ் இலங்கை வேந்தனான கயவாகுவும் கண்ணகி தெய்வத்தைத் தொழுது போற்றினர்." இமயமலையை எல்லையாகக் கொண்ட இந்தச் சேரர் பெருமான் நினக்கு இந்நாளில் நிகழ்த்திய விழாவில் நீ எழுந்தருளியதைப் போல எங்கள் நாட்டில் நாங்கள் உனக்கு அமைக்க விருக்கும் திருக்கோயில் விழாக்களிலும் எழுந்தருள் வாயாக!" என வேண்டிக் கொண்டனர். அவ்வளவில் அங்ஙனமே வரம் தந்தேன்! " என வானிலே ஒரு குரல் எழுந்தது .

**இளங்கோவடிகள் அறவுரை**

கண்ணகி தெய்வத்தின் தன்மைகளை விளக்கிய தகுதி மிக்க நன்மொழிகளைக் கொண்ட இச் சிலப்பதிகாரத்தினை கேட்ட நல்லவர்களே! தீவினை காரணமாகப் பொருள் முதலானவற்றை இழக்க நேர்ந்த போதும் வருந்தாதீர். பிறர் தரும் துன்பத்திற்கும் கலங்காதீர் வருத்தமும் துன்பமும் ஆன்மாவுடன் தொடர்புடையனவல்ல எனக் கருதி அவற்றை விட்டொழியுங்கள். நான் எத்தனையோ தெய்வங்களைப் பற்றி இக் காப்பியத்தில் உரைத்துள்ளேன்! ஆயினும் உண்மைத் தெய்வத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்! அங்ஙனம் உண்மைத் தெய்வத்தை

உணர்ந்தோர் உரைகளைப் போற்றிப் பின்பற்றுங்கள்! பொய் கூற அஞ்சுங்கள்! புறங்கூறுதலை அகற்றுங்கள்! ஊன் உணவை விலக்குங்கள்! உயிர்களைக் கொலை செய்யாதீர்கள்! தானம் செய்யுங்கள்! பலவகையான நோன்புகளை, தவ நெறியை மேற்கொள்ளுங்கள்! பிறர் செய்த உதவியை மறவாதீர்கள்! தீயோர் நட்பை ஒதுக்குங்கள்! பொய்ச் சான்று கூறாதீர்கள்! உண்மை மொழியினை விட்டு நீங்காதீர்கள்! அறவோர் அவையினின்றும் அகலாது சேர்ந்திருங்கள்! தீவினையாளர் அவையினின்றும் தப்பி நீங்குங்கள்! பிறர் மனைவியை விரும்புதலை அஞ்சுங்கள்! துன்புற்ற உயிர்களைப் பாதுகாத்து உதவுங்கள்! இல்லறத்தைப் போற்றுங்கள்! பாவச் செயல்களைப் போக்குங்கள்! கள்ளும், களவும், காமமும், பொய்யும், பயனற்ற பேச்சும் என்னும் இவற்றை ஒழிக்கும் முறையால் ஒழித்திடுங்கள்! இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையற்றன! ஒவ்வொருவரது ஆயுட் காலமும் வரையறை செய்யப்பட்டுள்ளது. அதனை நீட்டிக்க இயலாது! எனவே மரணத்தினின்றும் தப்ப முடியாது! அதலால் வாழ்நாளை வீழ் நாளாக்காமல் இறந்த பின் உயிர் செல்லும் மறுமை உலகிற்கு உற்ற துணையாகிய நல்லறத்தினை இம்மையிலேயே தேடிச் செய்யுங்கள்! செல்வ வளம் மிக்க இப்பெரிய உலகில் வாழும் மக்களே! மன வளத்துடன் வாழ்வீராக!”

**வினாக்கள்**

1. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் சூளுரையைக் கூறுக.
2. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுக.
3. தேவந்தியின் வரலாற்றைக் கூறுதல்.
4. சிலப்பதிகாரம் கதைச் சுருக்கத்தை எழுதுக.

# அலகு - 2

## மணிமேகலை, சீவகசிந்தாமணி

### மணிமேகலை

மணிமேகலை ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரமானது இல்லறத்தையும், மணிமேகலை காப்பியம் துறவறத்தையும் வலியுறுத்துவதால், இவை இரட்டைக் காப்பியங்கள் எனப்பட்டன.

### காப்பிய அமைப்பு

மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என்பது போலவே தொடர்ந்து வளர்ந்து முடிகிறது. மணிமேகலையின் பிறப்பையும், கோவலன் இறந்த நிலையில் அவள் இளநங்கையாய் இருத்தலையும் சிலப்பதிகாரம் சுட்டிச் செல்கிறது. அந்த இளநங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியம் பாடப்படுகிறது.

### பெயர்க் காரணம்

இக்காப்பியத்தின் கதை முழுதும் காப்பியத் தலைவி மணிமேகலையை மையமாகக் கொண்டு பாடப்பட்டதால், இந்நூலுக்கு மணிமேகலை எனப் பெயர் வந்தது.

### காப்பிய நோக்கம்

பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் மணிமேகலையாகும். மக்களிடையே பௌத்த சமய உணர்வு மேலோங்கவும், சமயக் கொள்கைகளைப் பரப்பிடவும், அதனை நடைமுறையில் பின்பற்றவும் எழுந்த சமயப் பிரச்சார விளக்க நூல் மணிமேகலை எனலாம்.

**காப்பியம் கூறும் கதை**

மாதவியின் மகள் மணிமேகலை. அழகும் இளமையும் உடைய மணிமேகலை இந்திர விழாவில் ஆட வருவாள் என்று பூம்புகார் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனால் மாதவியோ தானும் துறவு பூண்டு, தன் மகள் மணிமேகலையையும் துறவு நெறிப்படுத்துகிறாள். மணிமேகலையைக் காணும் உதயகுமரன் என்ற சோழ இளவரசன் அவள் அழகில் மயங்கிப் பின்தொடர்கிறான். மணிமேகலா தெய்வம் மணிமேகலையை உதயகுமரனிடமிருந்து காப்பாற்றுவதற்காக மணிபல்லவம் என்ற தீவிற்குத் தூக்கிச் சென்று விடுகிறது. அங்கு மணிமேகலை 'அமுதசுரபி' என்ற பாத்திரத்தைப் பெறுகிறாள். அள்ள அள்ளக் குறையாமல் சோறு வந்து கொண்டே இருக்கும் அதிசய பாத்திரம் அது. மணிமேகலை அந்தப் பாத்திரத்துடன் வந்து பூம்புகாரில் அறம் செய்கிறாள். உதயகுமரன் மணிமேகலையைத் தொடர்ந்து வருகிறான். அவனிடமிருந்து தப்ப மணிமேகலை 'காயசண்டிகை' என்ற கந்தருவப் பெண் வடிவம் கொள்கிறாள். இந்நிலையில் காய சண்டிகையின் கணவன் காஞ்சனன் என்பான் தன் மனைவியைத் தேடி வருகிறான். அவன் உதயகுமரன் மேல் சந்தேகம் கொண்டு அவனை வாளால் வெட்டி விடுகின்றான். உதயகுமரன் இறந்தவுடன் அவன் தாய் மணிமேகலைக்குக் கொடுமை பல செய்கிறாள். மணிமேகலை அவளைத் திருத்தி அறநெறியைப் பின்பற்றச் செய்கிறாள். மணிமேகலை நாடெங்கும் பௌத்த தருமத்தைப் பரப்புகிறாள். இதுவே மணிமேகலை நூல் கூறும் கதை.

மணிமேகலையில் இடம்பெற்றுள்ள பாத்திரமரபு கூறிய காதை பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

**பாத்திர மரபு கூறிய காதை**

**(மணிமேகலைக்கு அறவணர் அமுதசுரபி**

**என்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரற்குக்கொடுத்தவண்ணம் கூறிய பாட்டு)**

**"ஆங்குஅவற்கு ஒருநாள் அம்பலப் பீடிகைப்**

பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்:
மாரி நடுநாள் வல்இருள் மயக்கத்து
ஆரிடை உழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்
ஏற்றுஊண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆர்அஞர் எய்த,
கேள்இது மாதோ கெடுகநின் தீதுஎன
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
ஏடா அழியல் எழுந்துஇது கொள்ளாய்
நாடுவறங் கூரினும்இவ் ஓடுவறம் கூராது
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது என்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்” (1-16)

**விளக்கம்**

பூங்கொடி போன்ற நங்கையே! கலைமகள் கோயிலில் ஆபுத்திரன் தங்கியிருந்த பொழுது ஒரு நாள் நடந்த நிகழ்ச்சியைக் கேட்பாயாக! இரவின் நடுச்சாமம்! அறிவை மயக்கும் காரிருள்! மழைச்சாரலாகப் பெய்துகொண்டிருந்தது. அந்நேரத்தில் நீண்ட வழியில் நடந்து வந்தமையால் சோர்வுற்றோர் அங்கே வந்தனர். கண் துயிலும் ஆபுத்திரனைப் புகழ்ந்தனர் வணங்கினர் எழுப்பினர் ‘வயிற்றை எரிக்கும் பெரும் பசியால் துடிக்கிறோம்’! என்றனர். ஆபுத்திரன் அவ்வழிப்போக்கருடைய பசித்துன்பத்தை

நீக்குவதற்கு வழி ஒன்றும் காணாதவனாய் மிக்க துயருற்றான். **அப்பொழுதுகலாதேவி** அவன் முன் தோன்றி, ஆபுத்திரா! கேள்! நீ வருந்தாதே! உன் துன்பம் அழிவதாக! நாடு முழுமையும் வறுமை ஏற்பட்டாலும் இவ்வரிய பாத்திரம் வறுமை அடையாது உணவு அளிக்கும் அழியா தன்மையுடையது! எழுந்து இதனை பெறுவாயாக! என்று கூறித் தன்னுடைய கையிலிருந்த பாத்திரத்தை அவன் கையில் அளித்தது.

**"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து**

**நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்**

**வானோர் தலைவி மண்ணோர் முதல்வி**

**ஏனோர் உற்ற இடர்களை வாய்எனத்**

**தான்தொழுது ஏத்தித் தலைவியை வணங்கி,**

**ஆங்கவர் பசிதீர்த்து அந்நாள் தொட்டு**

**வாங்குகை வருந்த மன்உயிர் ஓம்பலின்**

**மக்களும் மாவும் மரம்சேர் பறவையும்**

**தொக்குஉடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ**

**பழுமரத்து ஈண்டிய பறவையின் எழூஉம்**

**இமும்என் சும்மை இடைஇன்று ஒலிப்ப" (17-27)**

**விளக்கம்**

மனத்தில் உறைகின்ற தெய்வமே ! அழகிய கலை கோட்டத்தில் எழுந்தருளிய திருவிளக்கே! திருமகளே! வானவர்க்குத் தலைவியே! உலகில் வாழ்பவர்க்கு முதல்வியே! பிறர் உற்ற துயர் நீக்கும் அருளே! என்று பலவாறாகப் புகழ்ந்து சிந்தா தேவியை வணங்கினான். வழிப்போக்கருடைய பசியை அமுதசுரபியின் உதவியால் நீக்கினான். அந்த நாளிலிருந்து பசியால் வருந்துபவர்களுக்கு அவர்களுடைய கைகள் வருந்தும் அளவு உணவளித்து உயிர்களைப் பாதுகாக்கும் திருப்பணியைத் தொடங்கி

நடத்தி வந்தான். அதனால் எப்பொழுதும் ஆபுத்திரனைச் சுற்றி மக்கள் கூட்டமும், விலங்குகள் கூட்டமும், மரத்தில் வாழும் பறவைகள் கூட்டமும் சேர்ந்து சூழ்ந்திருக்கும். பழுத்த மரத்தில் கனி உண்ணும் பறவைகள் எழுப்பும் ஓசையை போல, இரப்போர் ஆபுத்திரனைச் சுற்றி சூழ்ந்து உணவு பெற்று மகிழ்ச்சி ஆரவார ஒலி ஒலித்தனர்.

கடல் சூழ்ந்த உலகில் ஆபுத்திரன் ஆற்றிய அறப்பணி விண்ணுலகில் இந்திரனின் வெண்ணிற கம்பளத்தை நடுங்கச் செய்தது. நிலவுலகில் பௌத்த சீலத்தைக் கடைப்பிடித்து கொடை, ஈகை, அறம் முதலியவற்றால் மேன்மையானோர் இருந்தாலும் அல்லது அத்தகு உயர்ந்தோருக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தாலும் இந்திரனுடைய இருக்கையாகிய வெள்ளை கம்பளம் நடுக்கமுறும். அக்குறிப்பறிந்து உலகில் தோன்றி அவர்களுக்கு இந்திரன் வரம் தருவான். அவ்வாறே வரம் அளிப்பதற்காகவே இந்திரன் தளர்ந்த நடையும், ஊன்றுதற்குப் பிடித்த கோலும், கூன் உடலும் உடைய ஒரு மறையோன் வடிவம் கொண்டு, ஆருயிர்க்கெல்லாம் தலைவனான ஆபுத்திரனின் முன்னர் தோன்றினான். 'நான் இந்திரன்! உன் எண்ணம் என்ன? அறிவதற்கே வந்தேன். உன்னுடைய கொடை அறத்தின் சிறந்த பயனைப் பெற்றுக் கொள்வாயாக' என்று இந்திரன் உரைத்தான்.

**"வெள்ளை மகன்போல் விலாஇற நக்குஈங்கு**

**எள்ளினன் போம்என்று எடுத்துஉரை செய்வோன்**

**ஈண்டுச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்**

**காண்தகு சிறப்பின்நும் கடவுளர் அல்லது**

**அறம்செய் மாக்கள் புறங்காத்து ஓம்புநர்**

**நல்தவம் செய்வோர் பற்றுஅற முயல்வோர்**

**யாவரும் இல்லாத் தேவர்நல் நாட்டுக்கு**

**இறைவன் ஆகிய பெருவிறல் வேந்தே**

**வருந்தி வந்தோர் அரும்பசி களைந்துஅவர்**

திருந்துமுகம் காட்டும்என் தெய்வக் கடிஞை

உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ

பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ

யாவைஈங்கு அளிப்பன தேவர்கோன் என்றலும்" (36-48)

**விளக்கம்**

இந்திரன் கூறியதைக் கேட்ட ஆபுத்திரன் பித்துபிடித்தவன் போல விலா வெடிக்குமாறு சிரித்தான். இந்திரனை எள்ளி நகையாடினான். "உம்முடைய உலகில் வாழும் கடவுளர் காண்பதற்குரிய சிறந்த அழகு உடையவர். ஆனால் அவர்கள் எல்லோரும் இவ்வுலகத்தில் ஆற்றிய நல்லறத்தின் பயனை அங்கே நுகர்பவர்கள். அவர்களைத் தவிர அறம் செய்யும் சான்றோர், உயிர்களைப் பாதுகாப்போர், நல்ல தவமியற்றுவோர், உலகப் பற்றுகளைத் துறப்பதற்கு முயற்சிப்போர் ஆகிய சிறந்தவர்கள் எவரும் தேவர் உலகத்தில் இல்லை. அந்த உலகத்திற்கு தலைவனானப் பெரும் வலிமையுடைய வேந்தனே! பசியால் வாடி வந்தவர்களுடைய பசி துன்பத்தை நீக்குவதால் இன்புற்ற அவர்களுடைய முக மலர்ச்சியை எனக்கு காட்டும் இந்த அட்சய பாத்திரத்தைக் காட்டிலும் உண்பன, உடுப்பன, மகளிர், நண்பர் ஆகியவற்றில் எதை அளிக்கப் போகிறாய் தேவர்கோனே! "என்று எடுத்துரைத்தான்.

"புரப்போன் பாத்திரம் பொருந்துஊண் சுரந்துஈங்கு

இரப்போர்க் காணாது ஏமாந் திருப்ப

நிரப்புஇன்று எய்திய நீள்நிலம் அடங்கலும்

பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென

ஆங்குஅவன் பொருட்டால் ஆயிரம் கண்ணோன்

ஓங்குஉயர் பெருஞ்சிறப்பு உலகோர்க்கு அளித்தலும்,

பன்னீ ராண்டு பாண்டிநல் நாடு

**மன்உயிர் மடிய மழைவளம் இழந்தது**

**வசித்தொழில் உதவ மாநிலம் கொழுப்பப்**

**பசிப்புஉயிர் அறியாப் பான்மைத்து ஆகலின்" (49-58)**

**விளக்கம்**

ஆபுத்திரன் தன்னை இகழ்ச்சியாகப் பழித்துரைத்ததை எண்ணி ஆயிரம் கண்களுடைய இந்திரன் வெகுண்டான். உலகில் எல்லா வளங்களும் ஓங்கி உயர்ந்து சிறக்க ஆணையிட்டான். உலகம் முழுமையும் வறுமை ஒழிந்தது. மேகங்கள் பொழியும் மழை நீரால் பல் வளங்களும் பெருகின. ஆபுத்திரனின் அட்சய கலனில் உணவு பொங்கி பொழிந்தது. ஆனால் சுரக்கும் உணவையளித்து இடுவதற்கு இரப்போர் இல்லை. அதனால் அவன் ஏமாற்றம் அடைந்து வருந்தினான். பன்னிரு ஆண்டுகாலம் உயிர்கள் மடியுமாறு பாண்டியநாடு மழைவளம் இழந்திருந்தது. இந்திரனின் ஏவலால் மேகங்கள் இடையறாது மழைபெய்ய நிலம் செழித்தது. உயிர்களெல்லாம் பசியின் தன்மையை அறியாத சிறப்பு எய்தின.

**"ஆர்உயிர் ஓம்புநன் அம்பலப் பீடிகை**

**ஊண்ஒலி அரவம் ஒடுங்கிய தாகி**

**விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்**

**நடவை மாக்களும் நகையொடு வைகி**

**வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்**

**முட்டா வாழ்க்கை முறைமைய தாக,**

**ஆபுத் திரன்தான் அம்பலம் நீங்கி**

**ஊர்ஊர் தோறும் உண்போர் வினாஅய்**

**யார்இவன் என்றே யாவரும் இகழ்ந்துஆங்கு**

**அருந்தே மாந்த ஆர்உயிர் முதல்வனை**

**இருந்தாய் நீயோ என்பார் இன்மையின்" (59-69)**

**விளக்கம்**

ஆருயிர்களைப் பாதுகாத்து வந்த அம்பலப் பீடிகையில் உணவு பெறுவோர், உண்போர் ஆகியோருடைய ஆரவார ஒலி ஒடுங்கியது. அங்கே காமுகரும், பரத்தரும், சுற்றம் விடுத்துத் திரிவோரும், வழிப்போக்கரும், தங்கி நகையாடுவதும், வட்டாடுவதும், சூதாடுவதும், வம்பளப்பதும் ஆகிய இழிதொழில் செய்வதற்குக் கூட்டமாகக் கூடினர். கீழ்மக்கள் தடையின்றி இழி செயல்களை நடத்துவது அம்பலத்தின் வாழ்க்கை முறைமை ஆகியது. எனவே ஆபுத்திரன் அம்பலத்தில் இருந்து நீங்கினான், ஊர் ஊராகச் சென்றான். உணவு உண்போர் யாரேனும் உளரோ? என்று வினவினான். யார் இந்த அறிவிலி? என்று அனைவரும் ஆபுத்திரனை இகழ்ந்தனர். பிறருக்கு உணவு கொடுத்து ஆதரிக்க விரும்பிய ஆபுத்திரனை நீவீர் இருக்கின்றீரோ? என்று நலம் விசாரிப்போர் ஒருவருமில்லை.

**"திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள**
**ஒருதனி வரூஉம் பெருமகன் போலத்**
**தானே தமியன் வருவோன் தன்முன்,**
**மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்**
**சாவக நல்நாட்டுத் தண்பெயல் மறுத்தலின்**
**ஊன்உயிர் மடிந்தது உரவோய் என்றலும்,**
**அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது**
**குமரி மூத்தஎன் பாத்திரம் ஏந்தி**
**அங்குஅந் நாட்டுப் புகுவதுஎன் கருத்துஎன**
**வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிக்" (70-79)**

**விளக்கம்**

தன்னுடைய பெருஞ்செல்வம் அனைத்தையும் கடல் கொள்ள, யாவற்றையும் இழந்து தனியே வரும் அரசன் போல, ஆபுத்திரன் தன்னந்தனியாக கடற்கரைக்கு வந்தான். கடலில் சென்று மீண்ட மரக்கலத்தில் இருந்து வந்தவர் சிலர், அவன் முன்னர் தோன்றி அவனை வணங்கினர். பெரியோனே! சாவக நாட்டில் மழை வளம் இல்லை, உயிர்கள் பல மடிந்தன என்று உரைத்தனர். இந்திரனின் ஆணையால் உணவு ஏற்பதை பெறாமல் என்னுடைய அமுதசுரபி பயன் இழந்தது. அதனை எடுத்துக்கொண்டு அச்சாவக நாட்டுக்குச் செல்வது என் கடமை என்று எண்ணி, மகிழ்ச்சியுடன் மரக்கலத்தில் செல்வோருடன் ஏறிச் சென்றான்.

**“கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்**

**மால்இதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்**

**தங்கியது ஒருநாள் தான்ஆங்கு இழிந்தனன்**

**இழிந்தோன் ஏறினன் என்றுஇதை எடுத்து**

**வழங்குநீர் வங்கம் வல்இருள் போதலும்,**

**வங்கம் போயபின் வருந்துதுயர் எய்தி**

**அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்**

**மன்உயிர் ஓம்பும்இம் மாபெரும் பாத்திரம்**

**என்உயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்**

**தவம்தீர் மருங்கில் தனித்துயர் உழந்தேன்**

**சுமந்துஎன் பாத்திரம் என்றனன் தொழுது” (80-90)**

**விளக்கம்**

நடுக் கடலில் புயல் எழுந்து வேகமாக வீசியது, கடல் பொங்கிக் கலங்கியது. மரக்கலத்தின் மீகாமன் மணிபல்லவத்தீவிடை மரக்கலத்தைச் செலுத்தி, அதனுடைய

பெரியபாயை இறக்கினான். மரக்கலம் ஒரு நாள் அங்கே தங்கியது. ஆபுத்திரன் அத்தீவில் இறங்கினான். இறங்கிய ஆபுத்திரன் மீண்டும் மரக்கலத்தில் ஏறி விட்டான் என நினைத்து மீகாமன் பெரியபாயை உயர்த்த, நள்ளிரவில் கடல் மரக்கலம் சென்றது. மரக்கலம் சென்ற பின்னர் ஆபுத்திரன் ஆறாத் துயர் அடைந்தான். இத்தீவில் உயிர் வாழ்வோர் எவருமில்லை. மண்ணுயிரைப் பாதுகாக்கும் இம்மாபெரும் பாத்திரத்தை அதன் பெருமைக்கு உரியவாறு பயன்படுத்தாது, வீணே என்னுடைய புல்லுயிரைக் காப்பதற்கு உடன்படேன். முன் செய்த தவத்தால் இப்பாத்திரத்தைப் பெற்றேன். பல்வினை ஓங்கும் நல்வினை என்னை விட்டு நீங்கியது. அதனால்தான் ஈடில்லாத் துன்பத்தில் வருந்துகிறேன். யாருமே இல்லாத இத்தீவில் பாத்திரத்தை வைத்து இருப்பதால் என்ன பயன்? என்று பலவாறாக எண்ணி வருந்தினான்.

**“கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சியின்**
**ஓர்யாண்டு ஒருநாள் தோன்றுஎன விடுவோன்**
**அருள்அறம் பூண்டுஆங்கு ஆர்உயிர் ஓம்புநர்**
**உளர்எனில் அவர்கைப் புகுவாய் என்றுஆங்கு**
**உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்ப்புழி,**
**அந்நாள் ஆங்குஅவன் தன்பால் சென்றே**
**என்உற் றனையோ என்றுயான் கேட்பத்**
**தன்உற் றனபல தான்எடுத்து உரைத்தனன்**
**குணதிசைத் தோன்றிக் கார்இருள் சீத்துக்**
**குடதிசைச் சென்ற ஞாயிறு போல**
**மணிபல் லவத்திடை மன்உடம்பு இட்டுத்**
**தணியா மன்உயிர் தாங்கும் கருத்தொடு**
**சாவகம் ஆளும் தலைத்தாள் வேந்தன்**

**ஆவயிற்று உதித்தனன் ஆங்குஅவன் தான்என்" (91-104).**

**விளக்கம்**

அப்பாத்திரத்தைத் தொழுது ஒவ்வோர் ஆண்டிலும் வைகாசித் திங்கள் தூய நிறைமதி நாளில் தோன்றுவாயாக! அப்பொழுது அருளும், அறமும் மேற்கொண்டு வாழும் நல்லோர் எவரேனும் இங்கு வருவாரேயானால், அவர் கையில் புகுவாயாக! என்று கூறி, அவன் உடலில் இருந்து உயிர் பிரியும் நாளில் அவனிடம் சென்ற நான் (அறவண அடிகள்) நீ உற்ற துன்பம் என்ன? என்று வினவினேன். தான் உற்ற துன்பங்கள் பலவற்றையும் எடுத்துக் கூறினான். கீழ்த்திசையில் தோன்றிய காரிருளை அழித்து மேலை திசையில் மறையும் கதிரவன் போல மண்ணுயிர்களைப் பாதுகாக்கும் எண்ணம் நீங்காதவனாய் ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் தன் உடலை விட்டுப் பிரிந்து சாவக நாட்டை ஆளும் பெருமுயற்சியுடைய அரசனுடைய பசு வயிற்றில் உதித்தான்.

## சீவக சிந்தாமணி

## விமலையார் இலம்பகம் - திருத்தக்கதேவர்

**முன்னுரை**

சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. விருத்தப்பாவால் ஆனது. இதற்கு மணநூல் என்னும் பெயர் உண்டு. சமண சமய கருத்துக்களை கூறும் நூலாகும்.

இந்நூல் 13 இலம்பகங்களையும் 3145 செய்யுட்களையும் கொண்டது. சந்த நயம், கற்பனைத் திறனும் கவி வளமும் கொண்டது. நாமகள், மண்மகள், முக்தி, காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை, கோவிந்தையார், பூமகள் போன்ற இலம்பகங்களைக் கொண்டது.

**நூலாசிரியர் குறிப்பு**

பெயர் : திருத்தக்கதேவர்.

நாடு : சோழநாடு

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

சிறப்பு : தமிழ் புலவர்களில் தலைமை சான்றவர். வீரமாமுனிவர் கவிஞருள் வேந்தர், ஜி.யு.போப்

இயற்றிய நூல் : நரிவிருத்தம்

**கதைச்சுருக்கம்**

ஏமாங்கத நாட்டின் மன்னன் சச்சந்தன். இவன் மனைவி விசயை. இம்மன்னனின் அமைச்சன் கட்டியங்காரன்.

விசயை மீது இருந்த அன்பால் சச்சந்தன் நாட்டை மறந்தான். அரச பொறுப்பை கட்டியங்காரனிடம் வழங்கினான். ஆனால் கட்டியங்காரன் நாட்டை ஆண்ட பேராசையால் மன்னனை கொல்லத் திட்டமிடுகிறான்.

கட்டியங்காரனின் சூழ்ச்சியை அறிந்த சச்சந்தன் நிறைமாத கர்ப்பிணியான விசயையை பறக்கும் மயிற்பொறியில் அனுப்புகிறான். கட்டியங்காரனால் சச்சந்தன் கொல்லப்படுகிறான்.

பின்பு விசயை இடுகாட்டில் சீவனைப் பெற்றெடுக்கிறாள். அவனை அங்கேயே விட்டு விடுமாறு கூறிய காளிதெய்வத்தின் கட்டளை ஏற்று குழந்தையை இடுகாட்டில் விட்டுவிட்டு அகன்று விடுகிறாள்.

கந்துக்கடன் என்பவனால் வளர்க்கப்பட்டு பின்னர் சீவகன் எட்டு பெண்களைமணப்பதையும் கட்டியங்காரனை பழி தீர்ப்பதையும் உரைப்பதே இந்நூலின் கதைச்சுருக்கமாகும்.

## பாடப்பகுதி

நம் பாடப்பகுதியாக சீவகன் விமலையை மணப்பதை உரைக்கும் 'விமலையார் இலம்பகம்' இடம்பெற்றுள்ளது.

## விமலையார் இலம்பகம் சுருக்கம்

தமது நாடான ஏமாங்கத நாட்டைக் காக்கும் பொருட்டு கனகமாலையைப் பிரிந்து சீவகன் தன் தாயைக் காண தண்டகாரணியம் சென்றான். அங்கு, தன் தாய் விசயையைக் கண்டு மகிழ்ச்சியுற்று வணங்கினான். விசயையும் தன் மகன் சீவகனைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். பின்னர் விசயை சீவகனிடம் நாட்டை மீட்பதற்குரிய வழிமுறைகளையும் நல்ல அறிவுரைகளையும் எடுத்துக் கூறினாள். அதோடு "உன் மாமன் கோவிந்தன் துணையைப் பெற்று பகைவன் கட்டியங்காரனை வெல்வாயாக" என்றுகட்டளையிட்டாள். உடனே சீவகனும் தன் தோழருடன் குதிரை ஏறி இராசமாபுரம் சென்றடைந்து அங்கு ஒரு சோலையில் தங்கியிருந்தான்.

மறுநாள் காலையில் சீவகன் இராசமாபுரத்து நகர வீதிகளில் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு சாகரதத்தன் என்னும் வணிகன் மகள் விமலை தன் தோழியருடன் பந்தாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது பந்து ஒன்று சீவகன் முன்னேவிழுந்தது. அதனை எடுத்த விமலை, சீவகனைக் கண்டாள். சீவகனும் அவளைக் கண்டான். இருவரும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர். சீவகன் கடையருகே வந்தவுடன் அதுவரை விலையாகாது கடையில் இருந்த பொருட்கள் எல்லாம் விற்றுவிட்டன. அதனைக் கண்ட சாகரதத்தன் சீவகனை அன்போடு வரவேற்று, "முன்பே ஒரு சோதிடன் உன் மகளுக்குரிய கணவன் உன் கடைக்கு வருவான் அவன் வந்ததும் உன் கடையில் தேங்கிக் கிடந்த பொருள்களெல்லாம் விற்று விடும் என்று அவன் கூறியபடியே நீ என் கடையருகே வந்து நின்றவுடன் பொருட்கள் எல்லாம் விற்றுத் தீர்ந்தன". அச்சோதிடன் கூறியவாறே நடந்துவிட்டது. என் மகள் விமலைக்கேற்ற பொருத்தமான கணவன் எனக் கூறி தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றான். ஒரு நல்ல நாளில் சாகரதத்தன் தன் மகள் விமலையை திருமணம் செய்து

கொடுத்தான். இருவரும் பெருமகிழ்ச்சியுற்றனர். பின் அவளைப் பிரிந்து தன் தோழர்களைக் காணச் சென்றான். இச்செய்திகளை விரிவாகக் காண்போம்.

**நந்தட்டன் நண்பனிடம் கூறுதல்**

**“முருகு கொப்புளிக்கும் கண்ணி**
**முறி மிடை படலை மாலைக்**
**குருதி கொப்புளிக்கும் வேலான்**
**கூந்தல் மா இவர்ந்து செல்ல**
**உருவ வெம் சிலையினாற்குத் தம்பி**
**இ∴து உரைக்கும் ஒண் பொன்**
**பருகு பைங் கழலினாருள்**
**பதுமுகன் கேட்க என்றே**

பல வகையான மலர் மாலையையும், கையில் இரத்தக் கறைப்படிந்த வழிந்தொழுகும் வேலினையும் உடைய சீவகன் குதிரை மீது ஏறிச் சென்றான். அழகிய கொடிய வில்லேந்திய சீவகனின் தம்பி நந்தட்டன் தோழர்களில் பதுமுகன் என்பவனை நோக்கி, இதனைக் கூறத் தொடங்கினான்.

**நந்தட்டன் சீவகனை புகழ்ந்து கூறுதல்**

மாசு படிந்திருந்த மாமணியாக சீவகனை தூய்மை செய்து இவ்வுலகம் உணருமாறு அதன் நல்லொளியை வெளிப்படச் செய்தீர்கள். அப்படிப்பட்ட மணியை மேலும் போற்றிப் பாதுகாத்தால், உலகம் நன்மை பெறும். அப்படி காக்காவிட்டால் திருமகள் சேரமாட்டாள். எனவே, மாமணியாகிய சீவகனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று நந்தட்டன் கூறினான்.

**விழு மணி மாசு மூழ்கிக் கிடந்தது இவ் உலகம் விற்பக்**
**கழுவினீர் பொதிந்து சிக்கக் கதிர் ஒளி மறையக் காப்பின்**

**தழுவினீர் உலகம் எல்லாம் தாமரை உறையும் செய்யாள்**

**வழுவினார் தம்மைப் புல்லாள் வாழ்க நும் கண்ணி மாதோ**

கூடா நட்பு சீவகன் தன் பிறப்புண்மையைப் பண்டே உணர்ந்திருந்தானாயினும் அவனும் இதுகாறும் மறைவாகவே அதனைப் போற்றி வந்தானாகலின், இப்போது நந்தட்டன் அனைவரும் உணர்ந்தமை கருதி விழுமணி மாசு மூழ்கிக்கிடந்தது இவ்வுலகம் விற்பக் கழுவினீர் என அவன்பிறப்பு வெளிப்பாட்டைத் தோழர் மேலதாக்கியே உரைக்கின்றான்.

**தொழுத தம் கையின் உள்ளும் துறு முடி அகத்தும் சோர**

**அழுத கண்ணீரின் உள்ளும் அணிகலத்து அகத்தும் மாய்ந்து**

**பழுது கண் அரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றாது**

**ஒழிக யார் கண்ணும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற்றாரே**

வணங்குகின்ற இரு கைகள், தலைமுடி, கண்ணீர், அணிகலன்கள் ஆகியவற்றிலும் கொல்லும் படைக்கருவிகள் மறைந்திருக்கும். இதனை ஆராய்ந்து அத்தகைய கூடாநட்பை விட்டொழிக்க வேண்டும். தீயவர்களை இனங்கண்டுக் கொண்டு இவர்களின் நட்பை கைவிட வேண்டும். மாறாக கூடா நட்பை கொண்டவர் இறப்பை எய்துவர்.

**உணவு, உடை ஆராய்தல்**

மேலும், அழகிய மலர்மாலை, சந்தனம், அணிகலன்கள், ஆடைகள் ஆகியவற்றை அன்னப்பறவை மற்றும் சக்கரவாகப் பறவையின் முன்னிலையில் காட்டி அவற்றின் துன்பம் நீக்கிய பிறகே அணிந்து கொள்ள வேண்டும். உண்ணும் உணவு, தண்ணீரையும் கூட கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்ந்த பின்னரே ஏற்றுக் கொள்க என்று கூறினான்.

**வண்ணப் பூமாலை சாந்தம் வால் அணி கலன்கள் ஆடை**

**கண் முகத்து உறுத்தித் தூய்மை கண்டலால் கொள்ள வேண்டா**

**அண்ணல் அம் புள்ளோடு எல்லா ஆயிரம் பேடைச் சேவல்**

**உண்ணு நீர் அமிழ்தம் காக்க ஊகமோடு ஆய்க என்றான்**

**அஞ்சனக் கோலின் ஆற்றா நாகம் ஓர் அருவிக் குன்றின்**

**குஞ்சரம் புலம்பி வீழக் கூர் நுதி எயிற்றில் கொல்லும்**

**பஞ்சியின் மெல்லிதேனும் பகை சிறிது என்ன வேண்டா**

**அஞ்சித் தற்காத்தல் வேண்டும் அரும் பொருளாக என்றான்**

மைக்குச்சி அளவுள்ள நாகப்பாம்பு, பெரிய யானையே அலறும்படி தன் நச்சுப்பற்களில் தீண்டி விடும். அதுபோல் பகை பஞ்சை விட மெல்லியதாக இருப்பினும் அதனைச் சிறியது என்று கருதக்கூடாது. அத்தகைய பகையை வெல்வதற்கு அரிய பொருளாக எண்ணித் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றான்.

### சீவகனிடம் இருக்க வேண்டிய முறை

**பொருந்தலால் பல்லி போன்றும் போற்றலால் தாயர் ஒத்தும்**

**அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமை போன்றும்**

**திருந்து வேல் தெவ்வர் போலத் தீது அற எறிந்தும் இன்ப**

**மருந்தினால் மனைவி ஒத்தும் மதலையைக் காமின் என்றான்**

சீவகனை நெருங்கி இருப்பதில் பல்லியைப் போலவும், போற்றிப் பாதுகாப்பதில் அன்னையைப் போலவும், முனிவர்கள் தம் ஒழுக்கத்தைக் காப்பது போல சீவகனைக் காத்தல் வேண்டும். ஐம்புலன்களை அடக்கி இருத்தலில் ஆமை போல இருக்க வேண்டும். துன்பம் நேர்ந்த போது அது தீர்வதற்கு பகைவரைப் போல் இடித்துக் கூற வேண்டும். உணவுகளை உண்ணச் செய்தலில் மனைவி போல இருக்க வேண்டும் என்று சீவகனைப் பாதுகாக்கும் முறை குறித்து நந்தட்டன் பதுமுகனிடம் கூறினான்.

**பூந் துகில் மாலை சாந்தம் புனை கலம் பஞ்ச வாசம்**

**ஆய்ந்து அளந்து இயற்றப்பட்ட அடிசில் நீர் இன்ன எல்லாம்**

மாந்தரின் மடங்கல் ஆற்றல் பதுமுகன் காக்க என்று ஆங்கு
ஏந்து பூண் மார்பன் ஏவ இன்னணம் இயற்றினானே

சிறு கண் யானையின் இனம் சேர்ந்து சேவகம் கொளத்
துறுகல் என்று உணர்கலாத் துள்ளி மந்தி மக
நறிய சந்தின் துணி நாற வெந்தனகள் கொண்டு
ஏறிய எள்கி மயிர்க் கவரிமா இரியுமே

புகழ் வரைச் சென்னி மேல் பூசையின் பெரியன
பவழமே அனையன பல் மயிரப் பேர் எலி
அகழும் இங்குலிகம் அஞ்சன வரைச் சொரிவன
கவழ யானையின் நுதல் தவழும் கச்சு ஒத்தவே

அண்ணல் அம் குன்றின் மேல் வருடை பாய்ந்து உழக்கலின்
ஒண் மணி பல உடைந்து ஒருங்கு அவை தூளியாய்
விண் உளு உண்டு என வீழும் மா நிலமிசைக்
கண் அகன் மரம் எலாம் கற்பகம் ஒத்தவே

மானிடம் பழுத்தன கிலுத்தம் மற்று அவற்று அயல்
பால் முரண் பயம்பிடைப் பனை மடிந்த அனையன
கானிடைப் பாந்தள் கண் படுப்பன துயில் எழ
ஊன் உடைப் பொன் முழை யாளி நின்று உலம்புமே

சாரல் அம் திமிசிடைச் சந்தனத் தழை வயின்
நீர தீம் பூ மரம் நிரந்த தக்கோலமும்
ஏர் இலவங்கமும் மின் கருப்பூரமும்
ஒரு நாவி கலந்து ஓசனை கமழுமே

மைந்தரைப் பார்ப்பன மா மகள் மாக் குழாம்
சந்தனம் மேய்வன தவழ் மதக் களிற்று இனம்
அந்தழைக் காடு எலாம் திளைப்ப ஆமான் இனம்
சிந்த வால் வெடிப்பன சிங்கம் எங்கும் உள

வருக்கையின் கனிதொறும் வானரம் பாய்ந்து உராய்ப்
பொருப்பு எலாம் பொன் கிடந்து ஒழுகி மேல் திருவில் வீழ்ந்து
ஒருக்கு உலாய் நிலமிசை மிளிர்வ ஒத்து ஒளிர் மணி
திருக் கிளர் ஒளி குலாய் வானகம் செகுக்குமே

வீழ் பனிப் பாறைகள் நெறி எலாம் வெவ் வெயில்
போழ்தலின் வெண்ணெய் போல் பொழிந்து மட்டு ஒழுகுவ
தாழ் முகில் சூழ் பொழில் சந்தனக் காற்று அசைந்து
ஆழ் துயர் செய்யும் அவ் அருவரைச் சாரலே

விசயை சீவகனிடம் உரைத்தது
“சேட்டிளம் பருதி மார்பில் சீவக சாமி யீரே
ஊட்டரக் குண்ட செந்தா மரையடி நோவ”

விசயை மன்னன் சச்சந்தனைப் போரிலே கைவிட்டேன். சுடுகாட்டில் உன்னையும் கைவிட்டு வந்த கொடியவளாகிய என்னைக் காணவும் வந்தாயே! பெருமை மிக்க சீவகனே! உன் கால்கள் வருந்தும்படியாக வந்த உன் அன்பு தான் என்னே! என்று மனம் நெகிழ்ந்து கூறினாள்.

**சீவகன் ஆறுதல் கூறுதல்**

**"கெடலருங் குரைய கொற்றம் கொட்பிறந் ததுவும் அன்றி"**

"கேடில்லாத புகழுடைய சச்சந்த மன்னன் கட்டியங்காரனால் அழியவே பிறந்தான். நீங்கள் வருத்த மடையவும், நண்பர்கள் துயர மடையவும் நான் கொடுத்த துன்பக் கடலில் துன்பப்பட வேண்டாம். இனி கவலையை விடுங்கள் என்று அன்னைக்கும் சீவகன் ஆறுதல் கூறினான்.

**விசயை மைந்தர்களுக்கும் தோழர்களுக்கும் அறிவுரை கூறுதல்**

மரவ நாகம் மணங்கமழ் சண்பகம் குரவம் கோங்கம் குடம்புரை காய்வழை" மரவம், நாகம், மணம் கமழ்கின்ற சண்பகம், கோங்கம், சுரபுன்னை முதலானமரங்கள் நிறைந்த மலர்ச்சோலையில் தனியே இருந்துக் கொண்டு இனி செய்ய வேண்டியவை இவை என்பதை விசயை சொல்லத் தொடங்கினாள்.

**நூல்வல்லோர் கூற்று**

பெரும் பொருளுடைய சிற்றரசர் மகளை மணந்து கொள்ளுதலும், மண் வலிமை மிக்க பேரரசர் மகளை மணந்து கொள்ளுதலும் தங்கள் முன்னோர்கள் நிலையை அடைய நினைக்கும் அரசர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிகளாகும் என்று நூல்வல்லோர் கூறுவர்.

**மன்னர்களின் செயல்**

**"நீதி யால் அறுத்து அந்நிதி ஈட்டுதல்**

**ஆதி யாய அரும்பகை நாட்டுதல்"**

குடிமக்களின் வருவாயில் ஆறில் ஒரு பங்கு ஈட்டுதல், பகையை மறக்காது நெஞ்சில் நிறுத்தி இருத்தல், முள்ளைக் கொண்டு முள்ளை எடுப்பது போல பகையாய் இருக்கும் இருவரை ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளச் செய்தல், பகைவரைப் பிரித்துத் தம்மிடம் சேர்த்துக் கொள்ளுதல் ஆகியவை மன்னர்கள் விரும்பிச் செய்யத் தக்க செயல்கள் ஆகும்.

**"ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்"**

ஒற்றரை வேறோர் ஒற்றரால் ஆராய்தல் வேண்டும். அறிவில் சிறந்த சான்றோர்களையும், அமைச்சர்களையும் பாதுகாத்தல் வேண்டும். உறவினர்களையும், நண்பர்களையும் தேவைக்கேற்ப பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். இவையே மன்னர்கள் மேற்கொள்ளவேண்டிய நெறிகளாகும்.

**பொருளால் செய்யக் கூடியவை**

**"வென்றி ஆக்கலும் மேதக வாக்கலும்**

**அன்றி யும் கல்வி யோடு அழகு ஆக்கலும்"**

வெற்றிகளை உண்டாக்குதலும், மேம்பாடு அடையச் செய்தலும், கல்வி, அழகு ஆகியவற்றை உண்டாக்குதலும், வலிமை குறைந்தவர்களை வலிமையுடையவர்களாக மாற்றுதலும் பொருளால் மட்டுமே செய்ய முடியும்.

பொன்னென்னும் செல்வத்தாலே போருக்குரிய படையை உண்டாக்கிக் கொள்ளமுடியும். அவ்வாறு உண்டாக்கிக் கொள்கின்ற படையால் பல நாடுகளை வெல்ல முடியும். அவ்வாறு கிடைக்கின்ற நாடுகளில் மேலும் பல பொருள்கள் கிடைக்கும். இத்தகைய பெரும் பொருள் கிடைத்தால் கிடைக்காதவை எவையும் இல்லை.

**"நிலத்தின் நீங்கி நிதியினும் தேய்ந்து நம்**

**குலத்தில் குன்றிய கொள்கையும் அல்ல தூம்"**

நாம் நம் நாட்டை இழந்து விட்டோம். செல்வமும் இன்றி குலப்பிறப்பிலும் தாழ்ந்த நிலையில் உள்ளோம். மேலும் இத்தாழ் நிலையைப் போக்கி வழிகாட்டச்கூடிய அமைச்சர்களும் இல்லை. சீவகனே! உன் கருத்து யாது? என விசயை கேட்க சீவகன் சொல்லத் தொடங்கினான்.

**சீவகன் விசயைக்கு ஆறுதல் கூறுதல்**

**"எரியொடு நிகர்க்கும் ஆற்றல் அடிக்குரல் சிங்கம் ஆங்கோர்**

**நரியொடு பொருவதென்றால் சூழ்ச்சி நற்றுணையோடு எண்ணம்"**

சிங்கம் ஒன்று நரியோடு போர் செய்வதாயின், சூழ்ச்சியும் துணையும் வேண்டும். கட்டியங்காரன் பாம்பு எனில் கருடன் நந்தட்டன் ஆவான். எனவே என்மேல் கவலைக் கொள்ளாதீர்கள்" என்று சீவகன் தன் தாய்க்கு ஆறுதல் கூறினான்.

**விசயை மேலும் அறிவுரை கூறுதல்**

பாம்பு கட்டியங்காரன் கருடன் நந்தட்டன் என்று சீவகன் கூறியதைக் கேட்ட விசயை நந்தட்டன் கருடனோ என்று வியந்து கூறினாள். பின் வலிமை மிக்க வைர தூண்போல விளங்கும் இந்த திரண்ட தோள்கள் கட்டியங்காரனிடம் அகப்பட்டுக் கொண்ட நாட்டை உனக்கு கைப்பற்றித் தராமல் போகுமோ என்று கூறினாள்.

**"இடத்தொடு பொழுது நாடி எவ்வினைக் கண்ணும்**

**மடப்படல் இன்றிச் சூழும் மதிவல்லார்க்கு அரிய துண்டோ"**

காட்டில் உள்ள ஒரு காகமே, பகற்பொழுதில் எண்ணற்ற கோட்டான்களை கொன்றுவிடும். அது போலவே ஒரு செயல் செய்வதற்கு ஏற்ற இடமும் காலமும் ஆராய்ந்து அறிந்து அஞ்சாதவராய் அறியாமையால் சிக்கிக் கொள்ளாமல், செயல் ஆற்றும் திறமை உடையவர்களுக்கு முடியாதது ஒன்றுமில்லை,

மெல்லிய இடையையும் அழகிய முகத்தையும் உடைய பெண்களைப் போலத்தடுமாறி இடமும், காலமும் அறிந்து ஒரு செயலை செய்யாதவர்கள் குகையில்

இருந்த சிங்கம் இடம் தெரியாமல் நரிகள் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றதைப் போன்று செய்வதறியாது திண்டாடுவார்கள்.

**சீவகன் இராசமாபுரத்துள் செல்லுதல்**

**“நாட்கடன் கழிந்தபின் நாம வேலினான்**

**வாட்கடி எழில் நகர் வண்மை காணிய”**

காலையில் அச்சம் தரத்தக்க வேலினையுடைய அழகுடைய இராசமாபுரத்தின் வளம் காணும் பொருட்டு பெண்கள் விரும்பக்கூடியதோர் வடிவத்துடன் விரைந்து சென்றான்.

**இராசமாபுரத்தின் செல்வச் சிறப்பு**

சீவகன் செல்லும்போது செம்பஞ்சுக்குழம்பாகிய சேற்றிலே வழுக்கி, ஊடலினால் மகளிர் வீசி எறிந்த அணிகலன்கள் நிலத்தில் சிதறிக் கிடக்கும். நறுமண மாலைகள் கால்களில் சிக்கித் தொடர்ந்து வரும் அப்படி செல்வச்சிறப்பில் இராசமாபுரம் உயர்ந்து காணப்பட்டது.

**“நிலத்துகு மாலைகால் தொடர்ந்து நீள் நகர்**

**செலக்குறை படாததோர் செல்வ மிக்கதே”**

**சீவகனைக் கண்ட மகளிர் நிலை**

**“மின்னின் நீள்கடம் பின்னெடு வேள்கொலோ!**

**மின்னும் ஐங்கணை வார்சிலை மைந்தனோ!”**

சீவகனைக் கண்ட மகளிர், இவன் கடம்ப மாலை அணிந்த முருகப் பெருமானோ? மலர் அம்புகளும் கரும்பு வில்லும் உடைய மன்மதனோ? யாரோ தெரியவில்லை? அறிந்தால் சொல்லுங்கள் என்று மகளிர் கூறி வருந்தினர்.

சீவகனைக் கண்ட பெண்களின் கண்கள் எல்லாம் உப்பங்கழியில் உள்ள மீனைக் கொத்திக் கொள்ள காத்திருக்கும் மீன்கொத்திப் பறவைபோல அவன் அழகை அள்ளிப் பருகலாயின.

**விமலை பந்தாடுதல்**

**"வேல்நெடுங் கண்கள் அம்பா விற்படை சாற்றி எங்கும்**

**தேநெடுங் கோதை நல்லார் மைந்தனைத் தெருவில் எய்ய"**

வேல் போன்ற கண்களையே அம்பாகக் கொண்டு விற்படை அமைத்து கன்னிப் பெண்கள் சீவகன் மேல் காதல் கணைகளைத் தொடுத்தனர். அப்பொழுது, தேவமகளைப் போன்றவளாகிய விமலை பந்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

கைகளிலே ஐந்து பந்துகளைக் கொண்டு விமலை பந்தாடிக் கொண்டிருந்தாள். அப்போது, மலர் மாலையை மொய்க்கின்ற வண்டுகளைப் போல மேலே சென்றது பந்து. பின்னர் ஓடுகின்ற பந்தோடு கூடச் சென்று மீளும் அவளுடைய அழகிய புருவமும், கண்களும் அவள் அழகுக்கு அழகு செய்யும் விதமாகக் காணப்பட்டது.

**"மாலை யுட்க ரந்தபந்து வந்து கைத்த லத்த வாம்**

**ஏல நாறி குங்குழல் புறத்த வான்மு கத்தவாம்"**

மாலைகளுக்குள் சென்று மறைந்த பந்து கைகளுக்குள் வந்து சேர்ந்தன. கருங்கூந்தலுக்குப் பின்புறம் சென்று மறைந்த பந்து முகத்தின் முன்னே வந்தன. தலைக்கு மேலே சென்ற பந்து மாலைக்கு நேரே வரும். இன்னும் தலைக்கு மேலே உயரப்போன பந்து, சென்ற வேகத்திலே மீண்டும் திரும்பி வந்து கையிடத்திலுள்ள விரல்களுக்கிடையில் வரும்.

இவ்விதமாக எட்டுத்திக்குகளிலும் பந்தைச் செலுத்தினாள். இடையில் மாலை தொடுத்தும், குங்குமம் அணிந்தும், படிப்படியாக உயரும்படியாகப் பந்தினை அடித்தாள். தன்னைச் சுற்றி வட்டமாக வரும்படி பந்தினை அடித்தாள். மயில்போலவும் வண்டுகளும் தும்பியும், தேனுண்ணாமல் நின்று பாட விமலை பந்தாடினாள்.

**விமலை ஆடிய பந்து ஒன்று சீவகன் முன்னே வீழ்தல்**

மாணிக்கச் சிலம்பும், கிண்கிணிச் சதங்கையும், ஒளிவீச மின்னல் கொடி போலப் பொன்நகை அணிந்த விமலை ஆடும் பந்துகளில் ஒன்று, முல்லை மாலையில் பட்டு

விரைந்து சென்றன. பின் தெருவில் புகுந்து அங்கிருந்த சீவகன் முன்னே சென்று விழுந்தது.

**"நன்மணிச் சிலம்பி னோடு கிண்கி ணிந் நகந்தகும்**

**மின்ம லர்ந்த முல்லை மாலை நக்கி மிக்கு இறந்தெழுந்து"**

**விமலை சீவகனை பார்த்தல்**

**"வீழ்ந்த பந்தின் மேல் விரைந்து மின்னின் நுண்நு சுட்பினாள்**

**சூழ்ந்த காசு தோன்ற அம்துகில்நெ கிழ்ந்து பூங்குழல்"**

அவ்வாறு வீழ்ந்த பந்தைத் தேடி விமலை விரைந்து சென்றாள். அப்போது ஆடையின் மேலணிந்த காசுகள் வெளித்தோன்றின. அழகிய கூந்தல் சரியும்படியாக ஓடி வந்தாள். கண்டவர் உயிரைப் பிளக்கின்ற கண்களையுடைய விமலை, சீவகன் முன் விழுந்த பந்தை நோக்கினாள்.

**சீவகனைக் கண்ட விமலையின் நிலையைக் கூறுதல்**

**"மந்தார மாலை மலர் வேய்ந்து மகிழ்ந்து தீந்தேன்**

**கந்தாரம் செய்து களிவண்டு முரன்றுபாட"**

வண்டுகள் மாலைக்குள் உள்ள தேனினை உண்டு சுந்தாரம் என்னும் இசையை அமைத்துப் பாடுமாறு, பந்தின் மேல் விருப்பம் கொண்டு கண்களை அகல விழித்துநான்கு திசையிலும் பார்த்து நின்றவர் விமலை செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப் போலக் காட்சியளித்தாள் என்றனர்.

நீர் தோய்ந்த சந்திரகாந்தக் கல்லாகிய நிலத்திலே வளர்ந்து, பெருமைக்குரிய கங்கையாற்றின் குளிர்ந்த நீர்த்துளிகளை உண்டு, தழைத்த பசுங்கொடி, போன்ற விமலை பந்தைத்தேடி வந்த இடத்தில் சீவகனைக் கண்டவுடன் பசலை பூத்து வாடிய பழம்பூவைப் போன்று நிறம் வேறுபட்டாள்.

**"கண்பாற் கவினும் வளையும் கவர்ந்திட்ட கள்வன்**

**மண்பால் இழிந்த மலர் ஐங்கணை மைந்தன் என்றாள்"**

பெண்மைக்கு அழகு தரும் நீங்காத நாணமும், வலிமை மிகு மனத்திட்பமும், அழகிய நிறமும் எழில் மிக்க தோற்றமும் ஒருங்கே கூடிய விமலை, “தன் கண் பார்வை ஒன்றினாலேயே என் அழகையும் கை வளையல்களையும் கவர்ந்து கொண்ட கள்வன் இவன் இத்தகையவன் இவ்வுலகில் வந்து தோன்றிய மலரம்புகளையுடைய மன்மதனோ?” என்று எண்ணினாள்.

**“என்றாள் நினைந்தாள் இதுபோலும் இவ்வேட்கை வண்ணம்”**

மேலும் அவள் “காதலின் தன்மையே இது தான் போலும்! இந்தக் காதல் வேட்கையானது பெற்றவர்க்கும் கூற முடியாததாய்ப் பொறுத்தற்கும் அரியதாய் உயிரை வாட்டுகின்ற நெருப்பாய் விளங்குகின்றது. உலகிலேயே மருந்தில்லாத நோய் இதுஒன்றுதான்” என்று எண்ணினாள்.

**இருவரும் ஒருவரையொருவர் நோக்குதல்**

**“நெஞ்சங் கலங்கி நிறை யாற்றுப் படுத்து நின்றாள்**

**அஞ்செங் கழுநீர் அலர்ந்த ம்மதி வாள்மு கத்தே”**

இவ்வாறு உள்ளங் கலங்கி அழிய நின்ற விமலையின் கண்களாகிய செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும் அழகிய நிலவு போன்ற முகத்தை, சீவகன் தன் கண்களால் நோக்கினான். அவளும் நோக்கினாள். அவன் நோக்கிய அளவிலே விமலையைப் பற்றியிருந்த காமநோய் சீவகளைப் இருப்பிடளமாகக் கொண்டு அவனைப் பற்றியது.

**சாகரதத்தனின் கடையில் என்றும் இல்லாதபடி பொருட்கள் விற்றுத்தீர்தல்:**

**“என்றாங் கொல் மாதர் நலம் எய்துவ தென்று சிந்தித்து**

**ஒன்றார் கடந்தான் புலம்புட் கொண்டிருத்த வோடும்”**

பகைவரை வென்ற சீவகன், “அழகிய மங்கையை அடைந்து இன்பம் பெறும் நாள் என்று கூடுமோ?” என எண்ணி வருந்திக் கொண்டே கடைமுன் நின்றிருந்தான். அப்பொழுதே சாகரதத்தன் தகட்டுப் பொன் ஆறுகோடிக்குக் குறையாமல் விற்றான்.

**சாகரதத்தன் சீவகனைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுதல்**

**"திருமல்க வந்த திருவே எனச் சேர்ந்து நாய்கன்"**

தன் கடையில் தேங்கிக் கிடந்த பொருள்களெல்லாம் விற்பதற்குக் காரணமாக அங்கே வந்து நின்ற சீவகனை நெருங்கிச் சாகரதத்தன் "என் செல்வம் பெருக வந்த செல்வமே" என்று கூறி அவனருகில் சென்று போரில் பழகிய புகழ்வேல் ஏந்தியவனே! இந்த இல்லம் இனி உன் இருப்பிடம் என்று கூறினான். மலர்மாலை அணிந்த சீவகன் ஒளிவிளங்கும் மாளிகைக்கு மாமனொடு சென்றடைந்தான்.

**சாகரதத்தன் சீவகனிடம் கூறியன**

வீட்டினை அடைந்ததும் சாகரதத்தன் சீவகனை நோக்கி, "யாவராலும் விரும்பத்தக்கவனே! நான் கூறப் போவதைச் சற்று செவிமடுத்துக் கேட்பாயாக! அழகுவிளங்கும் இந்த நகரத்தில் பல காலம் வாழ்ந்து வருகின்றேன். எனக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த கற்பில் அசைவற்றவளாகிய கமலை என்பவளுக்கு திருமகளைப் போன்ற பண்பு நலமிக்க விமலை என்னும் பெயரினையுடைய பெண் பிறந்துள்ளாள். "பூம்பாவை வந்து பிறந்தாள் அப் பிறந்த போழ்தே

**"ஆம்பால வெல்லாம் அறிவார் அன்று எழுதி யிட்டார்"**

அழகிய பதுமையைப் போன்ற அப்பெண் பிறந்த பொழுதே பின்னால் நடப்பனஎல்லாவற்றையும் அறியும் சோதிடர் அவள் பிறந்த குறிப்பை அன்றே எழுதி வைத்தனர். வெளிச்சொல்ல வழியில்லாது தேங்கிக் கிடக்கும் குளத்து நீர் போலத் திரண்டு கிடந்த என் சிறந்த செல்வத்தைப் போலவே இப்பெண் பிறப்பும் மேலும் என்னிடம் செல்வம் வந்துசேர்வதற்கான அறிகுறியே" என்று கூறிய அச்சோதிடர்,

இம்மங்கைக்குரிய மணவாளன் உன் கடைமுன் வந்து அமர்ந்தவுடன், கடல் கடந்துபோய் திரட்டக்கூடிய செல்வம் எல்லாம் உன் கடையில் வந்து குவியும். மற்றபடி வேறு எப்போதும் அவ்வளவு அதிகமாக வந்து பொருள் உன்னிடம் குவியாது.

வேறெங்கும் தனக்கு நிகரில்லாத அவன் பெருமைமிகு மார்பே விமலைக் கேற்ற பூவணைப் பள்ளியாகும்" என்று கூறினான்.

**சாகரதத்தன் கூற்றால் சீவகனும் விமலையும் வருத்தம் நீங்குதல்**

**"ஏற்ற கைத் தொடி விழ்ந்தென ஏந்தலைத்**

**தேற்றி னான்திரு மாநலம் செவ்வனே"**

நீட்டிய கையிலே வளையல் வந்து வீழ்ந்ததைப் போல தனக்கு வந்து வாய்த்த சீவகனை, சாகரதத்தன் இவ்வாறு கூறித் தேற்றினான். தன் அழகுநலம் பெரிதும் இழந்த விமலையும் சீவகனைக் கண்டதும் உயிர் இழக்காமல் பிழைத்தாள். தன் தந்தை அவனிடம் கூறிய மொழி கேட்டும் தனது மனத்தைத் தேற்றிக் கொள்ளவும் செய்தாள்.

**சீவகன் விமலை திருமணம் நடைபெறல்**

அழகிய பொற்கொடியென விளங்கிய விமலையையும் விரக்கழலணிந்த செம்பொன் மலையென விளங்கும் சீவகனையும், சிறப்புற புதிய பொன்னாலாகிய மனையிலிருத்தி, நகரில் பலவித வாத்தியங்களும் முழங்கி, இன்னிசை எழும்படி இவ்வுலகில் இதுவரை நடைபெறாதது என்று சொல்லும்படியாக இன்ப மணம் புரிந்தனர். இதனை,

**"பைம்பொன் நீள்நகர்ப் பல்லியம் ஆர்த்தெழ**

**இம்பர் இல்லதோர் இன்பம் இயற்றினார்"**

என்ற வரிகள் உணர்த்துகிறது. விமலையை மணம் முடித்த சீவகன் விமலையுடன் சில மாதங்கள் தங்கியிருந்து பின்னர் 'என் தோழரைக் கண்டு திரும்பி வருகிறேன்' என்று கூறி விமலையை விட்டு நீங்கிச் சென்றான்.

சீவகனின் வரலாற்றையும், நந்தட்டன் பதுமுகனிடம் கூறிய விதிமுறைகளையும், பகைவரிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள உணவு உடை எவ்வாறு ஆராய்தல் வேண்டும் என்பது பற்றியும், தங்களது நாட்டைக் காப்பாற்றுவதற்கு விசயை

சீவகனுக்குக் கூறிய அறிவுரைகள் பற்றியும் அறியமுடிகிறது. மேலும் இராசமாபுரத்தது அழகினைப் பற்றியும், அந்நகருள் பந்தாடிய விமலை அழகினையும், அங்கு வந்த சீவகனது அழகைக் கண்ட விமலையின் நிலையையும், விமலையின் தந்தையான சாகரதத்தன் என்னும் வணிகனின் சிறப்பினையும், விமலை-சீவகனின் திருமணம் பற்றியும் இவ்விமலையார் இலம்பகத்தின் வழி அறியமுடிகிறது.

**வினாக்கள்**

1. அமுத சுரபி என்ற அட்சயபாத்திரம் குறித்து எழுதுக.
2. மணிமேகலை எவ்வாறு அமுத சுரபியை பெற்றாள்?
3. ஆபுத்திரனின் வரலாறும் அமுத சுரபியும் குறித்து எழுதுக.
4. மணிமேகலையின் வரலாற்றைக் கூறுக.
5. விமலையார் இலம்பகம் குறித்து எழுதுக.
6. சீவக சிந்தாமணி கதை சுருக்கம் தருக.
7. இராசமாபுரத்தின் செல்வச் சிறப்பு குறித்து எழுதுக.

# அலகு - 3

## கம்பராமாயணம், பெரியபுராணம்.

### கம்பராமாயணம்

கம்பராமாயணத்தைத் தமிழில் இயற்றிய பெரும் புலவர் கம்பர். அவரது கவிச்சிறப்பு தமிழிலக்கிய வரலாற்றில் தலை சிறந்ததாகப் போற்றப்படுகிறது. “கல்வியிற் பெரியன் கம்பன்” எனவும், “கம்பன் வீட்டுச் கட்டுத்தறியும் கவிபாடும்” எனவும் வரும் பழம் தொடர்கள் கம்பரின் சிறப்பை வெளிப்படுத்தும். வடமொழியில் வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தைத் தமிழில் இராமகாதையாகப் படைத்தார் கம்பர். தமிழ் வழக்கிற்கும், பண்பாட்டிற்கும் ஏற்ப வால்மீகி இராமாயணக் கதைப் பகுதிகளுள் பலவற்றை மாற்றியும், சிலவற்றை விரித்தும், சில செய்திகளை அடியோடு விடுத்தும் கம்பர் தம் காப்பியத்தை அமைத்துள்ளார். இக்காப்பியம் கம்பநாடகம், கம்ப சித்திரம் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

### நூலமைப்பு

இந்நூலில், பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களும், 113 படலங்களும், 10,500க்கும் மேற்பட்ட பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

### கம்பர்

கம்பர் சோழநாட்டில் திருவழுந்தூரில் பிறந்தவர். தந்தையார் பெயர் ஆதித்தன். உவச்சர் குலத்தில் பிறந்த இவர் காளி கோயிலில் பூஜை செய்து வந்த மரபைச் சேர்ந்தவர். காளியின் அருளால் கவி பாடும் ஆற்றல் பெற்றவர். இவருக்கு அம்பிகாபதி என்ற மகனும் காவேரி என்ற மகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அம்பிகாபதி, சோழ மன்னன் மகள் அமராவதியைக் காதலித்த குற்றித்திற்காகக் கொலை செய்யப்பட்டான். கல்வியில் சிறந்து விளங்கிய இவன் அம்பிகாபதிக் கோவை என்ற நூலை

எழுதியுள்ளான். மகனின் மறைவுக்குப் பிறகு நாட்டரசன் கோட்டையில் தங்கி அங்கேயே உயிர் துறந்தார் கம்பர். அங்கு அவருக்குச் சமாதி எழுப்பப்பட்டுள்ளது. இவரது காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு எனவும் கி.பி.12ஆம் நூற்றாண்டு எனவும் கூறப்படுகின்றது. இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் ஆவார். தம்மை ஆதரித்த வள்ளலைக் கம்பர் தம் காப்பியத்தில் பத்து இடங்களில் பாடியுள்ளார்.

**கம்பரின் பிற நூல்கள்**

இராமகாதையைத் தவிர ஏர் ஏழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

## சுந்தர காண்டம்

## திருவடி தொழுத படலம

அனுமன், இராமபிரானது திருவடியைத் தொழுது, பிராட்டியைத் தான் கண்டு வந்த செய்தியைக் கூறுவது, 'திருவடியை நாரணனைக் கேசவனைப் பாஞ்சுடரை' என்ற திருவாய் மொழித் (4.9.11) தொடரை அடிப்படையாக்கிக் கொண்டு பார்த்தால், திருவடி என்ற தொடர் இராமபிரானையே குறிப்பதாகவும் கொள்ளலாம்.

மேலும் 'திருவடி' என்பது அனுமனைக் குறிப்பதாகக் கொண்டு, இராமபிரான் என்ற செயப்படு பொருளை வரவழைத்தும் பொருள் கொள்ளலாம். திருவடி (அனுமன்) யாரைத் தொழுதான்? இராமபிரானையா? அன்று.

இப்படலத்தின் 22ஆம் கவிதை, இதனைத் தெளிவாக்குகிறது.

**எய்தினன்அனுமனும் எய்தி, ஏந்தல் தன்**

**மொய் கழல்தொழுகிலன்**

இராமபிரானது திருவடியைஅனுமன் தொழவில்லை என்பதை இக்கவிதையி்ன் முன் பகுதி மூலம் நன்கு உணரலாம். அப்படியானால், யாரைத் தொழுதான்?

முளரிநீங்கிய

**தையலைநோக்கிய தலையன் கையினன்**

**வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினான்**

'பிராட்டியைத் தான்அனுமன் தொழுதான்' என்பதை இதன் மூலம் உணரலாம்.

ஆக, திருவடியாகியஅனுமன், பிராட்டியை, இருந்த இடத்திலிருந்தே தொழுது, தான் கண்டுவந்த செய்தியை இராமபிரானிடம் சொல்வதைத் தெரிவிப்பது இந்தப் படலம் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும்.

**அனுமன் இலங்கையினின்று திரும்புதல்**

**பாடல் 1**

**"நீங்குவென் விரைவின்" என்னும் நினைவினன், மருங்கு நின்றது**

**ஆங்கு ஒரு குடுமிக் குன்றை அருக்கனின் அணைந்த ஐயன்,**

**வீங்கினன், உலகை எல்லாம் விழுங்கினன் என்ன் வீரன்**

**பூங் கழல் தொழுது வாழ்த்தி, விசும்பிடைக் கடிது போனான்''**

**விளக்கம்**

அனுமன் கடல் தாவிய வரலாற்றை ஒரு நீண்ட படலத்தில் கூறி அவன் திரும்பிய செய்தியை இரண்டே பாடல்களில் அமைத்த கருத்து நோக்கத்தக்கது. குடுமிக்குன்றை அணைந்த அருக்கினில் என இயைத்து சிகரங்களோடு கூடிய உதயகிரியை அடைந்த சூரியனைப் போல என்னலுமாம், திருமால் உலகங்களை விழுங்கியது, பால வேள்வி:26 அநுமன் இலங்கையிலிருந்து கடல் கடக்க ஏறிய மலை அரிஷ்டம் என்னும் பெயரது என வான்மீகம் கூறும் ''வடக்கு வாசற் சுவேல பருப்பதம்'' என்பது பழைய உரை.

**பாடல் 2**

> **"மைந்நாகம் என்ன நின்ற குன்றையும், மரபின் எய்தி,**
>
> **கைந் நாகம் அனையோன் உற்றது உணர்த்தினன், கணத்தின் காலை,**
>
> **பைந் நாகம் நிகர்க்கும் வீரர் தன் நெடு வரவு பார்க்கும்,**
>
> **கொய்ந் நாகம் நறுந் தேன் சிந்தும், குன்றிடைக் குதியும் கொண்டான்**
>
> **வானர வீரர் அனுமனைக் கண்டு மகிழ்தல்"**

**விளக்கம்**

பாம்பு, ஒன்றைஆவலோடு எதிர் பார்க்கும் போது, படம் எடுத்துக் கொண்டு எழுந்து நோக்கும் இயல்புடையது. அதனால் வானர வீரர்கள் அனுமனது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருப்பதற்கு, பை நாகம் உவமையாக்கப்பட்டது. கணத்தின் காலை - காலத்தின் சிறிய அளவு் நாகம் சுரபுன்னை. அனுமன், கடல் தாவிய செய்தி, ஒரு நீண்ட படலமாக விரிந்தது. ஆனால் அவன் திரும்பிய செய்தி இரண்டு பாடல்களில் முடிக்கப்பட்டுள்ளது. இது, கவிச்சக்கரவர்த்தியின் கதை அமைப்புத் திறனைக்காட்டுகின்றது.

**அனுமனைக் கண்ட வானரா் மகிழ்ச்சி**

**பாடல் 3**

> **போய் வரும் கருமம் முற்றிற்று என்பது ஓர் பொம்மல் பொங்க,**
>
> **வாய் வெரீஇ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ,**
>
> **பாய்வரு நீளத்து ஆங்கண் இருந்தன பறவைப் பார்ப்புத்**
>
> **தாய் வரக் கண்டதன்ன உவகையின் தளிர்த்தார் அம்மா!**

**விளக்கம்**

வானர வீரர்,பொம்மல் பொங்க உவகையின் தளிர்த்தார் என்க. வீரர்களது மகிழ்ச்சிக்கு, தாய்ப் பறவையின் வருகை கண்டு மகிழும் பறவைக் குஞ்சுகளின் உவகை உவமையாக்கப்பட்டுள்ளது.

**பாடல் 4**

**அழுதனர் சிலவர் முன் நின்று ஆர்த்தனர் சிலவர் அண்மித்**

**தொழுதனர் சிலவர் ஆடித் துள்ளினர் சிலவர் அள்ளி**

**முழுதுற விழுங்குவார்போல் மொய்த்தனர் சிலவர் முற்றும்**

**தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர், தாங்கி**

**விளக்கம்**

அழுதனர்: அன்பிற் குரியோரைக் காணுதிருந்து கண்டபோது மகிழ்ச்சியால் அழுவதும், கண்ணீர் பெருக்குவதும் இயற்கை. அள்ளி விழுங்குவார் போல் 'பருகுவ னன்ன ஆர்வத்த னைகி' (நன் பாயிரம்) இவை யாவும் தாய்வரக் கண்ட பார்ப்புக்களின் செயல்களாகவும் அமைவன உயர்க. இங்குக் கூறப்பட்ட வானரர்களின் செயல்கள்யாவும் அவர்கள் கொண்ட கவலைக்குப் பின் உண்டான மகிழ்ச்சியால் நிகழ்ந்தவை.

**பாடல் 5**

**தேனொடு கிழங்கும் காயும் நறியன அரிதின் தேடி,**

**மேல் முறை வைத்தேம் அண்ணல்! நுகர்ந்தனை, மெலிவு தீர்தி**

**மான வாள் முகமே நங்கட்கு உரைத்தது மாற்றம்" என்று,**

**தாம் நுகர் சாகம் எல்லாம் முறை முறை சிலவர் தந்தார்**

**அனுமன் உடலில் புண்கள் கண்டு, வானரர் வருந்துதல்**

**விளக்கம்**

முகமே எங்கட்கு உரைத்தது, உள்ளத்துள்ளதை முகம் தெரிவிப்பது குறள். 706 நீ போய்க் கண்ட செய்திகளைக் கூறிக் களைக்க வேண்டா. நீ வெற்றியுடன் திரும்பியதை உன் முகத்திலிருந்தே கண்டோம். தேனொடு கிழங்கும் காயும், என்பதற்கு உபலஷணத்தால் கனிகளையும் என்று கூட்டியு முறைக்கலாம். இப்போது உண்டு இளைப்பாறு என்று கூறினர் என்க. தாம் நுகர் சாகம் குரங்களாகிய தாம் உண்ணக் கூடிய இலையுணர்வு மேன்மையாக முறை ஒவ்வொருவராக என்னலும் ஒன்றும்.

**பாடல் 6**

**தாள்களில், மார்பில், தோளில், தலையினில், தடக் கைதம்மில்,**
**வாள்களின், வேலின், வாளி மழையினின் வகிர்ந்த புண்கள்,**
**நாள்கள் மேல் உலகில் சென்ற எண் என, நம்பி கண்ண**
**ஊழ் கொள நோக்கி நோக்கி, உயிர் உக, உளைந்து உயிர்த்தார்**

**விளக்கம்**

அனுமன் உடலில்உள்ள புண்கள் அளவற்றன என்பதை, ‘நாள்கள் மேல் உலகில் சென்ற எண் என’ என்ற தொடர் காட்டுகின்றது. எண்ணற்றவையைக் குறிக்க ‘வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று’ என்றதிருக்குறள் (22) தொடர் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

**அனுமன் அங்கதன் முதலியோரை வணங்கி, சீதை கூறிய ஆசியைத் தெரிவித்தல்**

**பாடல் 7**

**வாலி காதலனை முந்தை வணங்கினன் எண்கின் வேந்தைக்**
**காலுறப் பணிந்து, பின்னை, கடன்முறை, கடவோர்க்கு எல்லாம்**
**ஏலுற இயற்றி, ஆங்கண் இருந்து, “இவண் இருந்தோர்க்கு எல்லாம்,**
**ஞால நாயகன் தன் தேவி சொல்லினள், நன்மை“ என்றான்**

**விளக்கம்**

அங்கதன் இளவரசனும் படைத்தலைவனும் ஆதலால், அவனுக்கு முதல் வணக்கம். சாம்பவான் பிரம புத்திரனாதலாலும், வயதினாலும் அறிவினாலும் சிறந்தவனாதலாலும், கடல் கடந்து செல்ல அனுமனை ஊக்கப்படுத்திய சிறப்பினன் ஆதலாலும், அவனுக்கு, கால் உறப் பணிந்த வணக்கம்.

அனுமன் நடந்த செய்திகளைக் கூறுதல்

**பாடல் 8**

**என்றலும், கரங்கள் கூப்பி எழுந்தனர், இறைஞ்சித் தாழா-**
**நின்றனர், உவகை பொங்க விம்மலால் நிமிர்ந்த நெஞ்சர்,**
**“சென்றது முதலா, வந்தது இறுதியாச் செப்பற்பாலை,**
**வன் திறல் உரவோய்!“ என்ன, சொல்லுவான் மருத்தின் மைந்தன்**

**விளக்கம்**

செப்பற்பாலை அனுமன் சொல்லின் செல்வனாதலால் சொல்லுந் தகுதியுடையோய் என விளியாகக் கொள்ளலும் அமையும். வன்திறலுரவோய் ஒரு பொருட்பன்மொழி இங்கு மூன்றடுத்து வந்தது இது அனுமனுடைய மனம் வாக்கு காயம் என்னும் மூன்றின் வன்மையைக் குறிப்பது எனக் கொள்ளலும் ஏற்கும்.

**பாடல் 9**

**ஆண் தகை தேவி உள்ளத்து அருந் தவம் அமையச் சொல்லி,**
**பூண்ட பேர் அடையாளம் கைக் கொண்டதும் புகன்று, போரில்**
**நீண்ட வாள் அரக்கரோடு நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி**
**மீண்டதும், விளம்பான் - தான் தன் வென்றியை உரைப்ப வெள்கி**

**விளக்கம்**

பிராட்டி தன் கற்பின் ஆற்றலால் இலங்கையையும் அரக்கர்களையும் அழிக்கும் திறமைபெற்றிருந்தும், தன் தலைவனான இராமபிரானுக்கு வெற்றிச் சிறப்பினால் வரக்கூடிய பெருமையை அளிக்கவும் அதனால் உலகுய்யவும் உறுதிகொண்டு,

இராவணனாலும், காவல் அரக்கியர்களாலும் உண்டான நிந்தனைகளையும் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது, ஊணுறக்கமின்றிப் பொறையாகிய பெருந்தவத்தை மேற் கொண்டிருந்தாளாதலின் அச்சிறப்பு விளங்கத் தேவி உள்ளத்து அருந் தவம் என்னப்பட்டது. அடையாளம் கைக் கொண்டதும் என்றதால் தன்சொல்லால் அறியக்கூடியதை மேலும் நன்றாக உறுதிப்படுத்த அடையாளப் பொருள தான் பெற்றுள்ளதை எடுத்துக் காட்டியதும் ஆம். தோன்றத் தோற்றித் துறை பல முடிப்பினுந் தான்றற் புகழ்தல் தகுதியன்றே என்பதற் கேற்ப அனுமன் தன் வெற்றியைப் தானே விளம்ப வெள்கினான் சான்றோர் புகழ்க்கு நாணுவர். அனுமன் வானரர்களின் வினாவுக்கு விடையாகத் தான் இலங்கை சென்று வந்த வரலாற்றை முதனூல் 225 சுலோகங்கள் கொண்ட இரண்டு சர்க்கங்களில் (58,59) கூறியிக்க கம்பர் இவ்வொரு செய்யுளிலே அதனைச் சுருக்கித் திறம்பெற அமைத்த ஆற்றல் பெரிதும் வியக்கத்தக்கது. இது கருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அழகு பற்றியது.

**பாடல் 10**

**"பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை**
**உரைசெய, ஊர் தீ இட்டது ஓங்கு இரும் புகையே ஓத,**
**கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட,**
**தெரிதர உணர்ந்தேம் பின்னர், என் இனிச் செய்தும்? என்றார்**

**விளக்கம்**

நன்மையை நினையாதவர் என்ற பொருளில் பகைவரைக் குறிப்பது. தெரிதர இங்குத் தர என்பது துணைவினை வென்றமை வென்றியன்றி அனுமன் திரும்பான் என்ற அன்னோர் உறுதியைப் புலப்படுத்துவதாகும். புண்ணே புகையே செயலே என்பனவற்றிலுள்ள ஏகாரங்கள் பிரிநிலைப் பொருளன 1253 உரையில் கூறிய சுருங்கச் சொல்லுமுறைக்கு இச்செய்யுளம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

**அனுமன் சொற்படி, யாவரும் இராமனைக் காண விரைதல்**

**பாடல் 11**

**யாவதும், இனி, வேறு எண்ணல் வேண்டுவது இறையும் இல்லை**
**சேவகன் தேவி தன்னைக் கண்டமை விரைவின் செப்பி,**
**ஆவது, அவ் அண்ணல் உள்ளத்து அருந் துயர் ஆற்றலே ஆம்**
**போவது புலமை" என்ன, பொருக்கென எழுந்து போனார்**

**விளக்கம்**

இது, எல்லா வானரவீரரும் ஒரு சேரத் தீர்மானித்துச் சென்ற செயலைக் கூறுவதாகும். சேவகன் பிறவி தன்னைக் கண்டது விரைவிற் செப்பி ஆவதவ் வண்ணலுள்ளத் தருந்துயரகற்றலேயாம் போவது புலமையென்னாப் பொருங்கென வெழுந்து போனார் என்று கூறி இடையிலே அவர் மதுவனத்தில் தங்கிக் காலங் கழித்தனர்.

**வானர வீரரின் உரைப்படி, இராமனிடத்திற்கு அனுமன் முந்திச் செல்லுதல்**

**பாடல் 12**

**ஏத நாள் இறந்த் சால வருந்தினது இருந்த சேனை**
**ஆதலால் விரைவின் செல்லல் ஆவதுஅன்று அளியம் எம்மைச்**
**சாதல் தீர்த்து அளித்த வீர! தலைமகன் மெலிவு தீரப்**
**போது நீ முன்னர்" என்றார் "நன்று" என அனுமன் போனான்**

**விளக்கம்**

ஏத நாள் -பிராட்டியைத் தேடி வரும் காரணமாகக் குறிக்கப்பட்ட நாள் அது ஒரு மாதத் தவணை 'ஒரு மதி முற்றுறாத முன் முற்றுதிர்' (கம்ப. 4457) குறிப்பிட்ட நாள் கடந்தமையால், தமது அரசன் சுக்கிரீவன் தண்டிப்பானே என்பது, சேனையின் வருத்தம். சாதல் தீர்த்து அளித்தல் - சேனை சாகத் துணிந்தது. 'மாண்டுறுவது நலம் என வலித் தனம்'. (கம்ப. 4658) அனுமன், இராமபிரானிடம் விரைவில் செல்ல வேண்டியதைக் காரணத்துடன் வானர வீரர்கள் கூறியதைத் தெரிவிப்பது இது

பாடல் 13

**முத் தலை எ.்.கினாற்கும் முடிப்ப அருங் கருமம் முற்றி,**

**வித்தகத் தூதன் மீண்டது இறுதியாய் விளைந்த தன்மை,**

**அத் தலை அறிந்த எல்லாம் அறைந்தனம் ஆழியான்மாட்டு**

**இத் தலை நிகழ்ந்த எல்லாம் இயம்புவான் எடுத்துக் கொண்டாம்**

**விளக்கம்**

இக்கவிதை,கவிக் கூற்று, முத்தலை எ.்.கினாற்கும் முடிப்பரும் கருமம்:- இலங்கையை எரியூட்டுதல். செயற்கரும் காரியம் செய்தமையால் அனுமன்வித்தகத்தூதன் எனப்பட்டான். வித்தகம் - திறமை. சதுரப்பாடு)

சுக்கிரீவன் தேற்ற, இராமன் தேறுதல்

பாடல் 14

**கார் வரை இருந்தனன் கதிரின் காதலன்,**

**சீரிய சொற்களால் தெருட்ட, செங் கணான்**

**ஆர் உயிர் ஆயிரம் உடையன் ஆம் எனா,**

**சோர்தொறும் சோர்தொறும், உயிர்த்துத் தோன்றினான்**

**விளக்கம்**

பிராட்டியின்பிரிவுத் துயரம் வாட்டுதலினால், மூர்ச்சித்து உயிர் சோர்ந்த இராமபிரானை, சுக்கிரீவன், தனது நல்ல சொற்களால் தெளிவித்தான். அதனால் இராமபிரான் உயிர்த்துத் தோன்றினான் என்பதாம். இராமபிரான், உயிர் அடங்கியும், மீண்டு வந்தும், பலமுறை நிகழப் பெற்றவனாதலால், 'ஆர் உயிர் ஆயிரம் உடையன் ஆம்' எனப்பட்டான்.

பாடல் 15

**தண்டல் இல் நெடுந் திசை மூன்றும் தாயினர்,**

**கண்டிலர் மடந்தையை" என்னும் கட்டுரை,**

**உண்டு உயிர் அகத்து என ஒறுக்கவும், உளன்,**

**திண் திறல் அனுமனை நினையும் சிந்தையான்**

**விளக்கம்**

தென் திசை தவிரமற்றைய மூன்று திசைகளுக்கும் சென்றவர்கள் பிராட்டியைக் காணாதவர்களாக வந்தனர் என்ற சொல், வருத்தவும், இராமபிரான் உயிர் உளனாயிருந்தது, அனுமன் பிராட்டியைக் கண்டு வருவான் என்ற நம்பிக்கையால் தான். 'திண் திறல் அனுமனை நினையும் சிந்தையால், உயிர் உளன்' என்றும் பொருள் கொள்ளலாம்.

**பாடல் 16**

**ஆரியன், அருந் துயர்க் கடலுள் ஆழ்பவன்,**
**"சீரியது அன்று நம் செய்கை தீர்வு அரும்**
**மூரி வெம் பழியொடும் முடிந்ததாம்" என,**
**சூரியன் புதல்வனை நோக்கிச் சொல்லுவான்**

**விளக்கம்**

நம் செய்கைஇதுவரை பிராட்டியைத் தேட எடுத்துக் கொண்ட முயற்சி. மூரி வெம்பழி தன் மனையாளை, தீயோன் ஒருவன் எடுத்துச் செல்ல, இராமன் அவளை மீட்கும் ஆற்றல் அற்றவனானான் என்று உலகத்தார் கூறுவது. இந்தக் கவியில் தொகுத்துக் காட்டப்பட்ட செய்கை. பழி ஆகியவைகள் அடுத்த நான்கு கவிகளில் வகுத்துக் காட்டப்படுகின்றன.

**சுக்கிரீவனை நோக்கி, இராமன் துயருடன் பேசுதல்**

**பாடல் 17**

**குறித்த நாள் இகந்தன குன்ற, தென் திசை**
**வெறிக் கருங் குழலியை நாடல் மேயினார்**
**மறித்து இவண் வந்திலர் மாண்டுளார்கொலோ?**
**பிறித்து அவர்க்கு உற்றுளது என்னை?-பெற்றியோய்!**

**விளக்கம்**

குறித்த காலத்துக்குள், தென் திசை சென்றவர்கள் வராததனால் மாண்டுவிட்டனரோ என்று ஐயமுறுகின்றான் இராமபிரான். ‘பிறிது’ என்பது எதுகை நோக்கி பிறித்து என நின்றது செய்யுள் விகாரம்.

**பாடல் 18**

**“மாண்டனள் அவள் ”இவள் மாண்ட வார்த்தையை**
**மீண்டு அவர்க்கு உரைத்தலின், விளிதல் நன்று” எனா,**
**பூண்டது ஓர் துயர் கொடு பொன்றினார் கொலோ?**
**தேண்டினர், இன்னமும் திரிகின்றார் கொலோ?**

**இராமபிரான்ஐயப்பாடு, மேலும் நீளுகின்றது**

**பாடல் 19**

**கண்டனர் அரக்கரை, கறுவு கைம்மிக,**
**மண்டு அமர் தொடங்கினார், வஞ்சர் மாயையால்**
**விண்தலம்அதனில் மேயினர்கொல்? வேறு இலாத்**
**தண்டல் இல் நெடுஞ் சிறைத் தளைப் பட்டார்கொலோ?**

**பாடல் 20**

**கூறின நாள், அவர் இருக்கை கூடலம்**
**ஏறல் அஞ்சுதும்” என, இன்ப துன்பங்கள்**
**ஆறினர், அருந் தவம் அயர்கின்றார்கொலோ?**
**வேறு அவர்க்கு உற்றது என்? விளம்புவாய்! என்றான்**

**விளக்கம்**

குறித்த காலம் கடந்ததனால், மீண்டும் இராமன் இருக்கும் இடத்துக்கு வருதற்கு அஞ்சி, வானர வீரர்கள் தவத்தை மேற்கொண்டனரோ என்பதும் இராமபிரான் உள்ளத் தெழுந்த ஒரு ஐயம் ஆகும்.

**அனுமன் இராமனை அடைந்து, சீதையின் நிலையைக் குறிப்பால் உணர்த்துதல்**

**பாடல் 21**

**என்புழி, அனுமனும், இரவி என்பவன்**
**தென் புறத்து உளன் எனத் தெரிவது ஆயினான்**
**பொன் பொழி தடக் கை அப் பொரு இல் வீரனும்,**
**அன்புறு சிந்தையன், அமைய நோக்கினான்**

**விளக்கம்**

அனுமனைச˙ சூரியனாகவும், அவன் தென் திசையிலிருந்து வருவதால், சூரியன் தெற்கிலிருந்து வருவதாகவும் கூறப்பெற்றது. கிழக்கிலிருந்து வரவேண்டிய சூரியன், இப்போது தெற்குத் திக்கிலிருந்து வருகின்றான் என்று நயம் படக்கூறப்பட்டது.

**பாடல் 22**

**எய்தினன் அனுமனும் எய்தி, ஏந்தல்தன்**
**மொய் கழல் தொழுகிலன் முளரி நீங்கிய**
**தையலை நோக்கிய தலையன், கையினன்,**
**வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி, வாழ்த்தினான்**

**விளக்கம்**

சீதா பிராட்டிகற்புத் திண்மையுடன் இலங்கையில் இருக்கின்றாள் என்ற உண்மையை, இராமபிரான் முதலில் அறிந்து கொள்வதற்காக, அனுமன் தென் திசை நோக்கி வணங்கி, வாழ்த்தினான் என்க. மொய் - வலிமை சீதை, திருமகளின் அவதாரம் என்பதை முளரி நீங்கிய தையல்' என்ற தொடர் காட்டுகின்றது.

**அனுமனின் குறிப்பினால் செய்தி உணர்ந்த இராமனின் மகிழ்ச்சி**

**பாடல் 23**

**திண் திறல் அவன் செயல் தெரிய நோக்கினான்**
**"வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன்**
**கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று" எனக்**

**கொண்டனன், குறிப்பினால் உணரும் கொள்கையான்**

**விளக்கம்**

அனுமன் தென் திசைநோக்கித் தொழுத செய்கையிலிருந்து, இராமபிரான் உணர்ந்து கொண்ட பிராட்டியின் நிலை பற்றிப் பேசப்பட்டது என்க. பிராட்டி வலிநன்: அனுமன் அவளைக் கண்டான், அவன் கற்பும் சிறந்துள்ளது. அதனாலே அவள் இருக்கும் திசைநோக்கி இங்கு முன்னர்த் தொழுகின்றான் என்ற இராமபிரான் ஊகித்து நன்கு அறிந்து கொண்டான் என்பதாம். இராமபிரான் குறிப்பினாலுணருங் கொள்கையான் இங்கித் ஞாஸ்து கோஸலா என்பதையும் நோக்குக.

**பாடல் 24**

**சீதையைக் கண்டு வந்த செய்தியை அனுமன் இராமனிடம் கூறுதல்**

**பாடல் 25**

**“கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,**
**தெண் திரை அலை கடல் இலங்கைத் தென் நகர்**
**அண்டர் நாயக! இனி, துறத்தி, ஐயமும்**
**பண்டு உள துயரும்“ என்று, அனுமன் பன்னுவான்**

**விளக்கம்**

அனுமன், தான்பிராட்டியைக் கண்டதையும், அவன் கற்பின் சிறப்பையும், பிராட்டியிருக்கும் இடத்தையும் இராமபிரானுக்குக் கூறினான் என்பதாம். இக்கவிதையில் உள்ள ஒவ்வொரு சொற்களும், உணரும் தொறும் உணரும் தொறும் கற்பார்க்கு இன்பம் பயப்பனவாகும். ‘கண்டனென்’ என்ற சொல், ‘த்ருஷ்டா ஸீதா’ என்ற முதல் நூல் தொடரைத் தழுவியது. ஆனால், அடுத்துள்ள கற்பினுக்கு அணியை என்ற தொடர், ‘ஸீதா’ என்ற சொல்லைக் காட்டிலும் ஆழ்ந்த, சிறந்த, நுணுக்கமான பொருளை உடையதாகும். ‘கண்டனென்’ என்ற வினைச்சொல்லே கண்ணால் என்றும் கருவியைத் தரும் ஆதலின், ‘கண்களால்’ என்பதைச் சீதையின் கண்களால் என்று கொண்டு பொருள் செய்து. மேனிமுழுவதும் இளைத்து இருந்தமையால் இராமன் கூறிய

அடையாளங்களைக் கொண்டு சீதையை அறிய இயலவில்லை. உள்ளம் காட்டும் கண்களால், அவன் கண்களில் நீ உள்ளமையால் அவளைச் சீதை என்று அறிந்தேன் எனப் பொருள் உரைப்பது சிறந்தது.

**பாடல் 26**

**உன் பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற**
**மன் பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன் -**
**தன் பெருந் தனயை என்னும் தகைமைக்கும், தலைமை சான்றாள்-**
**என் பெருந் தெய்வம்! ஐயா! இன்னமும் கேட்டி" என்பான்**

**விளக்கம்**

நன்மகள்ஒருத்தி, தேவி, மருகி, தனயை என்ற முறைமைப் பெயருக்கு உரியவளாயிருப்பாள். ஆனால், பிராட்டியோ, அம்முறைமைப் பெயர்கள், தன் மூலம் சிறப்படையும் நிலைமைக்குத் தலைமை சான்றவளாயிருக்கின்றாள். பிராட்டி, ஏற்கனவே, தேவி, மருகி, தனயை என்ற அளவில், தம் கணவனாருக்கும், மாமனாருக்கும் தந்தையாருக்கும் சிறப்பு அளிக்கும் நிலையில், உயர்ந்த வாழ்வினளாகத் தான் நடந்து கொண்டிருந்தாள். அது இப்போது வெளிப்படுவது சிறைவாழ்வில். 'பிறருக்கு, உறவு முறையால் பெருமை சேர்த்த பிராட்டி, எனக்குப் பெருந்தெய்வமாகக் காட்சி கொடுத்தாள் என்று அனுமன் தெளிவாகக் கூறினான் என்க.

**பாடல் 27**

**"பொன் அலது இல்லை பொன்னை ஒப்பு என, பொறையில் நின்றாள்,**
**தன் அலது இல்லைத் தன்னை ஒப்பு என் தனக்கு வந்த**
**நின் அலது இல்லை நின்னை ஒப்பு என, நினக்கு நேர்ந்தாள்**
**என் அலது இல்லை என்னை ஒப்பு என, எனக்கும் ஈந்தாள்"**

**விளக்கம்**

நின்றாள், நேர்ந்தாள், ஈந்தாள் என்ற செயல்களின் மூலம் பிராட்டியின் பெருமையை அனுமன் உணர்த்தினான். பிராட்டியின் பொறுமைக் குணத்துக்கு, பொன்

உவமை. பொன், தீயினால் உருக்கப்பட்டும், பின்பு தட்டப்பட்டும், சுடர் விட்டு ஒளிர்வதோடு, பிறர்க்கு அழகு தரும் ஆபரணமாகவும் இருந்து உதவுகிறது. அது போல், பிராட்டி இலங்கைச் சிறையில் துன்புற்றாலும், தானும் கற்புச் சிறப்பு விளங்குவதோடு, இராமபிரான், அனுமன் ஆகியோருக்கும் பெருமை நல்கி உள்ளான். 'பொறையின் நின்றாள்' என்பதை எழுவாயாகவும் கொள்ளலாம்.

**பாடல் 28**

**"உன் குலம் உன்னது ஆக்கி, உயர் புகழ்க்கு ஒருத்தி ஆய**
**தன் குலம் தன்னது ஆக்கி, தன்னை இத் தனிமை செய்தான்**
**வன் குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து,**
**என் குலம் எனக்குத் தந்தாள் என் இனிச் செய்வது, எம் மோய்?**

**விளக்கம்**

ஒரு குலத்தின் பெருமை, அக் குலத்தில் பிறந்த பெண்களிடத்தில் அடங்கியிருக்கின்றது. ஆனால், பிராட்டியோ, பிறந்த குலம், புக்க குலம், வானவர் குலம், வானரர் குலம் அத்தனையையும் பெருமைப் படுத்தி விட்டாள் என்பது பாடலின் கருத்து. இனி, அரக்கர் குலம், அழிவதும், வானவர்குலம் வாழ்வதும், தன் குலம் உலகின் பெருமை பெறுவதும், பிராட்டியின் கற்பால் நிகழக் கூடியது என்பதை, அனுமன் தனது மதி நுட்பத்தால் ஊகித்துத் துணிந்து கூறினான் என்க. மோய் - தாய். எம்மோய் - எம்முடையவனே எனக் கூறி இராமனை நோக்கிய விளியாகயும் ஆக்கலாம்.

**பாடல் 29**

**"விற் பெருந் தடந் தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்,**
**நற் பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்**
**இற் பிறப்பு என்பது ஒன்றும், இரும் பொறை என்பது ஒன்றும்,**
**கற்பு எனும் பெயரது ஒன்றும், களி நடம் புரியக் கண்டேன்.**

**விளக்கம்**

பெண்டிர்க்குரியசிறந்த குணங்கள் குலம், பொறுமை, கற்பு என்பவைகள். அக்குணங்கள் மூன்றும் ஒருங்கு கூடி, பிராட்டியிடம் சேர்ந்து, அவை பெருமை பெற்றன. அதனால், அவைகள் களி நடம் புரிந்தன. தவம் என்பது, தன்னைத் தான் கொண்டு ஒழுகும் நெறி. பெரும் தவம் என்பது, கணவனது வாழ்விலும் தாழ்விலும் உடனிருந்து கற்பு நெறி வழுவாதிருத்தல். நற்பெருந்தவமாவது, தன்னைப் பிறர் பிரித்த நிலையிலும், துன்புறுத்திய நிலையிலும், தனது குடிமை, பொறுமை, கற்பு என்பவைகட்குக் குறைவு நேராது ஒழுகுவது. சீதா பிராட்டி, நற்பெருந்தவத்தளாக விளங்குவதை அனுமன் எடுத்துக் கூறினான் என்க.

**பாடல் 30**

**“கண்ணினும் உளை நீ தையல் கருத்தினும் உளை நீ வாயின்**
**எண்ணினும் உளை நீ கொங்கை இணைக் குவை தன்னின் ஓவாது**
**அண்ணல் வெங் காமன் எய்த அலர் அம்பு தொளைத்த ஆறாப்**
**பண்ணினும் உளை நீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற்று ஆமோ?**

**விளக்கம்**

பிராட்டி, மனம்,மொழி, மெய் என்ற கரணங்களாலும் இராமபிரானைப் பிரியாது இருக்கிறாள் என்பது கருத்து. கண்களில் இருத்தல் உரு வெளித் தோற்றம் வாயின் எண்ணின் இருத்தல் இராமநாமம் கூறுதல். கொங்கை..... புண்ணில் இருத்தல் இராமனைத் தழுவும் பாவனை.

**பாடல் 31**

**“வேலையுள் இலங்கை என்னும் விரி நகர் ஒருசார், விண் தோய்,**
**காலையும் மாலைதானும் இல்லது ஓர் கனகக் கற்பச்**
**சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய**
**சாலையில் இருந்தாள் - ஐய! - தவம் செய்த தவம் ஆம் தையல்.**

**விளக்கம்**

பிராட்டி,இராவணனால் தொடப்படாத கற்புடையவளாக இருக்கின்றாள் என்பது தெரிவிக்கப்பட்டது. பொன் மயமான கற்பகத் தருக்கள் ஒளிவீசுவதால், பகல் இருள் என்ற வேறுபாடு இல்லை சோலையில். அன்றி, மரங்களின் அடர்த்தியால், சூரிய ஒளி புகாத சோலை என்றும், கொள்ளலாம். 'தவம் செய்த தவம் ஆம் தையல்' என்பது பிராட்டியின் கற்புத் தவத்தின் சிறப்பை உணர்த்துகின்றது.

**பாடல் 32**

**"மண்ணொடும் கொண்டு போனான் - வான் உயர் கற்பினாள்தன்**
**புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான், உலகம் பூத்த**
**கண் அகன் கமலத்து அண்ணல், "கருத்திலாள்-தொடுத்தல் கண்ணின்,**
**எண் அருங் கூறாய் மாய்தி" என்றது ஓர் மொழி உண்டு என்பார்.**

**விளக்கம்**

பிராட்டி, தூயசாலையில் இருப்பதற்கும், இராவணன் பிராட்டியைத் தீண்டாமைக்கும் காரணம் கூறப்பட்டது. பிரமன் இராவணனுக்குச் சாபம் இட்ட வரலாறு, திரிசடை மூலம் பிராட்டி அறிந்திருந்தாள். அது (கம்ப 5365) பிராட்டியால் அனுமனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

**பாடல் 33**

**"தீண்டிலன் என்னும் வாய்மை-திசைமுகன் செய்த முட்டை**
**கீண்டிலது அனந்தன் உச்சி கிழிந்திலது எழுந்து வேலை**
**மீண்டில் சுடர்கள் யாவும் விழுந்தில் வேதம் செய்கை**
**மாண்டிலது-என்னும் தன்மை வாய்மையால், உணர்தி மன்னோ!**

**விளக்கம்**

வாய்மை,வாய்மையால் உணர்தி' என இயையும், இராவணன் பிராட்டியைத் தீண்டிலன் என்னும் வாய்மை கடல்கள் எழுந்து பொங்காமை முதலியவற்றால்

அறியக்கிடக்கும். பிராட்டியின் புனிதத் தன்மையால்தான், இயற்கை நிகழ்ச்சிகள் மாறுபடாமல் நிற்கின்றன என்று கூறப்பட்டது.

**பாடல் 34**

**"சோகத்தாள் ஆய நங்கை கற்பினால், தொழுதற்கு ஒத்த**
**மாகத்தார் தேவிமாரும், வான் சிறப்பு உற்றார் மற்றைப்**
**பாகத்தாள், இப்போது ஈசன் மகுடத்தாள் பதுமத்தாளும்,**
**ஆகத்தாள் அல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள்.**

**விளக்கம்**

உயர்ந்தோர்ஒருவரால், மற்றையோரும் சிறப்படைவர் என்பதற்கிணங்க, பிராட்டியின் கற்புச் சிறப்பால், மற்றைத் தெய்வ மகளிர், உமாதேவி, திருமகள் முதலியோரும் சிறப்படைந்தனர் என்பதாம். சிறையிருந்தாள் ஏற்றத்தால் மாதர் குல ஏற்றம் சொல்லுகிறது இச்செய்யுள் என்கின்றான் கம்பன் பரம வைஷ்ணவனாதலின், என்ற பிள்ளை லோகாசாரியர் வாக்கும் நோக்கத்தக்கது.

**பாடல் 35**

**"இலங்கையை முழுதும் நாடி, இராவணன் இருக்கை எய்தி,**
**பொலங் குழையவரை எல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன்,**
**அலங்கு தண் சோலை புக்கேன் அவ்வழி, அணங்கு அ(ன்)னாளை,**
**கலங்கு தெண் திரையிற்று ஆய கண்ணின் நீர்க் கடலில், கண்டேன்.**

**விளக்கம்**

பிராட்டியின்கற்புத் திறத்தை உணர்த்திய பிறகு, அவளைத் தான் கண்டமையை உணர்த்துகின்றான் அனுமன். இராவணன் மாளிகையில் பிராட்டி இல்லை என்பதனால், அவன் வசப்பட்டிலள் பிராட்டி என்பது உணர்த்தப்படுகின்றது. 'கண்களால்' என்பதற்கேற்ப 'அணங்கு அனாளை' 'கண்ணின் நீர்க் கடலில் கண்டேன்' என்று

பாடல் 36

**"அரக்கியர் அளவு அற்றார்கள், அலகையின் குழுவும் அஞ்ச**
**நெருக்கினர் காப்ப, நின்பால் நேயமே அச்சம் நீக்க,**
**இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தி,**
**தருக்கு உயர் சிறை உற்றன்ன தகையள், அத் தமியள் அம்மா!**

**விளக்கம்**

இங்கே அனுமனின் முதற்காட்சி கூறப்பட்டது ஒப்பு நோக்குக. பிராட்டி அசோகவனத்தில் இருந்த நிலை உணர்த்தப்பட்டது. 'நின்பால் கொண்ட நேசமே, அச்சத்தை நீக்கினமையால், அரக்கியர் கொடுமைகட்குச் சினம் கொள்ளாமல், அவரிடம் இரக்கமே காட்டினாள் பிராட்டி' என்று காரணம் காட்டிக் கூறினான் அனுமன் என்க.

பாடல் 37

**"தையலை வணங்கற்கு ஒத்த இடை பெறும் தன்மை நோக்கி,**
**ஐய! யான் இருந்த காலை, அலங்கல் வேல் இலங்கை வேந்தன்**
**எய்தினன் இரந்து கூறி இறைஞ்சினன் இருந்து நங்கை**
**வெய்து உரை சொல்ல, சீறி, கோறல் மேற்கொண்டுவிட்டான்.**

**விளக்கம்**

பிராட்டியின்கற்புத் திண்மையைத் தான் நேரில் காண்பதற்கு நிகழ்ந்த சந்தர்ப்பத்தை, இதன் மூலம் விளக்கினான் அனுமன் என்க.

பாடல் 38

**"ஆயிடை, அணங்கின் கற்பும், ஐய! நின் அருளும், செய்ய**
**தூய நல் அறனும், என்று, இங்கு இனையன தொடர்ந்து காப்ப,**
**போயினன், அரக்கிமாரை, "சொல்லுமின் பொதுவின்" என்று, ஆங்கு**
**ஏயினன் அவர் எலாம் என் மந்திரத்து உறங்கியிற்றார்.**

**விளக்கம்**

அனுமன், பிராட்டியைத் தான் கண்டு பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பினை விவரிக்கின்றான். கோறல் மேற்கொண்டுவிட்ட இராவணனது கொடுமையினின்றும், பிராட்டியைக் காத்த சக்திகளையும் அனுமன் விவரித்துள்ளான். 'என்று இங்கு' - இங்கு இசை நிறைக்க வந்தஅசை நிலை.

**பாடல் 39**

**அன்னது ஓர் பொழுதில் நங்கை ஆர் உயிர் துறப்பதாக**
**உன்னினள் கொடி ஒன்று ஏந்தி, கொம்பொடும் உறைப்பச் சுற்றி,**
**தன் மணிக் கழுத்தில் சார்த்தும் அளவையில் தடுத்து, நாயேன்,**
**பொன் அடி வணங்கி நின்று, நின் பெயர் புகன்ற போழ்தில்,**

**விளக்கம்**

குளகமாக அமைந்த இச்செய்யுள் தொடர், அடுத்த செய்யுளில் சொன்னாள் என்று முடியும். இராமபிரான் திருநாமத்தை அனுமான் உச்சரித்ததே, பிராட்டி சுருக்கிட்டுக் கொண்டு உயிர் மாய்ப்பதைத் தடுத்தது என்க.

**பாடல் 40**

**வஞ்சனை அரக்கர் செய்கை இது" என மனக்கொண்டேயும்,**
**அஞ்சன வண்ணத்தான்தன் பெயர் உரைத்து, அளியை, என்பால்**
**துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம்" என்று உவந்து சொன்னாள் -**
**மஞ்சு என, வன் மென் கொங்கை வழிகின்ற மழைக் கண் நீராள்**

**விளக்கம்**

எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிர் இதின் உதவி உண்டோ' என்று (கம்ப. 5254.) பிராட்டி கூறியதை அனுமன் நினைவுபடுத்திக் கொண்டு சொன்னது இது. எம்பிரான் திருநாமம் கேட்டல் துறக்க இன்பத்துக்குச் சமமானது.

பாடல் 41

**அறிவுறத் தெரியச் சொன்ன, பேர் அடையாளம் யாவும்,**

**செறிவுற நோக்கி, நாயேன் சிந்தையில் திருக்கம் இன்மை**

**முறிவு அற எண்ணி, வண்ண மோதிரம் காட்ட, கண்டாள்**

**இறுதியின் உயிர் தந்து ஈயும் மருந்து ஒத்தது, அனையது-எந்தாய்! ஷ**

விளக்கம்

'மோதிரம் பிராட்டிக்கு உயிர் தந்து ஈயும் மருந்தானது' என்பது, 'வீயும் உயிர் மீளும் மருந்தும் எனல் ஆயது வாழி மணி அழி' என்ற (கம்ப. 5296) காட்சியை நினைத்து அனுமன் சொன்னதாகும்.

பாடல் 42

**ஒரு கணத்து இரண்டு கண்டேன் ஒளி மணி ஆழி, ஆன்ற**

**திரு முலைத் தடத்து வைத்தாள் வைத்தலும், செல்வ! நின்பால்**

**விரகம் என்பதனின் வந்த வெங் கொழுந் தீயினால் வெந்து**

**உருகியது உடனே ஆறி, வலித்தது, குளிர்ப்பு உள் ஊற**

விளக்கம்

மோதிரம், பிராட்டியின் விரகத் தீயால் உருகுதலும், மகிழ்ச்சியாகிய குளிர்ச்சியால் இறுகுதலும் ஆகிய மாறுபட்ட இரு தன்மைகளையும் ஒருகணத்தில் கண்டேன் என்றதாம். விரகம் - பிரிவால் நிகழும் காம வேதனை.

பாடல் 43

**வாங்கிய ஆழிதன்னை, "வஞ்சர் ஊர் வந்ததாம்" என்று,**

**ஆங்கு உயர் மழைக் கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி,**

**ஏங்கினள் இருந்தது அல்லால், இயம்பலள் எய்த்த மேனி**

**வீங்கினள் வியந்தது அல்லால், இமைத்திலள் உயிர்ப்பு விண்டாள்**

**விளக்கம்**

இராமபிரானது திருவாழியைத் தன்கையில் வாங்கிக் கொண்ட பிராட்டியின் செயல்கள் கூறப்பட்டன. ஒன்றைத் தூய்மையாக்கி, தெய்வப் பெற்றியதாகச் செய்வதற்குத் திருமஞ்சனம் செய்ய வேண்டும். வஞ்சர் ஊர் வந்த மோதிரம், தூய்மை இழந்ததால், தனது ஆனந்தக் கண்ணீர் கொண்டு அதனை நீராட்டித் தூய்மைப் படுத்தினாள் பிராட்டி என்பதாம்.

**பாடல் 44**

**அன்னவர்க்கு, அடியனேன், நிற் பிரிந்த பின் அடுத்த எல்லாம்**
**சொல் முறை அறியச் சொல்லி, "தோகை! நீ இருந்த சூழல்**
**இன்னது என்று அறிகிலாமே, இத்துணை தாழ்த்தது" என்றே,**
**மன்ன! நின் வருத்தப்பாடும் உணர்த்தினென் உயிர்ப்பு வந்தாள்**

**விளக்கம்**

பிராட்டியை இராமபிரான் அதுவரை வந்து காணாமைக்குக் காரணம் அவள் இருப்பிடம் அறியாமையே என்பது முன்னமே அனுமன் பிராட்டியிடம் நேரிற் கூறியதும் காண்க. முன் செய்யுளில் உயிர்ப்பு விட்டாள் என்றும் இதில் உயிரிப்பு வந்தான் என்றம் கூறிய நயம் ஒர்க. இதனால் பிராட்டியின் சோக நிலையையும் பின்கொண்ட மகிழ்ச்சியையும் அனுமன் விளக்கிய பெற்றி இங்கு உய்த்துணரத்தக்கதாம்.

**பாடல் 45**

**இங்கு உள தன்மை எல்லாம் இயைபுளி இயையக் கேட்டாள்**
**அங்கு உள தன்மை எல்லாம் அடியனேற்கு அறியச் சொன்னாள்**
**திங்கள் ஒன்று இருப்பென் இன்னே திரு உளம் தீர்ந்த பின்னை,**
**மங்குவென் உயிரோடு" என்று, உன் மலரடி சென்னி வைத்தாள்**

**விளக்கம்**

பிராட்டி, தன்னைமீட்கக் காலக் கெடு வைத்ததை அனுமன் சொன்னானாயிற்று. ‘மலரடி சென்னி வைத்தாள்’ (பெருங்.2 13:37) பாவனை. பிராட்டி திங்களொன்

திருப்பென் என்றது மலரடி சென்னி வைத்துச் சொல்லியது அத்திருவடிகளைச் சாட்சியாக நினைத்து உறுதி கூறியதுமாம்.

**சீதை தந்த சூடாமணியை அனுமன் இராமனிடம் சேர்த்தல்**

**பாடல் 46**

**வைத்தபின், துகிலின் வைத்த மா மணிக்கு அரசை வாங்கி,**
**கைத்தலத்து இனிதின் ஈந்தாள் தாமரைக் கண்கள் ஆர,**
**வித்தக! காண்டி!“ என்று, கொடுத்தனன் - வேத நல் நூல்**
**உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பான்**

**விளக்கம்**

பிராட்டியிடமிருந்து பெற்று வந்த சூடாமணியை அனுமன் இராமனிடம் தந்தது பற்றிக் கூறப்பட்டது. அனுமன் எப்படி, வேத நல் நூல் உய்த்துள காலதத்துவம் வரை புகழோடு இருப்பானோ, அது போன்று, அவன் இப்போது, செய்த இந்த நற்செயலும் என்றும் நிற்கும் என்பது கருத்து. வேத நன்னூல் - வேதங்களாகிய நல்ல நூல்கள் என்றும் கொள்ளலாம்.

**சூடாமணி பெற்ற இராமனது நிலை**

**பாடல் 47**

**பை பையப் பயந்த காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி,**
**மெய்யுற வெதும்பி, உள்ளம் மெலிவுறு நிலையை விட்டான்**
**ஐயனுக்கு, அங்கி முன்னர், அங்கையால் பற்றும் நங்கை**
**கை எனல் ஆயிற்று அன்றே - கை புக்க மணியின் காட்சி!**

**விளக்கம்**

சூடாமணியை இராமபிரான் தன் கையில் கொண்டமை, தன் திருமணக் காலத்தில் பிராட்டியின் கையைப் பற்றியது போன்றிருந்தது. அம்மகிழ்ச்சியினால், ஆசையால் வளர்ந்த மனத் துன்பம் நீங்கிற்று என்பதாம்.

**பாடல் 48**

**"பொடித்தன உரோமம் போந்து பொழிந்தன கண்ணீர் பொங்கித்**

**துடித்தன, மார்பும் தோளும் தோன்றின வியர்வின் துள்ளி**

**மடித்தது, மணி வாய் ஆவி வருவது போவது ஆகித்**

**தடித்தது, மேனி என்னே, யார் உளர் தன்மை தேர்வார்?"**

**விளக்கம்**

இராமபிரானுக்கு அப்பொழுது நேர்ந்த மெய்ப்பாடுகளைத் தெரிந்து உணர்த்துவது எம்மனோர்க்கு இயலாது என்றபடி. பவழம் போன்ற வாய் என்னலும் ஒன்றும் பவழம் மணிகளுள் ஒன்றாகலின் சூடாமணி பெற்ற இராமபிரான் செயலை 'தொண்டை வாய்மயி லிளித்தசூடாமணி யளிப்ப, அண்டர் நாயக னம்மணி கண்மனிக் களித்தான்' பாகவதம் என்று கூறுஞ் சிறப்பும் நோக்கத்தக்கது. இதன் பின் அச்சுப் புத்தகங்களில் பின்வரும் செய்யுளொன்று காணப்படுகின்றது. அது பின் 1296 -ல் கூறப்படும் செய்திக்கு முரணாயிருத்தலாலும் பழமையும் சிறப்பும் பெற்ற சுவடிகளில் இல்லாமையாலும் அதிகப் பாடலாகக் கொள்ளப்பட்டது.

**மேலே செய்வன குறித்து இராமன் விரைதல்**

**பாடல் 49**

**"ஆண்டையின், அருக்கன் மைந்தன், "ஐய! கேள், அரிவை நம்பால்**

**காண்டலுக்கு எளியள் ஆனாள்" என்றலும், "காலம் தாழ,**

**ஈண்டு, இனும் இருத்தி போலாம்" என்றனன் என்றலோடும்,**

**தூண் திரண்டனைய தோளான், பொருக்கென எழுந்து சொன்னான்"**

**விளக்கம்**

பொருக்கென - விரைவுக்குறிப்பு.

**சுக்கிரீவன் கட்டளைப்படி வானர சேனை புறப்படுதல்**

**பாடல் 50**

**“எழுக, வெம் படைகள்!“ என்றான் “ஏ“ எனும் அளவில், எங்கும்**
**முழு முரசு எற்றி, கொற்ற வள்ளுவர் முடுக்க, முந்தி,**
**பொழி திரை அன்ன வேலை புடை பரந்தென்னப் பொங்கி,**
**வழுவல் இல் வெள்ளத் தானை, தென் திசை வளர்ந்தது அன்றே!**

**விளக்கம்**

வள்ளுவர் - முரசறைவிப்போர் இங்கு வானரருள் முரசறைவிப்போரைக் குறித்ததாகும். வெள்ளம் - ஒரு பேரேண் 520 உரை. எழுபது வெள்ள வானர சேனைகள் எழுந்தமை ஏழு கடல்களும் பொங்க எழுந்து சென்றதாக உவமிக்கப் பெற்றது.

**பாடல் 51**

**வீரரும் விரைவில் போனார்**
**விலங்கல் மேல் இலங்கை, வெய்யோன்**
**பேர்வு இலாக் காவற்பாடும்,**
**பெருமையும், அரணும், கொற்றக்**
**கார் நிறத்து அரக்கர் என்போர்**
**முதலிய, கணிப்பு இலாத,**
**வார் கழல் அனுமன் சொல்ல,**
**வழி நெடிது எளிதின் போனார்.**

**பன்னிரு நாளில் அனைவரும் தென் கடல் சேர்தல்**

**விளக்கம்**

வீரா் அனுமன் சொல்ல வழிநெடிது எளிதில் போனார் என்க. வீரா் என்பது சுக்கிரீவன் முதலிய வானர வீரா் அனைவரையும் குறிக்கும் என்பாரும் உளா். வெய்யோன் பேர்வு இலா காவல்பாடும் கொடியோனான இராவணனது சிறிதும்

பெயர்க்க முடியாத கடிய காவற்றன்மையையும் என்று பொருள் கோடலும் அமையும் பெருமை எண்ணிக்கையாலும் வலிமையாலும் பெரிதாய் உள்ள தன்மை கணிதம் கணக்கிட்டுக் கூறும் அளவு அரண், மதில் அகழ் முதலியன வழிச் செல்வோர்க்கு நடையினால் உண்டாகும் சோர்வு தோன்றாதிருக்க கதை சொல்லிக் கொண்டு செல்வது போல அனுமன் இராவணன் பெருமை இலங்கை நகர்ச் சிறப்பு அரக்கர் வலிமை முதலியவற்றைச் சொல்லிக் கொண்டு சென்றான் என்பதாம்.

**பாடல் 52**

**"அந் நெறி நெடிது செல்ல, அரிக் குலத்து அரசனோடும்,**
**நல் நெறிக் குமரர் போக, நயந்து உடன் புணர்ந்த சேனை,**
**இந் நெடும் பழுவக் குன்றில் பகல் எலாம் இறுத்த பின்னர்,**
**பன்னிரு பகலில் சென்று, தென் திசைப் பரவை கண்டார்"**

**விளக்கம்**

சென்ற வழிநீண்டு கொண்டிருந்தமையால், சேனை பன்னிரண்டாம் நாளில், தென் திசைக்கடலைச் சென்று அடைந்தது. இராம இலக்குவர் சுக்கிரீவனுடன் சென்றனர் என்பதாம். 'பகல் எலாம்' - பகல் நேரம் பன்னிருபகல் - பன்னிரண்டு நாள். அங்கதன் முதலினோர் அனுமனை இராமபிரான்பால் முந்திச் செல்ல அனுப்பியது 1256. இரண்டு நாளில் இராம லஷமணர்களோடு சுக்கிரீவன் தன் வானரப் படைகளுடன் இலங்கை நோக்கிப் புறப்பட்ட இரண்டாம் நாளில் அங்கதன் முதலினோர் வந்து அப்படையுடன் சேர்ந்து கொண்டார் என்பதாம். வான்மீகத்தில் இக்காண்டம் பிராட்டி துயர் நீங்கியிருந்தாள் என்று அனுமன் இராமபிரானுக்குச் சொன்ன செய்தியுடன் முடிகின்றது.

## திருவடி தொழுத படலம் கதைச் சுருக்கம்

### வன்வழி மீளும் அனுமன் கும் மகேந்திரத்தில் குதித்தல்

சீதாபிராட்டியிடம் விடை பெற்ற ஆஞ்சநேயன் விரைவாக இராம பிரானை அடைந்து நடந்தவை அனைத்தையும் கூறிட எண்ணினான். அங்கிருந்த ஒரு மலைச் சிகரத்தின் மீது சூரியன் போன்ற தோற்றப் போலிவுடன் விளங்கினான். இவ்வாறு நின்ற

அவன் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டு இராமபிரானின் திருவடிகளை மனதால் தொழுத வண்ணம் வானத்தில் தாவினான்.

தன்னுடைய வருகைக்காக அவலுடன் எதிர்பாரத்திருந்த மைந்நாக மலையை அணுகியதும் அங்கே இறங்கி அதன் ஆசையைத் தீர்த்து வைத்தான். அனுமன் முன்னர் ஒத்துக கொண்டபடி மீண்டும் தன்னிடம் வந்தது பற்றி அந்த மலை பெரிதும் மகிழ்ந்தது.

பின்னர், மைந்நாக மலையிடமிருந்து விடை பெற்று உயரத் தாவி விரைவில் தன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அங்கதன், ஜாம்பவான் முதலிய வீரர்கள் தங்கியிருந்த மகேந்திர மலையில் வந்து இறங்கினான்.

**வானர வீரர்கள் அனுமனைக் கண்டு மகிழ்தல்**

அனுமனைக் கண்டதும் பறவைக் குஞ்சுகள் தம் தாயைக் கண்ட நிலையை அவர்கள் அடைந்தனர். அதுவரை அனுமன் நிலை என்ன ஆயிற்றோ என்று எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததால் அவனைக் கண்டதும் சீதாதேவியைக் கண்டுபிடிக்கச் சென்ற வேலை வெற்றியுடன் முடிந்தது, அனுமன் முடித்துவிட்டான் என்பதை அவன் முகப் பொலிவால் அறிந்து கொண்டு மகிழ்ச்சியால் பூரித்துப் போனார்கள்.

அவனுடைய வெற்றிச் செய்தி கேட்டுப் பெரிதும் புகழ்ந்தார்கள். சிலர் தொழுதார்கள்: பல்வகையான உபசரணைகள் செய்து மகிழ்ந்தார்கள்: சிலர் அவனைத் தழுவி ஆனந்தம் கொண்டார்கள் சிலர் அவனைத் தம் தலை மேல் தூக்கி வைத்து ஆடி மகிழ்ந்தார்கள்

''பெருமைகளையெல்லாம் பெற்றுத் திகழ்பவனே, உன் ஒளிவிடும் திருமுகமே நீ சீதையைக் கண்டு மகிழ்ந்ததை எங்களுக்குச் சொல்லாமல் சொல்லுகிறது. நல்ல வகையான கிழங்குகளையும் தேனையும் கனி வகைகளையும் வைத்திருக்கிறோம், உண்டு இளைப்பாறுக” என்று சிலர் கூறிப் பாராட்டினார்கள்.

அனுமனின் உடலில் எல்லாப் பாகங்களிலும் கொடியவர்களான அரக்கர்கள் வேலாலும் வாளாலும் மற்றுள்ள கருவிகளாலும் ஏற்படுத்திய புண்களைப் பார்த்துப் பார்த்து அவர்களெல்லாம் வேதனையுற்றார்கள்.

**அங்கதன் முதலியோரிடம் அனுமன் சீதை கூறிய ஆசியைத் தெரிவித்தல்**

அனுமன் முதலில் வாலியின் குமாரனான அங்கதனை வணங்கினான் பின்பு கரடிகளின் அரசனான ஜாம்பவானின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். பின்னர் மற்றவர்களுக்கெல்லாம் முறையான தன் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஓரிடத்தில் அமர்ந்து, ”இங்கிருக்கும் அனைவருக்கும் நம் நாயகனான இராமபபிரானின் தேவி சீதாதேவி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்” என்று கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

உடன்தானே அனைவரும் எழுந்து நின்று மகிழ்ச்சி பொங்கும் வண்ணம் சீதாதேவியை வணங்கிப் போற்ற ஆரம்பித்தார்கள். பின்னர் அவர்கள், அவனிடம், ”மிகுந்த வலிமை பொருந்திய நீ. அங்கு கூடத்தவைகளை யெல்லாம் ஒன்றும் விடாமல் வரிசையாகச் சொல்ல வேண்டும்” என்று அன்புடன் கேட்டுக் கொண்டார்கள்.

அனுமன், சீதை தன்னுள்ளத்தில் கொண்ட கற்பு என்னும் உயர் தவத்தின் மேன்மையைக் கூறிப் பின்னர் அவள் அளித்த சூடாமணியைப் பெற்று விபரத்தையும் கூறி, இறுதியில் நடந்த நிகழ்ச்சிகளை இலங்கையைத் தீயிட்டு அழித்தல் போன்றவற்றைக் கூறாமல் விட்டு விட்டான்.

**பிறவற்றைக் குறிப்பால் உணர்ந்து வானர வீரர் வினவுதல்**

நீ என்னதான் மூடி மூடி மறைத்தாலும் உன் தீரச் செயல்களை உன் புண்களே சொல்கின்றன. அந்தப் போரில் நீ வெற்றி பெற்றதையும் இந்த வீரப் புண்களே பெருமையுடன் கூறுகின்றன. அவ்வூரை நீ கொளுத்தி மகிழ்ந்ததை அந்த ஊரின் மேலே தோன்றிய புகையே கூறியது. சீதை உன்னுடன் திரும்பி வராதது அந்தப் பகைவர்களின் வீரத்தைக் கூறுகிறது. இவ்வாறு நாங்களே தெரிந்துகொண்ட பின்னர் நீ

உரைத்து நாங்கள் தெரிந்து கொள்ள என்ன இருக்கிறது?" என்று அந்த வானர வீரர்கள் அனுமனிடம் கூறினார்கள்.

அவன் இதைக் கேட்டுப் புன்னகையுடன் நின்றான்."விரைவில் இராமனிடம், அவன் தேவியைக் கண்டு வந்த செய்தியைக் கூறி அவன் துன்பத்தை நாம் போக்கிட வேண்டும்" என்று கூறியவண்ணம் அவர்கள் விரைவாக எழுந்து சென்றார்கள்.

நீ மட்டும் தனியே சென்று, உன் அன்புக்குரிய எங்களைச் சாவிலிருந்தும் காத்தாய். சிதையை நீ தேடிப் பார்த்து விட்டுத் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற நாள் கடந்து விட்டதால் நாங்கள் எல்லாரும் உண்மையில் சோர்ந்து போனோம். குறிப்பாக உன்னைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்ட நமது வீரர்கள் தங்கள் ஆற்றலை ஓரளவு இழந்துவிட்டனர் என்றுதான் கூற வேண்டும். அதனால், நம் தலைவரிடம் செல்லவேண்டும் என்று அந்த வானரர்கள் கூறிட அனுமன் அதை ஏற்றுக் கொண்டான்.

**சுக்கிரீவன் தேற்ற இராமன் தேறுதல்**

பிரசிரவணமலையில் சீதையைப் பிரிந்த இராமன் துயரத்தால் சோர்வுற்ற போதெல்லாம் அவனுடனிருந்த சுக்கிரீவன் அவனுக்குத் தைரியம் கூறி அவனைத் தேற்றினான். இவ்வாறு சூரியன் மைந்தன் தேற்றும் போதெல்லாம் ஓரளவு மகிழ்ச்சி கொண்டு பின்னும் சோர்வையே அடைந்து வந்தான்.

வடக்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் சென்ற வீரர்கள் எல்லாரும் சீதையைக் காணவில்லை என்று சொன்ன சொல் தன் உயிரை ஓரளவு குடித்துவிட்டது என்று கூறுகின்ற அளவில் தன்னை வருத்தம்படுத்த, தென் திசை சென்ற அனுமன் திரும்பி வராத காரணத்தால் சீதை இறக்கவில்லை, உயிரோடுதான் இருக்கிறாள் என்ற தைரியம் அவனுக்கு வந்தது.

கொடிய துன்பக் கடலில் ஆழ்ந்து வருந்திய இராமன், சூரிய குமாரனான சுக்கிரீவனிடம் இவ்வாறெல்லாம் சில சமயல் புலம்புவான்.

நாம் குறிப்பிட்ட நாட்கள் எல்லாம் முடிந்து போய்விட்டவன தெற்குத் திசை சென்ற அனுமனை இதுவரைக் காணவில்லை. அவன் இறந்தவிட்டனா, அவனுக்கு என்ன நேர்ந்தது என்றே தெரியவில்லை. ஆமாம். இப்படித்தான் இருக்கும். சீதை இறந்துவிட்டாள். இதை அனுமன் தெரிந்து கொண்டான். இந்த இறந்த செய்தியை எவ்விதம் வந்து நம்மிடம் கூறி நம்மையும் வருத்தமடையச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இவனும் இறந்திருப்பான் அல்லது கிடைக்காததால் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறானோ...!"

இவவாறு எதை எதையோ கூறி மேலும் கூறிக் கொண்டிருந்தான். ஒரு வேளை இராவணன் போன்ற பொல்லாத அரக்கர்கள் இவனைக் கண்டு சிறையில் அடைத்து வைத்து விட்டார்களோ... இல்லையேல் இவ்வளவு நாட்கள் ஆக வேண்டியதில்லையே...''

ஒரு வேளை இப்படியும் இருக்கலாம், நாம் கூறி வந்த நாட்களின் எல்லைக்குள் வெக்குள் நம்மால் போக முடியவில்லை, காலம் தாழ்த்தி இனிச் சென்று சொல்வதில் பயனில்லை, என்று எண்ணி அங்கே செல்ல வேண்டாம் என்ற முடிவுடன் தவ வாழ்க்கையில் இறங்கிவிட்டானோ.''

இவ்வாறெல்லாம் இராமன் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை யெல்லாம் சுக்கிரீவனிடம் கூறிக் கூறி மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தான்.

**இராமன் அனுமனைக் காணல்**

இராமபிரான் தன் மனத் துன்பத்தைச் சுக்கிரீவனிடம் சொல்லி வருந்திக்கொண்டிருந்த நேரத்தில், அனுமன் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டான். இரந்து நிற்போர்க்குப் பொன்னை மழையெனப் பொழியும் பெரிய கைகளையுடைய இராமன், அன்பு நிறைந்தவனாய் அனுமனை உற்றுப் பார்த்தான்.

இராமபிரான் இவ்வாறு புலம்பிக் கொண்டிருந்த இடத்தை அனுமன் அடைந்தான். அங்கே இராமனைக் கண்டதும் அனுமன் இராமனுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிக்கவில்லை. இதை விட்டு, தாமரைப் பூவை விட்டு இந்தப் பூமியில் அவதரித்து

இப்போது இலங்கையில் அரக்கியர்களின் பாதுகாவலில் இருந்த சீதையின் திசை நோக்கித் தலைக்கு மேலே கைகளைத் தூக்கிக் குவித்தவனாய் தரையில் விழுந்து வணங்கினான.

**அனுமனின் குறிப்பால் இராமன் மகிழ்தல்**

குறிப்பால் செய்தியை அறியும் ஆற்றல் பெற்ற இராமன் பெரிதும் மகிழ்ந்தான். சீதை உயிரத்துப் பெருமாள் என்பதை விடவும். அவள் கற்பு என்னும் நிறை காத்துப் பெருமையுடன் திகழ்கிறாள் என்பதை அனுமன் சொல்லாமல் சொல்லி விட்டான் என்பதை உணர்ந்து மகிழ்ந்தான் இராமன். இதனால் அவன் தோள்கள் மகிழ்ச்சியில் பூரித்தன. அதுவரை அவன் அடைந்த துயரம் அவனை விட்டு அகன்றது.

**சீதையைக் கண்டதை இராமனிடம் அனுமன் கூறல்**

இராமபிரானிடம் அனுமன் கூறுவான்: ”என் ஐயனே உன்னுடைய மனைவி என்ற உரிமைக்கும். உன்னைப் பெற்ற பெரு மன்னனான தசரதனின் மருமகள் என்ற உயர் சிறப்பிற்கும் மிதிலை மன்னனாம் ஜனகனுடைய மகள் என்ற சிறப்பிற்கும் தகுதி பெற்றவளாக விளங்கும் எம்பிராட்டி சீதாதேவி சிறந்த தெய்வமாகத் திகழ்கின்றாள்.

”பொன்னைப் பொன்தான் ஒத்திருக்குமேயன்றி வேறு எதுவும் ஒத்திருக்காது. சீதைக்கு ஒப்புமை சீதாதேவியே அன்றி வேறு யாராகவும் இருக்க முடியாது என்ற உண்மையைக் கண்டேன். தனககுத் கணவனாய்த் திகழும் உமக்கு நிகர் நீரே என்பதையும், அடிமைத் தொழில் புரிவதில் எனக்கு நிகர் நானே என்பதையும் தெரிவித்தான் அந்தப் பெருந்தேவி!”

எம் அன்னை நிகர் சீதாதேவி, உயர்ந்த புகழைப் பெற்றவள். நாம், ஒருத்தியே என்னும் சிறப்பைப் பெற்றுத் தாம் பிறந்த பெண் குலத்தைத் தன்னால் சிறப்புச் செய்தாள்! இது போன்று தன்னைச் சிறை செய்த இராவணனின் குலத்தைக் கூற்றுவனுக்குக் கொடுத்து தேவர் குலம் மகிழ்வடையச் செய்தாள்! எனது வானர குலத்தை எல்லாரும் புகழும் வண்ணம் உயர் சிறப்பை எனக்குத் தந்தாள். இவற்றை விடவும் அந்தத் தேவி, யாருக்கு என்ன செய்ய வேண்டும்.

**சீதாதேவியின் சிறப்பைத் தெரிவித்தல்**

‘‘பெரிய வில்லை ஒப்பற்ற தோளில் கொண்டு உவகம் போற்ற வாழ்பவனே, கடலால் சூழப்பெற்ற திரிகூட மலையில் திகழும் இலங்கையில் சீதாதேவி என்னும் பெண்ணை நாம் காணவில்லை. உயர்ந்த குடிப்பிறப்பு, பெரியதோர் பொறுமை, உயர்ந்த கற்பின் சுடர் ஆகிய மூன்றையும் ஒரு சேரக் கண்டேன்.”

சீதைவின் ஒவ்வொரு உறுப்பிலும் நீ தான் நிறைந்திருக்கிறாய். கண்களில் மட்டுமன்றி கருத்திலும் எங்குமே நீக்கமற நீ இருந்து அவளிடம் ஆட்சி செய்கிறாய் எனவே நீ அவளை விட்டுப் பிரிந்தாய் என்பதும், அவள் உன்னை விட்டுப் பிரிந்தாள் என்பதும் பொய்யாகும்.

எல்லாம் வல்ல ஐயனே, தவம் செய்த ஒப்பற்ற தவத்தின் பயனாய் ஒப்பற்ற முறையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பொன்னான இலங்கை என்னும் எழிலார்ந்த பரந்த நகரத்தின் ஒரு புறத்தில், காலை மாலை என்ற வேறுபாடே தெரியாதபடி எப்போதுமே ஒளி மயமாகத் திகழ்வதுமான ஒரு கற்பகச் சோலையில் உன் அருமைத் தம்பி இலக்குவன், புல்லைக் கொண்டு அமைத்துக் கொடுத்த புனிதம் நிறைந்த பர்ண சாலையில் வீற்றிருக்கிறாள்.”

‘‘என் தலைவனே, இந்த உலகத்தைப் படைத்தவனும் தாமரை மலரில் வீற்றிருப்பவனுமான பிரம்மன் இராவணனைப் பார்த்து, “உன்னை விரும்பாத ஒருத்தியை நீ வருந்தித் தீண்ட முயன்றால் உன் தலையானது எண்ண முடியாத கூறுகளாய்ச் சிதறி இறப்பாய்“ என்று கூறியதை எண்ணி அஞ்சியவனாக இராவணன் மிக உயர்ந்த கற்புரமயவளபன சீதாதேவியின் புனிதமான திருமேனியைத் தொட அஞ்சித்தான் அந்தப் பர்ணசாலையை நிலத்தோடு பெயர்த்து எடுத்துச் சென்றான்.

‘‘சீதையை இராவணன் தீண்டவில்லை என்னும் உண்மையை பிரம்மன் படைத்த அண்ட கோளம் வெடிக்காததாலும், ஆதிசேடனின் ஆயிரந்தலை பெற்ற படம் கிழிந்து போகாததாலும், கடல்கள் எல்லாம் கரையைக் கடந்து இதுவரைப் பொங்கிப் பாய்ந்து இந்த உலகத்தை அழிக்காததாலும், சூரியன் சந்திரன் போன்ற கிரகங்கள் இதுவரை

கீழே விழவில்லையாதலாலும் வேதங்கள் கூறிடும் விதிகள் அழியாததாலும் நீ உணர்ந்து கொள்ளலாம்.

‘‘உன்னைப் பிரிந்த துன்பத்தை உருடயான். தான் சீதை, ஆனால் கற்பில் சிறந்து ஒப்புயர்வற்று விளங்குகிறாள். அதனால் தேவர்களின் மனைவியர்கள் போற்றி வணங்குவதற்குரிய பெருமையைப் பெற்றுத் திகழ்கிறாள். உமா தேவியும் இப்போது இருப்பது அப்பெருமானின் தலையில்தான் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் திருமாலின் மார்பில் இல்லை, அவன் ஆயிரம் ஆயிரம் திருமுடியின் மேல் இருக்கின்றாள்.”

‘‘நான், அந்த மாநகர் முழுவதும் அலைந்து திரிந்து விட்டுக் காணாததால் வருந்திக் கடைசியில் இராவணன் வசிக்கும் மாளிகை முழுவதையும் “அலசு அலசு என்று அலசி விட்டு அங்கும் இல்லாததால் அங்குள்ள பெண்களையெல்லாம் பொதுவாகப் பார்த்து விட்டு, இறுதியில் மனம் சோர்ந்தவனாய் அசோகவனத்தையும் பாாத்து விடுவது என்று அங்கு நுழைந்தேன். அங்கேதான் தெய்வத்திருமகள் போன்ற சீதாதேவியைக் கண்ணீர்க் கடலின் இடையே கண்டேன்.

‘‘பேய்கள் அஞ்சி நடுங்கும் வண்ணம் பொல்லாத அரக்கியர் சீதாதேவியைக் காத்து வருகின்றார்கள். அதனால் அச்சம் எழுந்தாலும் உன்பால் கொண்ட காதலால் போக்கித் தனித்திருக்கும் தேவி இரக்கம் என்ற உயர் பண்புடன் பெண்ணின் வடிவம் தாங்கி அந்த சிறைக்குள்ளே சிக்கியவளாய் சதா உன் நினைவில் வாழ்ந்து வருகின்றாள்.”

ஐயனே, சீதை என்னும் தேவியை நான் காணக் காத்திருந்தேன். அப்போதுதான் அந்தப் பொல்லாத அரக்கன் தனது பரிவாரங்களுடன் அங்கு வந்து அவளிடம் தன் எண்ணத்தைக் கூறினான். அப்போது தம் தேவி கோபக்கனல் சிந்தி வெளியேற்ற அவன் கோபம் அதிகமாகி அவளைக் கொன்று விடுவதாக அச்சுறுத்திச் சென்றான்.”

**சீதை உயிர்விட முனைந்தபோது தான் தோன்றி இராமநாமம் கூறியதை அனுமன் கூறல்**

‘‘எம் பெருமானே, அப்போது, அவளுடைய உயர் கற்பும் உன் அருளும், நல்ல தூய்மையான அறமும் அவளைக் காப்பாற்றின. இராவணன் அன்று அரக்கியரிடம் சீதைக்குத் புத்தி கூறும்படிச் சொல்லி வீட்டு வெளியேறினான், என் மந்திர வலிமையால் அந்த அரக்கியர் அனைவரும் தூங்க ஆரம்பித்தனர்.

அப்போது நம் தேவி தம் அரிய உயிரை விட்டுவிட எண்ணிப் பார்த்துச் சோலைக்குச் சென்று ஒரு கொடியால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்ய முனைந்தாள். அவ்வேளை நான் தடுத்து அவள் திருவடிகளை வணங்கி உன் திருநாமத்தை உரைத்தேன்.“

‘‘உடன்தானே மேகத்திலிருந்து பெய்யும் மாமழையைப் போலக் தண்ணீர் வெள்ளத்தை உகுத்து நின்றாள். எனது செயலை வஞ்சக அரக்கனின் செயல் என்றுகூட எண்ணினாள். எவ்வி தமும் உன் திருநாமம் உரைக்கப்பட்டதும் என்னிடம், ”என்பால் நீ அருளுடையவன் தான். நான் உயிரைவிட எண்ணிய நேரத்தில் என் தெய்வத்தின் திருநாமத்தைச் சொல்லி நான் பெற இருந்த மரணத்திலிருந்தும் மீட்பாய்’’ என்று உள்ள மகிழ்வோடு உரைத்தாள்.

**கணையாழி கொடுத்ததை உரைத்தல்**

என் தந்தை போன்றவரே, நான் சொன்ன அடையாளங்கள் அனைத்தையும் தனது அறிவினால் ஆராய்ந்த பின் தான் என் மனதில் வஞ்சகம் இல்லை என்று நன்கு தெளிந்து நின்றபோது, நான் உன் அழகிய மோதிரத்தைக் காட்டினேன். அப்போது அந்தத் தேவி பெற்ற மகிழ்ச்சியை நான் எவ்வி தம் எடுத்துரைப்பேன்! உன் ஒப்பரிய மோதிரம் உயிர் காக்கும் சஞ்சீவியாகத் திகழ்ந்தது.

‘‘செல்வனே, ஒளி வீசும் மணி பதித்த அந்த உன் மோதிரத்தை வாங்கிய தேவி அதைத் தன் மார்புற மவத்துக் கொண்டாள். அவ்வாந்த வைத்தால் உன்னைப் பிரிந்ததால் உண்டான வெம்மையால் அந்த மோதிரம் உருகியது உன் அழகிய

மோதிரம் அவள் உடலில் பட்டதால் ஏற்பட்ட ஒப்பற்ற மகிழ்ச்சியினால் பின் பிறந்த குளிரச்சியால், முதலில் உருகிய மோதிரம் உடன்தானே உறைந்துவிட்டது.

‘‘அவள் பெற்ற உன் மோதிரம் வஞ்சகர்களின் பொல்லாத ஊருக்கு வந்து தன் புனிதத்தை இழந்து விட்டது என்று அப்போதே மழை போன்ற அளவு கடந்த கண்ணீரால் அபிஷேகம் செய்து ஏங்கி நின்றாள். இளைத்திருந்த அவள் உடல் உன் மோதிரத்தால் பூரித்தது, வியப்படைந்தாள். மோதிரத்தை இமைக்காது பாத்திருந்தாள், பெருமூச்சும் இடை இடையே விட்டுக் கொண்டிருந்தாள்.

‘‘மன்னவனே, அடியேன் சீதாதேவிக்கு அவள் பிரிந்து சென்ற பிறகு நடந்த செய்திகள் யாவையும் சொல்லிக் கொண்டு வந்தேன். ”மயில் போன்றவளே, நீ இருக்கும் இடம் இது என்பது தெரியாததால்தான் காலதாமதம் ஆனது“ என்று கூறி அவள் பீரிவால் நீ வருந்தும் நிலையினையும் சொன்னேன். அதன் பின்னர்தான் அவன் மூச்சுவிட்டாள்.”

‘‘இங்கு உள்ளவைகளையெல்லாம் என் வாய் மொழியால் கேட்டறிந்தாள் இது போன்று அங்கு உள்ளவைகளையும் நான் அறியும்படிச் சொல்லிக் காட்டினாள். இன்னும் ஒரு மாதம் வரை உயிரோடு இருக்கப் போவதாகவும் இந்த ஒரு மாதம் வரைதான் உயிரோடு இருக்கப் போவதாகவும் இந்த ஒரு மாதம் சென்ற பின்னர் உயிரிழக்கப் போவதாகவும் கூறினாள். இதைக் கூறிய போது உண்மை என்று கூறி உன் திருவடிகளை எண்ணியவளாய் உன்னை வணங்கியவளாயும் கூறினாள்.

**இராமனிடம் சீதை கொடுத்த சூடாமணியை அளித்தல்**

‘‘இவ்வாறு கூறிய பின்னர் தனது மெல்லிய ஆடையில் மிகவும் பத்திரமாக முடிந்து வைத்திருந்த இரத்தினத்தினாலான இந்தச் சூடாமணியை எடுத்து என் கையில் மகிழ்வுடன் தந்து, ”பார்ப்பாயாக என்று கூறி நின்றாள்” என்றுரைத்து, வேத நூல்கள் உய்த்துள்ள காலம் வரை உயர்வுடன் திகழும் அனுமன் சூடாமணியை இராமனிடம் கொடுத்தான்.

இவ்வாறு இந்தச் சூடாமணியை இராமன் பெற்றதும் அவன் உள்ளத்தில் அவளைப் பற்றி இன்ப உணர்வுகள் வளர்ந்து வளர்ந்து பெருகின. அதன் காரணத்தால் உடல் கொதித்து மனம் தளர்ந்த நிலையில் சூடாமணியை அவன் அனுமனிடமிருந்தும் பெற, இராமபிரானுக்குத் தன் திருமணக் காட்சியே நினைவிற்கு வந்தது. வேள்வித் தீயின் முன்னே தன் அழகிய கையால் பற்றப்பட்ட சீதாதேவியின் மெல்லிய திருக்கையைப் போன்ற உணர்வையே அனுமன் அளித்த அந்தச் சூடாமணி கொடுத்தது.

சூடாமணியைப் பெற்ற அவன் மயிர்கள் சிலிர்த்து நின்றன. ஆனந்தக் கண்ணீர் திரண்டு பாய்ந்தது மார்பும் தோளும் பூரித்துத் துடித்தன, வியர்வை பெருக்கெடுத்தது மூச்சு வாங்கியது உடம்பு பூரித்துச் சிறந்தது அவன் தன் தலைவி சீதையை எண்ணியவனாய் துன்ப நினைவுகளில் நீந்திக் கொண்டிருந்தான்.

**மேலே செய்வன குறித்து இராமன் விரைதல்**

அப்போது, சூரியன் மைந்தனான சுக்கிரீவன், ”ஐயனே, கேள். சீதாதேவி நாம் காண்பதற்கு எளியவள் ஆனாள்,” என்று சொன்னவுடன், இராமன் அவளைக் கண்டுவிட்ட மகிழ்வில் ”இதன் பின்னருமா காலதாமதம் செய்து கொண்டு இங்கேயே இருக்கின்றாய் போலும் என்று கூறினான். அப்போது தூண்கள் இரண்டு அமைந்தன போலத் தோள்களைப் பெற்ற சுக்கிரீவன் உடன்தானே எழுந்து தன் சேனைகளுக்கு ஆணையிட்டான்.

**வானர சேனை புறப்படுதல்**

‘‘ஏ என்னும் இந்த நேரத்துக்குள் இந்த வீரப்படைகள் எழுவதாகர் என்று சுக்கிரீவன் ஆணையிட்டான். வீரமுரசு கொட்டும் வள்ளுவர் போருக்கு அறிகுறியாக எங்கும் முரசறைந்தார். சுக்கிரீவன் ஆணை பெற்றதும் வெள்ளம் போலச் சேனைகள் எல்லாம் பொங்கிப் புத்தார்வமுடன் தென் திசை நோக்கிப் பூரிப்புடன் நடை போட்டுச் சென்றது போர்க் குரல் எழுப்பிய வண்ணம்.

**வீரர்கள் எளிதில் வழி நடத்தல்**

வீரர்கள் விரைந்து சென்ற வண்ணமிருந்தனர். திரிகூட மலையின் மேலிரஞ்க்கும் இலங்கையின் மும் அன்ற வீரர்களின் காவல் சிறப்புகளைக் கூறிய வண்ணமும் அவர்களின் இதர தீரத் தன்மைகளைத் தம் படைவீரர்களுக்குக் கூறிய வண்ணமும் சென்று கொண்டிருந்தான் அனுமன். இவ்வாறு அனுமனின் விளக்க உரைகளைக் கேட்ட வண்ணம் சென்ற வானர வீரர்கள நீண்ட் தொலைவை எளிதாகக் கடந்து சென்றார்கள்.

**பன்னிரு நாளில் அனைவரும் தென் கடல் சேர்தல்**

அரிக்குலத்து அரசனான சுக்கிரீவனோடும் நல்நெறி வீரர்களான இராம இலக்குமணர்களோடும் அந்தப் படை வீரர்கள் நீண்ட நெடு வழியில் சென்று கொண்டிருந்தார்கள். இனிய பெரிய சோலைகளின் வழியாகப் பகல் எல்லாம் நடந்து பன்னிரண்டு பகல் பொழுதுகளை இவ்வாறு கழித்து விட்டுப் பன்னிரண்டாம் நாளும் தங்கள் புனித பயணத்தைத் தொடர்ந்து தென் திசையிலுள்ள கடலை அவ்வானர வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரமுடன் கண்டனர்.

## பெரியபுராணம்

இந்நூல் சைவ சமயத்தைச் சார்ந்த சிவனடியார்களின் பெருமையையும், அவர்களின் வரலாற்றையும் விரித்துரைக்கின்றது. இந்நூலை இயற்றியவர் சேக்கிழார். சுந்தரர் எழுதிய திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பி எழுதிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூல்களாகக் கொண்டும், பல தலங்களுக்குச் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டும் சேக்கிழார் இந்நூலை இயற்றியுள்ளார். இந்நூல் இரண்டு காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4253 பாடல்களையும் கொண்டுள்ளது. சைவத்திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். 63 நாயன்மார்களின் வரலாற்றையும், 9 தொகையடியார்களின் வரலாற்றையும் கூறுகின்றது.

**சேக்கிழார்**

இவர் தொண்டை மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர். சோழ நாட்டை ஆண்ட அநபாயச் சோழன் உத்தமச் சோழப் பல்லவன் என்ற பட்டம் கொடுத்து இவரைத் தன் முதல் அமைச்சராக்கிக் கொண்டான். இம்மன்னன் சீவக சிந்தாமணி காப்பியத்தின் மேல் விருப்பம் கொண்டு, சமணத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்ததால், மன்னனின் மனத்தைச் சைவத்தின் மீது திருப்பவே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார் என்பர். இத்திருத்தொண்டர் புராணமே நாளடைவில் பெரிய புராணம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இவரது காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு.

## இளையான்குடி மாறநாயனார் புராணம்

63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம். இதனை இயற்றியவர் சேக்கிழார். இந்நூலுக்கு அவர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் அல்லது திருத்தொண்டர் மாக்கதை. அடியார்களின் பெருமைகளை சேக்கிழார் பாடியதால் தொண்டர்சீர் பரவுவார் என்று வழங்கப்படுகிறார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் நூலில் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாழய கவிவலன் என்று இவரைப் பாராட்டுகிறார்.

சேக்கிழார் இயற்பெயர் அருண்மொழித்தேவர் தொண்டைநாட்டில் புலியுர்க்கோட்டம் அருகில் உள்ள குன்றத்தூர் இவரது ஊர். கி.பி.12-ம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த அநபாயன் என்ற சிறப்புப் பெயருடைய மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அவையில் முதலமைச்சராக இருந்தவர். அப்போது இவருக்கு உத்தமச் சோழ பல்லவன் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சீவக சிந்தாமணியில் அரசன் தன் மனதைப் பறிகொடுத்து இருப்பது கண்டு மன்னனின் மயக்கத்தை நீக்கி சைவத்தின் சிறப்பை உணரச் செய்வதற்காகப் படைக்கப்பட்டது தான் பெரிய புராணம். இந்நூலைப் படைக்க நம்பியாண்டார்

நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும். சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையும் உதவியாக இருந்துள்ளன.

பெரியபுராணம் இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் 4286 விருத்தங்களையும் உடையது. இந்நூலில் 63 நாயன்மார்கள் பற்றியும் 9 தொகை அடியார்கள் குறித்தும் செய்திகள் உள்ளன. இந்நூல் பன்னாரு திருமுறையில் 12-ம் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. இளையான்குடி மாற நாயனார் புராணம் நமக்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

**நாயனாரின் பெருமை**

மாறன் என்ற பெயருடையார் இளையான்குடி என்ற மரபில் தோன்றியதால் இளையான்குடி மாறன் என அழைக்கப்பட்டார்.

**“இயலா விடைச்சென்ற மாதவற்கு இன்னமு தாவிதைத்த**

**வயலார் முளைவித்து வாரிமனை அலக்கால் வறுத்துச்**

**செயலார் பயிர்விழுத் தீங்குறி ஆக்கும் அவன்செழுநீர்க்**

**கயலார் இளையான் குடியுடை மாறன் எங்கற்பகமே!”**

தம்மிடம் வருவோறை விருந்தோம்பிச் சிறப்பித்தலில் சற்றும் சலிக்காதவன் இளையான்குடி மாற நாயனார். இந்நாயனாரின் பெருமையை மேலும் கீழ்வரும் பாடலின் மூலம் அறியலாம்.

**“அம்பொன் நீடிய அம்பலத்தினில்**

**ஆடுவார் அழ சூடுவார்**

**தம்பிறான் அடிமைத்திறந்து உயர்**

**சால்பின் மேன்மேதரித்து உளார்”**

அழகிய பொன்னால் செய்யப்பட்ட அம்பலத்தில் ஆடுகின்ற சிவபிரானின் திருவடிகளை எப்போதும் தலையில் சூடிக்கொள்பவர் சிவபிரானின் அடிமைத்

திறத்திலே உயர்ந்து விளங்கும் பெருமையின் மேன்மையைத் தம்முடையதாகக் கொண்டு வாழ்பவர் நம்பிக்கைக்கு உரியதாகிய சூத்திர நற்குலம் செய்த தவம் காரணமாய் அவதரித்து இந்நிலவுலகை விளக்கச் செய்தவர் இளையான்குடி எனும் மரபில் அவதரித்த மாறன் என்னும் பெயர் கொண்ட பெரியாராவர்.

**"ஏரின்மல்கு வளத்தினால் வரும்**

**எல்லை இல்லது ஓர் செல்வமும்**

**நீரின்மல்கிய வேணாயார் அடி யார்திறந்து நிறைந்தது ஓர்"**

ஏர்த்தொழிலால் சிறந்து விளங்கும் உழவு வளங்களினாலே வரும் உணவும் அவற்றால் பெரும் அளவற்ற பிற செல்வமும். உடையவர் கங்கையினைத் தலையில் கொண்ட சிவனடியார்களின் நிறைந்த அன்பினது மேன்மை பொருந்தும்படியான நிலையான மனமும் இவ்வுலகில் வளர்ந்து நிலவ வேண்டும். அந்தப் பயனை யாம் பெற வேண்டும் என்கிறார்.

**"ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்**

**அன்பர் என்பது ஓர் தன்மையால்**

**நேரவந்தவர் யாவர் ஆயினும்**

**நித்தம் ஆகிய பத்திமுன்"**

தம்மிடம் வந்த அழயவார்கள் எந்தக்குலத்தவராய் இருந்தாலும். எந்தநெறி கொண்டவராய் இருந்தாலும் அன்பினை அடிப்படையாகக் கொண்ட இறைவனின் அன்பினை அடிப்படையாகக் கொண்ட இறைவனின் அன்பர்களே என்று எண்ணி. தாம் அடியவர்கள் மீது கொண்ட பக்தியினால் அவர்களை அழைத்து கைகுவித்து அவர்கள் காதில் நுழையும்படி அன்பான மொழிகளை இனிமை பெற கூறினார்.

**அடியார்களின் அருளைப் பெறல்**

**"கொண்டு வந்து மனைப்புகுந்து**

**குலாவு பாதம் விளக்கியே**

**மண்டு காதலின் ஆதனித்து இடை**

**வைத்து அருச்சனை செய்தபின்"**

தம்முடைய இல்லத்திற்கு அடியவர்களை அழைத்து வந்து. உள்ளே வருவதற்குமுன் தாமரை போன்று ஒளி வீசும் திருவடிகளை நீரால் கழுவி அதன்பின் நிறைந்த அன்பினால் இருக்கையில் அமரச்செய்து மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்தபின்.

சாப்பிடுவதற்குரிய உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பன என்னும் நால்வகை உணவுகளையும் கைப்பு, இனிப்பு, புளிப்பு. உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்னும் அறுசுவை உணவுகளையும் படைத்து அடியார்களின் அருளைப் பெறச் செய்தவர்.

**உயிர்களிடத்தில் அன்பு**

**"ஆளும் நாயகர் அன்பர் ஆனவர்**

**அளவுஇலார் உளம் மகிழவே**

**நாளும். நாளும் நிறைந்து வந்து**

**நுகர்ந்த தன்மையின் நன்மையினால்"**

அனைத்து உயிர்களையும் தம்முடைய உயிர் என்று எண்ணி இறைவனது அடியவரானவர்கள் அளவில்லாதவர்கள் அவர்கள் மனமகிழ்ந்து ஒவ்வொரு நாளும். பெருகி வந்து அமுது படைத்து இவரின் அன்பினை அனுபவித்த தன்மையின் பயனால் நீண்ட செல்வமும் பெருகிட செழிப்போடு நாயனார் வாழ்ந்து வரும் இந்நாளில் நாயனாரின்.

**வறுமை நிலை**

**“செல்வம் மேவிய நாளில் இச்செயல்**

**செய்வது அன்றியும் மெய்யினால்**

**அல்லல் நல்குரவு ஆனபோகினும்**

**வல்லர் என்று அறிவிக்கவே”**

**மல்லல் நீடிய செல்வம் மெல்ல**

**மறைந்து நாள்தொறும் மாறிவந்து”**

செல்வம் மிகுந்திருக்கும் காலத்திலும், துன்பம் விளைவிக்கும் வறுமை வந்த காலத்திலும் அமுது படைக்க வல்லவராவர் என்ற உண்மையை உலகிற்கு அறிவிற்கும் நிலையில் செழித்து ஓங்கி வந்த செல்வம் மெல்ல மெல்ல குறைந்து வறுமை நிலை உற்றபோதும் இறைவனின் திருவருளையே நினைத்திருப்பார்.

**“இன்ன ஆறுவளம் சுருங்கவும்**

**எம்பிரான் இளையான்குடி**

**மன்னன் மாறன் மனம் சுருங்குதல்**

**இன்றி உள்ளன மாறியும்”**

செல்வமும், செல்வத்தால் உண்டான வளமும் நாளுக்குநாள் குறைந்து வந்தாலும் இளையான் குடி மாறனாரின் மனம் மட்டும் சுருங்கவே இல்லை. பொருட்களை விற்றும் கடன் பெற்றும் அடியார் புசையை நிறுத்தாமல் வழக்கம்போல் நடத்தி வந்தார்.

**“மற்றுஅவர் செயல் இன்ன தன்மையது**

**ஆக மால் அயன்ஆன அக்**

**கொற்ற ஏனமும் அன்னமும்**

**தெரியாத கொள்கையர் ஆயினார்"**

செல்வம் குறைந்த போதும் மனம் தளராமல் பெற்ற கடன் மீதும் கவலைப்படாமல் புசையை நிறுத்தாது ஊக்கமுடன் நாயனார் தன் வாழ்வினைச் செலவழித்தார். திருமாலும், நான்முகனும் பன்றியும் அன்னப்பறவை உருவமெடுத்தும் ஈசனின் அடியையும் முடியையும் காணமுடியவில்லை. அத்தகைய சிறப்புடைய சிவபெருமான் உமையம்மையை ஒரு நாளும் மறவாதவர். மேலும் தவவேடத்தினைக் கொண்டு உலகம் வியக்க நாயனார் வீட்டினை அடைந்தார்.

**ஈசனாரின் வருகை**

**"மாறிக் காலத்து இரவினில் வைகியோர்**

**தாரிட்பு இன்றிப் பசிதலைக் கொள்வது**

**பாரித்து இல்லம் அடைந்தபின் பண்புஉற**

**வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன்"**

மழைக்காலத்தில் ஒரு நாள் இரவுப் பொழுதில் தாங்க முடியாத பசியானது வருத்த, தவவேடம் அணிந்த ஈசனார், இளையான்குடி நாயனாரின் இல்லம் புகுந்த பின்னர் குவளை மலர் மாலை அணிந்த நாயனார் வந்த விருந்தினரை வரவேற்றார்.

**நாயனார் மனைவியிடம் கேட்டல்**

ஈரமேனியை நீக்கி இடம் கொடுத்து ஆர இன் அமுது ஊட்டுதற்கு ஆசையால் தார மாதரை நோக்கி தபோதனர் தீரவே பசித்தார் செய்வது என் என்று"

புதியவராய் வந்தவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று அவருடைய மேனியை துணியால் துடைத்து குளிரில்லாத ஒரு நல்ல இடத்தினைக் கொடுத்து அவரை வருத்தும் தீராத பசியைப் போக்குவதற்கு என்ன செய்வேன் என வருந்தி அவருக்கு நல்ல உணவு படைக்க வேண்டும் என்ற பேராசையால் தன் இனிய மனைவியைப் பார்த்து இதற்கு நாம் என்ன செய்வோம் என்று கேட்டார்.

**“நமக்கு முன்பு இங்கு உணவு இலை ஆயினும்**

**இமக்கு லக்கொடி பாகர்க்கு இனியவர்**

**தமக்கு நர்ம இன் அடிசில் தகவுஉற**

**அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே என”**

தன் மனைவியை நோக்கி பெண்ணே நம் வீட்டில் நமக்கு உணவு ஏற்கனவே இல்லை இந்த அடியவர் உமையை ஒரு பாகமாக கொண்ட ஈசனுக்கு இணையானவர். இவருக்கு இனிமையான உணவினை படைக்க வழி என்னவோ?

**“மாது கூறுவள் மற்றுஒன்றும் காண்கிலேன்**

**ஏதிலாரும் இனித்தருவார் இல்லை**

**போதும் வைகிற்றுப் போம்இடம் வேறு இல்லை**

**தீது செய்வினையேற்கு என் செயல் என்று”**

நாயனாரின் மனைவி நாயனாரை நோக்கி அடியார்க்கு உணவு படைக்க ஒரு பொருளும் நம்மிடத்து இல்லை. பிறரிடம் கடன் வாங்கலாம் என்றால் கடன் கொடுப்பவர் எவருமில்லை. ஏனெனில் அனைவரிடமும் நாம் கடன் பெற்று விட்டோம். பொழுதும் போயிற்று. அதனால் செல்வதற்கு இடமும் இல்லை. அடியவர்க்கு இனி செய்வதற்கு என்ன உள்ளது.

**“செல்லல் நீங் கப்பகல் வித்திய செந்நெல்**

**மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால்**

**வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும் மற்று**

**அல்லது ஒன்று அறியேன் என்று அயர்வுஉற”**

நாயனாரின் மனைவியார் அடியவரின் பசித்துயரைப் போக்குவதற்கு இன்று பகல் நாற்றிடுவதற்கு நல்ல செழுமையான சம்பா நெல்லினை விதைத்தோம். அந்நெல் நீரில்

மூழ்கி முளைவிட்டிருக்கும். அந்நெல் முளையை ஒரு கூடையில் எடுத்து வந்தால் அதனை எனக்குத் தெரிந்த முறையில் அமுதாக்குவேன் இதனைத் தவிர வேறு எந்த வழியும் நான் அறியேன் என்றார்கள்.

“மனைவியின் சொற்களைக் கேட்ட நாயனார் மற்று அம்மாற்றம் மனைவியார் கூறமுன் பெற்ற செல்வம் எனப்பெரிது உள்மகிழ்ந்து உற்ற காதலினால் ஒருப்பட்டனர் சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார்”

நெல் முளையை எடுத்துக் கொண்டு வந்தால் சமைக்கலாம் என மனைவி கூறுவதைக் கேட்ட நாயனார் அச்சொற்களை முன் பெற்ற செல்வம் அனைத்தும் மீண்டும் கிடைத்தது போன்று மிகுந்த மகிழ்ச்சியால் தன் மனைவி கூறியதைப் போல அமுது செய்வதற்கு நீர் சூழ்ந்த வயலுக்கு புறப்பட்டார்.

**“பெருகவானம் பிறங்க மழைபொழிந்து**

**அருகு நாப்பண் அறிவுஅரும் கங்குல்தான்.”**

மாறனார் வயலுக்குப் புறப்பட்டபோது விடாது மழை பெய்ததால் வயல் முழுவதும் தண்ணீர் சூழ்ந்து நெற்பயிரே அறிதற்கியலாதபடி இருள் சூழ்ந்து காணப்பட்டது.

**“எண்ணும் இவ்வுலகத்தவர் யாவரும்**

**துண் எனும்பழ தோன்றமுன் தோய்திழல்”**

அவ்விருளின் முன்பு பயப்படாது சென்றால் அவ்விருள் சூழ்ந்த பகுதி பார்ப்பதற்கு கருநிறமிக்க மைக்குழம்பு போன்று காட்சியளிக்கிறதுஅத்தகைய இருள் கொண்ட நடுயாமத்தில்!

**“உள்ளம் அன்புகொண்டு ஊக்க ஓர்பேர் இடாக**

**கொள்ள முன்கவித்துக் குறியின்வழிம”**

நடு இரவில் நாயனார் உள்ளத்தில் இறைவனை நினைத்துக் கொண்டு பெரிய கூடையை எடுத்து தலைமறையும் படி மூழக்கொண்டு பறவைகள் அனைத்தும் உறங்கும் நேரத்தில் வயலுக்குள் சென்றார்.

**“காலினால் தடவிச் சென்று கைகளால்**

**சாலிவெண்முளை நீர்வழிச் சார்ந்தன”**

நாம் செல்லும் வழி சரியானதுதானா! என்று காலினால் தடவிச்சென்று வெள்ளம் பெருக்கெடுக்க ஓரமாய் ஒதுங்கி நெற்பயிரின் முளைகளைக் கைகளால் கோர்த்து தலையில் கவிழ்ந்து வந்த கூடையில் முழுமையாய் நிரட்டி, விரைவாக வீட்டிற்கு வந்தார்.

**“வந்தபின் மனைவியாரும்**

**வாய்தலின் நின்று வாங்கி**

**சிந்தையில் விரும்பி நீரில்**

**சேற்றினை அலம்பி ஊற்றி”**

நாயனாரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த அவர் மனைவியார், தலையிலிருந்த கூடையை வாங்கி, நாம் எதிர்பார்த்தது போல் நெல்முளை கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் நெற்பயிரை கழுவி, சமைத்திட அடுப்பில் தீ மூட்டிட விறகு இல்லையே! என்ன செய்வோம் என நினைத்திட, வீட்டின் கூரையினுள் இருக்கும் நீண்ட குச்சிகளை அறுத்துத் தள்ளினார்.

**“முறித்து அவை அடுப்பின் மாட்டி**

**முளைவித்துப் பதம்முன் கொள்ள”**

மாறனார் வெட்டி வீழ்த்திய கூரைக் குச்சிகளை முறித்து அடுப்பில் வைத்து தீ மூட்டி நெல்முளைகளை வறுத்து, அரிசியாக்கி குற்றியெடுத்து சுத்தம் செய்து நீர் வைத்து உலையிட்டு சிறிதும் சலிப்பின்றி சமைத்தாள், பின்னர் கறி வகைகளுக்கு என்ன செய்வோம்! என்று நாயனாரை வணங்கினாள்.

**“வழிவரும் இளைப்பினோடும்**

**வருந்திய பசியினாலே**

**அழிவு உறும் ஐயன் என்னும்**

**அன்பினின் பொலிந்து சென்று**

**இன்னும் சமையல் முடியவில்லையே!”**

வழியில் வந்த களைப்பாலும், மழையில் நனைந்த சோர்வாலும் பசியில் வருந்துவாரெ! என்று நினைத்து, வீட்டின் பின்புறம் சென்று சிறிய பயிர்க்கீரைகளை கையினால் தடவித் தடவி நிறையக் கீரைகளைக் கொண்டு வந்து தன் மனைவியிடம் கறியாக்காக் கொடுத்தார்.

**“மனைவியார் கொழுநர் தந்த**

**மனம் மகிழ் கறிகள் ஆய்ந்து”**

நாயனார் உள்ளம் மகிழ கொடுத்த கீரைகளை வாங்கி, நீரினால் சுத்தம் செய்து தகுதியான பாத்திரத்திலிட்டு தன் கைப்பக்குவத்தால் பல்வேறு முறைகளில் கீரையைக் கொண்டு கறியைச் சமைத்துத் தந்தாள்.

**“கணவனார் தம்மை நோக்கிக்**

**கறியமுது ஆன காட்டி”**

நல்லமுது செய்த பின்னார், அவளும் தன் கணவரை நோக்கி, உங்கள் விருப்பப்படியே அடியார்க்கு வேண்டிய முறையில் உணவு சமைத்தோம். அடியார் விரைவாக வந்து அமுதினை ஏற்கும்படி நாம் அழைப்போம் என்று கூறி அவரிருக்கும் இடம் சென்று அவரை அழைத்தனர்.

**“அழுந்திய இடருள் நீங்கி**

**அடியேன் உய்ய என்பால்”**

அடியவராக வந்த இறைவனின் துயிலை எழும்பும் நிலையில், அடியவருக்கு அமுதளிக்க வராததால் என்மீது கோபமோ! வருத்தமோ! கொள்ளாது அமுதை உண்டு

பசிதீர வேண்டும்! என்று வேண்டிட, இறைவன் சோதிப் பிழம்பாய் மேலோங்கி நின்றார். இதைக் கண்ட நாயனாரும், அவர் மனைவியாரும் இதென்ன அதிசயம்! என்று வியந்தார்கள்.

**“மால்அயற்கு அரிய நாதன்**

**வடிவு ஒரு சோதி ஆகச்”**

திருமால், நான்முகன் இருவருக்கும் காணவியலாத பெருமான்! சோதி வடிவமாய் தோன்றி நிற்க! அப்பெருஞ்சோதியைக் கண்டு மயங்கிய இருவர்க்கும் சங்கரனாகிய இறைவன் மகிழ்ந்து நறுமணம் கமழும் கூந்தல் கொண்ட உமையம்மையுடன் இய வாகனத்தில் தோன்றி, திருத்தொண்டரை நோக்கி!

**“அன்பனே அன்பர் பூசை**

**அளித்து நீ அணங்கினோடும்”**

அன்பனே! அடியார்க்கு அமுதளிக்கும் பூசையைச் சிறிதும் தவறாமல் காத்துப் பேணி வந்த நீ உன் மனைவியோடும், பேருலகம் சென்று குபேரன்போல் அளவிடற்கரிய பெருநிதி பெற்று, எப்பணியைச் செய்ய வேண்டுமொ அப்பணியைச் செய்து நீண்ட காலம் வாழ்வாயாக! என்று இறையருள் வணங்கினார்.

**“இப்பரிசு இவருக்குத் தக்க**

**வகையினால் இன்பம் நல்கி!**

இப்பரிசினால் இவருக்குத் தகுந்த முறையில் இன்பம் நல்கிய பண்பு முட்புரத்தை எரியச் செய்த ஈசனார் அன்பர் முன் தோன்றி நின்ற நிலையிலிருந்து புகழ்மிக்க நிலைக்கு எழுந்தருளினார். அத்தகைய பெருமைமிகு இளையான்குடி மாறநாயனாரின் திருவடியை வணங்கி அத்துணையால் மெய்ப்பொருள் என்னும் பெயர் கொண்டு சேதி நாட்டு மன்னரின் அருட்பெரும் செயலினை கூறப் போகின்றேன் என்கிறார்.

தம்மிடம் வருவோரை விருந்தோம்பிச் சிறப்பித்தலில் சிறிதும் சலிக்காதவன் இளையான் குடி நாயனார் என்ற கருத்தை இளையான்குடி மாறநாயனார் புராணம் என்ற பாடல் வழி அறிந்து கொண்டோம்.

**வினாக்கள்**

1. அனுமனின் செயலை விளக்குக.
2. சீதையைக் கண்ட அனுமனின் செயலை விளக்குக.
3. சீதையின் சூடாமணியைப் பெற்ற இராமனின் நிலை?
4. திருவடி தொழுதப் படலத்தின் கதைச் சுருக்கம் தருக.
5. பெரிய புராணம் - குறிப்புத் தருக.
6. இளையான்குடி மாறநாயனார் புராணம் குறித்து எழுதுக.

# அலகு - 4

## குமார பருவம் - இரட்சணிய யாத்திரிகம்

### சிலுவைப்பாடு

யூதர்களும் சேவகர்களும் இயேசுநாதரைச் சொல்லாதன சொல்லி எள்ளிப் புறக்கணித்தனர். அவற்றையெல்லாம் இயேசு பொறுத்துக் கொண்டார். பின்னர் செவ்வங்கியைக் களேங்து முன் தரித்திருந்த ஆடையை அணிவித்துச் சிலுவையைச் சுமத்தித் தெருவழியே கொண்டு சென்றனர். சோர்ந்து, வருந்தித் தள்ளாடி கடந்து சென்ருர் இயேசு. அங் கிலேயிற் செல்லும் இயேசுவைக் கண்ட பெண்டிர், பிள்ளைகள், ஏஅனயோர் அசீனவரும் அழுது, புலம்பிப் பலவாறு அரற்றினர் மரியன்னேயின் மனத் துயருக்கோர் அளவே இல்லை: இறுதியில் கொலேக் களத்திற்குக் கொண்டு சென்றனர். இடப் பக்கமும் வலப் பக்கமும் இரண்டு திருடர்களையும் இடையில் இயேசுவையும் சிலுவையில்வைத்து அறைந்தனர். அத்தகு பன்னரிய துயருறும்போதும் அருளாளராகிய இயேசு, இறைவா! அறியாமையாற் செய்யும் இவர் தம் பிழையை மன்னிக்கருவோர் என்று வேண்டிகின்றனர்.

**பொல்லாங்கனைத்தும் பொறுத்துக்கொள்ளல்**

**"பொல்லாத யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்**
**வல்லானை யெள்ளிட் புறக்கணித்து வாய்மதமாய்ச்**
**சொல்லாத கிங்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்**
**பொல்லாங்கை யெல்லாநம் மீசன் பொறுத்திருந்தார்"**

**விளக்கம்**

பொல்லாத யூதச் சமயத்தலைவர்களும் ரோமப்போர்ச் சேவகர்க் கூட்டம் எல்லாம் வல்ல இயேசு பெருமானை இகழ்ந்து பேசிப் புறக் கணித்து வாய்மதம்

கொண்டு சொல்லத்தகாத பழி மொழிகளைச் சொல்லித் துணிந்து செய்கின்ற பொல்லாப்புகளை எல்லாம் நம் இயேசு பெருமான் பொறுத்திருந்தார்.

**பாடல்: 304**

**தன் உயிர் போய் ஆக்கை தலைகீழுற விழுந்து**
**சென்னி தகர்ந்து குடர் சிதறிச் செத்து ஒழிந்த**
**துன்னூஅரிய சாமித் துரோகி செயல் இற்று ஆகப்**
**பன்ூஅரும் நம்மான் சிலுவைப் பாடுகளை உன்னுவாம்**

**விளக்கம்**

தன் உயிர்நீங்கி உடல் தலைகீழாக விழுந்து, மண்டை நொறுங்கிக் குடல் சிதறிச் செத்து ஒழிந்த நினைத்துப்பார்ப்பதற்கும் முடியாத அளவிற்குக் குருத்துரோகம் செய்த யூதாசின்செயல் இவ்வாறு இருக்க, நம்முடைய மீட்பராகிய இயேசுபெருமான் சிலுவையின் மீது பட்ட சொல்லிமுடியாத பாடுகளைப் பற்றிச் சிந்தனை செய்வோமாக (என்று பக்தி என்னும் பெண் சொல்லி மேலும் தொடர்கிறாள்.

**பாடல்: 305**

**பொல்லாத யூதர்களும் போர்ச்சேவகர் குழுவும்**
**வல்லானை எள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்**
**சொல்லாத நிந்தை மொழி சொல்லித் துணிந்து இயற்றும்**
**பொல்லாங்கை எல்லாம் நம் ஈசன் பொறுத்திருந்தார்**

**விளக்கம்**

பொல்லாத யூத சமயத்தலைவர்களும் ரோமப்போர்ச் சேவகர்க் கூட்டம் எல்லாம் வல்ல இயேசு பெருமானை இகழந்து பேசிப் புறக்கணித்து வாய்மதம் கொண்டு சொல்லத்தகாத பழி மொழிகளைச் சொல்லித் துணிந்து செய்கின்ற பொல்லாப்புகளை எல்லாம் நம் இயேசு பெருமான் பொறுத்திருந்தார்.

பாடல்: 306

**புற்று அரவில் சீறிப் புடை வளைந்து புல்லியர்-தாம்**
**துற்றி விளைத்த கொடும் துன்பம் தனி உழந்து**
**முற்றும் கிரகணத்தில் மூழ்கு தினகரன் போல்**
**செற்றம்ᵘஇலாத் தேவᵘமைந்தன் தேசு இழந்து தேம்பினார்**

**விளக்கம்**

புற்றுகளில் இருக்கின்ற பாம்புகளைப் போலச் சினந்துசீறி அந்தக் கீழ்மக்கள் அவரை நெருங்கிச் சூழ்ந்து கொண்டு செய்த கொடிய துன்பங்களைச் சினம் கொள்ளும் தன்மையில்லாத இறை மைந்தனாகிய இயேசு பெருமான் தன்னந் தனியாக இருந்து அனுபவித்து முழுவதுமாகக் கிரகணத்தில் மூழ்கிக் கறுத்துவிடுகின்ற சூரியனைப் போல ஒளியிழந்து வாடினார்.

பாடல்: 307

**செவ் அங்கியைக் களைந்து தேவர் பிரான் முன் தரித்த**
**அ அங்கியைத் தரித்தே ஆகடியம் பல் பேசித்**
**தெவ்வர் குழுமிச் சிலுவை-தனைச் சுமத்திக்**
**கவ்வை நகர் கலுழக் கட்டிக்கொடு போனார்**

**விளக்கம்**

உரோமப் போர்ச்சேவகர் யாவரும் ஒன்று சேர்ந்து மண்ணப்பிலாத்தின் ஆரண்மனை முற்றத்தில் அவருக்கு உடுத்திய சிவப்பான அங்கியைக் களைந்து அவர் முன் அணிந்திருந்த அந்த வெண்மையான அங்கியை அவருக்கு உடுத்துவித்து, ஏளன வார்த்தைகளைப் பேசி பகைவர் அவரின் தோளின் மீது சிலுவையைச் சுமத்தி ஆரவாரம் மிகுந்த எருசலேம் மாநகரின் மக்கள் கண்டு கண்ணீர் விடுமாறு கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள்.

**பாடல்: 308**

> **நோக்கில் அணு ஒவ்வொன்றும் நூறாயிரம் கோடி**
> **மாக் கயத்தின் சும்மை மலிந்த பாவம் திரட்டி**
> **ஆக்கு சிலுவை அமலன் சிரத்து ஏந்திக்**
> **காக்கை கடனாகக் கல்வாரி நோக்கினார்**

**விளக்கம்**

சிந்தனை செய்து பாரத்தால் ஒவ்வொரு அணுவுக்கும் நூறாயிரம் கோடி பொரிய யானைகளின் சுமைக்கு ஒப்பாகக் கருதக்கூடிய சுமை மிகுந்த கொடிய குற்றங்களை ஒன்று சேர்த்து உண்டாக்கிய சிலுவையைக் குற்றமில்லாதா இயேசு பெருமான் தம்முடைய தோள்களில் சுமந்து இவ்வுலக மக்களைக் காப்பாற்றுவதே தம்முடைய கடமையாகக் கொண்டு கல்வாரி மேட்டை நோக்கிச் சென்றார்.

**பாடல்: 309**

> **வள்ளல் குரு ராயன் மன் உயிர்க்காய்த் தன் உயிரை**
> **எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன்**
> **கொள்ளை புரிந்து கொலைத் தீர்ப்புப் பெற்று வரு**
> **கள்ளர் இருவரொடும் கல்வாரி நோக்கினார்**

**பாடல்: 310**

> **மாரணத்தின் கூர் ஒடிய வன் பேய் தலை நசுங்க**
> **ஆரணம் சொல் உண்மை அவனி மிசை விளங்கப்**
> **பூரணமா ரக்ஷணிய புண்ணியம் கைகூடுதற்குக்**
> **காரணமாம் செய்கை முற்றக் கல்வாரி நோக்கினார்**

**பாடல்: 311**

> **ஈசன் சினம் நோக்கி ஈன நரரைப் பிணித்த**
> **பாச வினை நோக்கிப் பரிந்து நடுநின்று வரும்**

**பேசுஅரிய துன்பப் பிரளயத்தை நோக்கி இந்தக்**

**காசினியை நோக்கினார் கல்வாரி நோக்கினார்**

**விளக்கம்**

கொடிய குற்றத்தின் மீதும் கொடிய குற்றச் செயல்களின் இறைவனுக்கு உண்டான சினத்தைக் கருதியும் இழிவான மனிதர்களைக் கட்டி வைத்திருக்கும் கயிறாகிய கொடிய குற்றத்தின் பயனை நோக்கியும், மக்கள் மீது அன்புகொண்டு நேர்மை தவறாத அறத்திலிருந்து புறப்பட்டு வரும் சொல்லுவதற்கரிய துன்பத்தை உண்டாக்கும் பெருவெள்ளத்தைக் கருதியும், அதனால் அழிய இருக்கும் இந்த உலகத்தின் கேட்டினைக் கருதியும் இயேசு பெருமான் அந்தக் கபால மேட்டினை நோக்கி சென்றார்.

**பாடல்: 312**

**அற்புதமும் வானத்து அசரீரியும் புனிதச்**

**சொல் பயில்வும் எல்லாச் சுகுணங்களும் இவரே**

**தற்பரன் என்று ஓலமிடச் சண்டாளர்-தாம் இதனை**

**அற்பமும் எண்ணாதது அறவும் அநியாயம்**

**விளக்கம்**

இயேசு பெருமான் செயத வியத்தகு செயல்களும், வானத்திலிருந்து கேட்கப்பட்ட அசரீரி வாக்கும், புதுமையும் தூய்மையும் வாய்ந்த அவருடைய சொற்களும், மற்றும் அவரிடம் காணப்பட்ட எல்லா உயர்ந்த பண்புகளும் ஆகிய இவைகள் இவரே இறைமைந்தனாகிய கிறித்து என்று எடுத்துக்கூறியும் அக்கொடியவர்கள் இவற்றைச் சிறிதும் எண்ணிப் பாராதது மிகப்பெரிய அநீதியாகும்.

**பாடல்: 313**

**தத்து நீர் வேலித் தராதலத்தோர் செய்த வினை**

**அத்தனையும் தாங்கி அலமந்தும் ஆங்கு அமைந்து**

**சத்தமிடாது ஏகும் தகனபலி மறியாம்**

**உத்தமரும் சாந்தமாய் ஊரூடு செல்கின்றார்**

**விளக்கம்**

அலைவீசும் கடலால் சூழப்பட்ட இவ்வுலக மக்களின் கொடிய குற்றச் செயல்கள் அனைத்தையும் சுமந்து மிகவும் துன்புற்றாலும் யாதொன்றும் தடுமாறிப் பேசாமல் அமைதியாகக் கொலைக் களத்திற்குச் செல்லுகின்ற ஆடு சத்தமில்லாமல் செல்வதைப் போல உலகமக்கிளன் முன்னேற்றத்திற்காகப் பலியிடப்படும் ஆட்டுக் குட்டியாகிய நன்மை செய்யும் கிறித்துவும் அமைதியாகச் சிலுவையைச் சுமந்து கொண்டு எருசலேம் நகரத் தெருக்களின் வழியாகச் செல்கின்றார்.

**பாடல்: 314**

**கை அயர்ந்து வாய் புலர்ந்து கண் இருண்டு காது அடைத்து**
**வெய்ய சிலுவை சுமந்து அலசி மெய் வருந்தித்**
**துய்ய திருஅடிகள் சோர்ந்து நடை தள்ளாடி**
**அய்யன் மறுகு ஊடு வரக் கண்டார் அணி நகரார்**

**விளக்கம்**

கை தளர்ந்து வாய்வறய்டு, கண்கள் இருளடைந்து சென்று அடைந்து கொடிய சிலுவையைச் சுமந்து தடுமாறி உடல் வருந்தி தூய்மையான திருவடிகள் சேர்ந்து நடைதடுமாறி மேலோனாகிய இயேசுபெருமான் எருசலேம் நகரத் தெருக்களின் வழியாக வருவதை அந்த அழகிய நகர மக்கள் கண்டார்கள்.

**பாடல்: 315**

**கல் இயல் வன் நெஞ்ச வஞ்சக் கண்இலாப் பாதகராம்**
**புல்லியரே அன்றி இந்தப் பொல்லாங்கு போந்தமை கண்டு**
**எல்லவரும் தத்தம் உயிர்க்கு இறுதி ஏய்ந்தன போல்**
**அல்லல் உழந்து அலமந்து ஆக்கை நிலை தளர்ந்தார்**

**விளக்கம்**

கல்லைப் போன்ற கடினமாக கொடிய மனத்தையுடைய வஞ்ச அன்பு இல்லாத கொடிய இழிந்தவர்களே அல்லாமல் இயேசு தீமையை, நன்மை செய்யும் தலைவராகிய இயேசுக்கு நினைத்ததைக் கண்டு தம்தம் உயிருக்கு முடிவு வந்து விட்டதைப் போல துன்புற்று அலறி உடல் தளர்ந்தனர்.

**நகர மகளிர் புலம்பல்**

**பாடல் 316**

**மாதருக்குள் ஆசி பெற்ற மங்கலையாம் அன்னை மரி**
**காதலுனுக்கோ இக் கதி நேர்ந்தது என்று மன**
**வேதனைப்பட்டு ஆற்றாது மெல்ஃஇயலார் தாம் குழுமி**
**வீதி இரு மருங்கும் மொய்த்தார் வாய்விட்டு அழுது**

**விளக்கம்**

பெண்களில் இறையாசியைப் பெற்ற பெண்மணியங் அன்னை மரியின் அன்பு மகனுக்கோ இந்தநிலை நேர்ந்தது என்று கூறி மனவேதனைப்பட்டு துன்பத்தைத் தாங்க முடியாமல் அந்நகர மென்மைத் தன்மை வாய்ந்த மகளிர் ஒன்று கூடி தெருக்களின் இருபக்கங்களிலும் நெருங்கி நின்று வாய்விட்டு அழுதனர்.

**பாடல்: 317**

**காந்தள் மலர் செங்கமல மலரைப் புடைப்பப்**
**பூம் தண் கருங்குவளைப் போது நீர் முத்து உகுப்பத்**
**தேம் தளவு தொக்க நறும் சேதாம்பலை அலர்த்தி**
**மாம் தண்டலைக் குயிலின் மென்ஃமொழியார் மாழ்கினார்**

**விளக்கம்**

காந்தன் மலர் போன்ற கைகளால் செந்தாமரை போன்ற முகத்திலுள்ள குளிர்ந்த அழகிய கருங்குவளை போன்ற கண்களைத்தடவ, குவளை மலர்க்கண் அரும்புகளிலிருந்து முத்துக்களாகிய நீர் சிந்த முல்லை மலர் வல்வரிசை போன்று

விளங்க மணம் மிகுந்த செவ்வாம்பல் மலர் போன்ற இதழ்களைத் திறந்து குளிர்ச்சியான சோலைகளில் வாழ்கின்ற கருமையான குயில்கிளன் இசையினைப் போன்ற மென்மையான மொழிகளைப் பேசுகின்ற எருசலேம் நகரமகளிர் ஆழந்து துயருற்றனர். சோலையிலுள்ள காந்தள் மலர் எருசலேம் மகளிரின் கைகளுக்கும் தாமரை மலர் முகத்திற்கும் குவளைமலர் கண்களுக்கும் முல்லை மலர் முத்து போ்ற பல்வரிசைக்கும், செந்நிற ஆம்பல் இதழ்களுக்கும் கருமையான குயிலின் இசை அப்பெண்களின் இனிய மொழிக்கும் உவமையாகளாகக் கூறப்பட்டுள்ளன.

**பாடல்: 318**

**தீ அடைந்த வல்லி எனத் தேம்பிச் செயல் அழிந்தும்**

**மாயும் வகை இன்றாய் மறுகுற்று உயிர் பதைப்பப்**

**போய் அடைந்தது எம்மருங்கும் பொற்பு எருசலேம் நகரத்து**

**ஆய்ூஇழையார் வாய்விட்டு அழுத குரல் ஓசை**

**விளக்கம்**

நெருப்பில் இடப்பட்ட பசுமையான கொடியைப் போல வாடிச் செய்வது இன்னஅதன்று அறியாமல் செயல் அழிந்தும், தங்கள் உயிர் அழியும் வழி இல்லாமல் தெருக்களில் வந்து நின்று அழகிய அணிகளை அணிந்த எருசலேம் நகர மகளிர் உயிர் துடிக்க சேரந்த அவர்கள் சென்று சேரந்த இடமெங்கும் அவர்கள் அழுத குரலோசை சென்று அடைந்தது.

**பாடல்: 319**

**கண்டார் பதைத்தார் கலுழ்ந்தார் கரைந்து அழுதார்**

**கொண்டார் துணுக்கம் கொதித்தார் கடு விடத்தை**

**உண்டார் போல் ஏங்கி உயங்கி நெடிதுயிர்த்துத்**

**திண்டாடி நின்று இனைய செப்புவார் ஆயினார்**

**விளக்கம்**

இயேசு பெருமான் சிலுவை சுமந்து சென்ற காட்சியைக் கண்டவர்கள் பதைத்தார்க்ள கண்ணீர் விட்டடு அழுதார்கள் உள்ளம் உருகினார்கள். நடுக்கம் கொண்டார்கள் மனம் பரபரப்பு அடைந்தார்கள். கொடிய நஞ்சினை உண்டவர் போல ஏங்கி, வருந்தி, பெருமூச்சுவிட்டு இன்ன செய்வது என்று தெரியாமல் நின்று பின்வருமாறு சொல்லலாயினர்.

**பாடல்: 320**

**ஆஆ இது என்ன அறவும் அநியாயம் என்பார்**
**தாவா அறமோ தலைசாய்ந்து இறுவது என்பார்**
**மூவா முதல்வன் முனியாதது என் என்பார்**
**ஓவாது உழல் எம் உயிர்க்கு ஒழிவு இன்றோ என்பார்**

**விளக்கம்**

ஆ! ஆ! இது என்ன? இது முழுவதும் ஆநியாயம் என்று சொல்லுவார்கள். கெடாத அறம் தலைசாய்ந்து அழிவதோ என்பார் என்றும் இளமை குறையாத முதல்வனாகிய இறைமைந்தன் சினம் கொள்ளதது ஏன் என்பார் நீங்காமல் தடுமாறிச் சுழல்கின்ற எம் உயிர்க்கு ஒரு முடிவு வராதோ என்பார்.

**பாடல்: 321**

**இமைந்தன் ஆவிக்கு இறுதி வரக் கண்டு மரி**
**அம்மை உயிர் வாழா அவனி மிசை என்பார்**
**செம்மை திறம்பாத் தூய தேவ சினம் திருகி**
**மும்மை உலகும் முடியும் கணத்து என்பார்**

**விளக்கம்**

இந்த இறைமைந்தனின் உயிருக்கு முடிவுவரக் கண்டு இவரை ஈன்றெடுத்த மரியன்னை இவ்வுலகில் உயிர் வாழமாட்டாள் என்பார்கள் அறநெறி தவறாத தூய இறைவனின் சினம் மிகுந்து எழுந்து ஒரு கணத்தில் மூவுலகும் அழிந்துவிடும் என்பார்.

பாடல்: 322

**மாண்டார் உயிர் அளிக்கும் மா மருந்தை வேரோடு**
**கீண்டு எறிவார் இந்தக் கெடு தோஷிகள் என்பார்**
**கீண்டு எறிவார் இந்தக் கெடு தோஷிகள் எனினும்**
**மீண்டும் முளைக்க ஒரு வேளை வராதோ என்பார்**

**விளக்கம்**

இறந்தவர்க்கு மீண்டும் உயிர்கொடுக்கின்ற சிறந்த மருந்தை வேருடன் தோண்டி எறியப்போகின்றார்கள் இந்தப் பெருந்துரோகிகள் என்பார். அகழ்ந்து எறியப் போகின்றார்கள். இந்தப் பெருந்துரொகிகள் என்றாலும் இறந்த மாமருந்து மீண்டும் முளைத்திட ஒரு காலம் வராதோ என்பார்.

பாடல்: 323

**புன்ஊதொழிலர்க்கு அஞ்சி நடுப் போற்றாது ஊர் பொங்கி அழ**
**மன்று ஓரம்சொல்லி உயிர் வாழ்வதுவோ வாழ்வு என்பார்**
**மன்று ஓரம்சொன்னோன் மனை பாழாய் வன் குடியும்**
**பொன்றி எருக்கு அலரும் பொய்யாது இது என்பார்**

**விளக்கம்**

இழிவானவற்றைச் செய்வதையே தங்களுக்குத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு அஞ்சி, நடுவு நிலைமை என்னும் அறத்தைப் பாதுகாக்காமல், எருசலேம் நகர மக்கள் யாவரும் கொதித்து எழுந்து அழுவதற்குக் காரணமாக நீதிமன்றத்தில் ஒருபக்கமாகச் சார்ந்து சொன்னவனுடைய வீடும் அழிந்து அதில் வாழுகின்ற கொடிய குடிமக்களும் அழிந்து அவர்கள் புதைக்கப்பட்ட இடங்களில் எருக்கஞ் செடிகள் வளர்ந்து பூவிடும் இது பொய்யாகாது என்பார்.

பாடல்: 324

**நள்ளி நர ஜீவ ரக்ஷை நல்க வரும் ஞான குரு**
**வள்ளலுக்கு வன் கொலையும் மா பாதகம் புரிந்த**

**கள்ளனுக்குக் காவல் விடுதலையும் கட்டுரைத்து**
**விள்ளுவதோ நீதி புரி வேந்தருக்குச் சீலம் என்பார்**

**விளக்கம்**

மக்களிடத்தில் அன்பு மிகுந்து அவர்களுக்கு மீட்பனை வழங்க வருகின்ற மெய்யறிவு குருவாகிய அருள்வள்ளலுக்குக் கொலைத் தீர்ப்பும் கொடிய குற்றச் செயல்புரிந்த கள்ளனுக்குச் சிறையிலிருந்து விடுதலை செய்யும் தீர்ப்பும் வழங்குவதோ அறமுறை தெரித்து ஆட்சி செய்ய வேண்டிய அரசர்களுக்கு அழகு என்பார்.

**பாடல்: 325**

**கொல்லாது விட்டுவிடக் கொற்றவன் பல் கால் முயன்றும்**
**பொல்லாருக்கு அஞ்சிப் புகன்றான் கொலை என்பார்**
**பொல்லாருக்கு அஞ்சிப் பொது நீதியைப் புரட்டி**
**அல்லாத செய்வார்க்கு அறம் கூற்றே ஆம் என்பார்**

**விளக்கம்**

இயேசு பெருமானுக்குக் கொலைத் தீர்ப்பு கொடுக்காமல் அவரை விடுதலை செய்ய ஆளுநராகிய பிலாத்து பலமுறை முயன்றான். அது நடக்காததால் கொடியவர்களுக்கு அஞ்சிக் கொலைத்தீர்ப்பு சொனனான் என்பார். கொடியவர்க்கு அஞ்சி யாவருக்கும் பொதுவான அறமுறைக்கு மாறுபட்டு அல்லாதவற்றைச் செய்யும் அரசருக்கு அறமே எமனாகும் என்பார்.

**பாடல்: 326**

**காட்டிக்கொடுத்தோன் கழுத்தில் ஒரு கயிற்றைப்**
**பூட்டி மன வாதையினால் பொன்றினனாம் பொல்லாங்கு**
**சாட்டிக் கொலை புரி சண்டாளர் மனுசாக்ஷியும் தம்**
**பாட்டில் கிடப்பது என்ன பாவம் அதி பாவம் என்பார்**

**விளக்கம்**

காட்டிக்கொடுத்த யூதாசு என்பவன் தன் கழுத்தில் ஒரு கயிற்றைப் பூட்டிக்கொண்டு, மனத்துன்பத்தினால் இறந்துவிட்டான் என்று கூறுகிறார்கள். பொய்க்குற்றம் சாட்டி இயேசு பெருமானைக் கொலை செய்கின்ற பெருங்குற்றவாளிகளின் மனச்சான்றுகளோ ஒரு செயலுமில்லாமல் சும்மா இருப்பது ஏன்? இது குற்றம் இது மாபெருங்குற்றம் என்று சொல்லுவார்கள்.

**பாடல்: 327**

**நிந்தனையாம் செம் நெருப்பு நெஞ்சைக் கொளுத்திடவும்**
**நொந்து ஒரு சொல் சொல்லாத நோன்மை நுனித்து உணரின்**
**மைந்தருக்கு இச் சாந்தம் வருமோ மகேசன் எனும்**
**சிந்தை செறுநருக்குச் சேராதது என் என்பார்**

**விளக்கம்**

பழமொழிகளாகிய செந்தழல் தம்முடைய உள்ளத்தைக் கொளுத்திய போதிலும் நிந்தை பேசுவாரை நொந்து கொண்டு அவர்களுக்கு எதிராக ஒரு வாரத்தையும் சொல்லாத மேலான பண்பைச் சற்று தகுந்த அறிவு கொண்டு சிந்தனை செய்து பாரத்தால் சாதாரண மக்களுக்கு இத்தகைய அமைதி வருமோ? வராதே ஆதலால் இவர் இறைவனே என்னும் எண்ணம் இந்தப் பகைவர்களுக்குத் தோன்றாதது என்ன? என்று பேசுவார்கள்.

**பாடல்: 328**

**செந்தாமரை போல் திகழும் திருவதனம்**
**அந்தோ வதங்கி அழகு குடி போயது என்பார்**
**நந்தாக் கருணை நறாத் துளிக்கும் கண் மலர்கள்**
**சிந்தாகுலம் பொதிந்து தேசு இழந்துவிட்டது என்பார்**

**விளக்கம்**

செந்தாமரை போல் விளங்குகின்ற திருமுகம் அந்தோவாடி அங்கிருந்த அழகு போய்விட்டதே என்பார்கள் குறையாத அருள் என்னும் தேனைச் சிந்துகின்ற கண்களாகிய மலர்கள். மனம் மிகுந்த துயரத்தினால் நிறைந்து ஒளிழிந்துவிட்டது என்பார்கள்.

**பாடல்: 329**

**உன்னத மெய்ஞ்ஞானம் உவந்து குடிகொண்ட திருச்**
**சென்னி புடையுண்டு இரத்தம் சிந்துவதோ செவ்விது என்பார்**
**மன்னு திருªமேனி முற்றும் வார் அடியால் கன்றி நைந்து**
**சின்னமுறல் ஆவதுவோ தெய்வமேயோ என்பார்**

**விளக்கம்**

இறைதன்மை வாய்ந்த மெய்யறிவு மகிழ்ந்து வந்து குடிகொண்டிருந்த மேன்மையான தலை அடிக்கப்பட்டு இரத்த் சிந்துவது செம்மையான தன்மையுடையதாகுமோ? என்பார்கள். அன்பு நிலைத்தருக்கின்ற அழகான உடல் முழுவதும் வார்டியால் சோர்ந்து வருந்தி அற்பமான அடையாளம் ஆகலாமோ? ஓ இறைவ என்பார்கள்.

**பாடல்: 330**

**பெண் நீர்மை குன்றாத பெய் வளையார் இ வண்ணம்**
**புண்ªநீரும் தீயில் புகைந்து ஆர்ªஉயிர் பொடிப்பக்**
**கண்ணீரின் துன்பக் கடற்கு எல்லை காணாராய்**
**எள்ªநீரராய்ச் செல்லும் எம்பெருமான் பின் சென்றார்**

**விளக்கம்**

பெண் தன்மை குறையாத வளையலை அணிந்த பெண்கள் இவ்வாறு தங்கள் குருதி நெருப்பில் இட்டதைப் போலக் கலங்கி அருமையான உயிர் துடிதுடிக்க

கண்ணீர் என்னும் துன்பக் கடலில் விழுந்து எல்லை காணாதவராய்த் துயரம் மிதந்து இயேசு பெருமானுக்குப் பின்னே சென்றனர்.

**பாடல்: 331**

> **மைத் தடம் கண் நீர் சொரிய வாய்விட்டு அழுது அரற்றிச்**
> **சித்தம் உடைந்து தொடர்ந்து வரு சேய்ஊஇழையார்**
> **பத்திமையும் சிந்தைப் பருவரலும் கண்டு இரங்கி**
> **உத்தம சற்போத உபசாந்தர் ஈது உரைப்பார்**

**விளக்கம்**

மைதீட்டப்பட்ட பெரிய கண்களையுடைய பெண்கள், கண்ணீர் சிந்தி வாய்விட்டு அழுது புலம்பி உள்ளம் உடைந்து வருந்தி, தம்மைப் பின்தொடர்ந்து தம்மீது கொண்ட அன்பையும் மனத் துன்பத்தையும் கண்டு அவர்கள் மீது இரக்கம் கொண்டு, நன்மை மிகுந்த இறை செய்திகளைப் போதனை செய்து வந்த அமைதியே வடிவான பின்வருமாறு கூறினார்.

**பாடல்: 332**

> **எருசலேம் புத்திரிகாள் என் பொருட்டுக் கலுழாதே**
> **துரிசூஅற மற்று உம் பொருட்டும் சுதர் பொருட்டும் கலுழ்ந்திடு-மின்**
> **வரிசை பெறு மகப் பெறா மலடிகள் பாக்கியர் என்னா**
> **உரை செறியத் தகும் நாள் இங்கு உளதாம் என்பதை உணர்ந்தே**

**விளக்கம்**

எருசலேம் பெண்களே எனக்காக அழாதீர்கள் குற்றம் நீங்குமாறு உங்களுக்காகவும் உங்கள் பிள்ளுகளுக்காகவும் நீங்கள் அழுங்கள் வழிவழியாகப் பிள்ளைகளைப் பெறம் பெண்களை விட பிள்ளைகளைப் பெறாத மலடிகள் பேறு பெற்றோர் என்ற அறிவுரை கூறத்தகுந்த நாள் இவ்விடத்தில் இப்பொழுதே வந்துள்ளது என்பதை உணர்ந்து கருத்து அடுத்த பாடலிலும் தொடர்கின்றது.

பாடல்: 333

**அன்று புகலிடம் அரிதாய் அவரவரே துயர் விஞ்சிக்**
**குன்றுகளே மலைக் குலமே எமை மூடிக்கொள்ளுதிரால்**
**என்று உரைப்பர் பசுமரத்துக்கு இது செய்வார் எனில் அந்தோ**
**தொன்று உலர்ந்து படு மரத்துக்கு எது செய்யார் துணிவு ஒன்றி**

**விளக்கம்**

அந்த முடிவு நாளில் அடைக்கலம் கிடைப்பது கடினமாய் துன்பம் மிகுந்து அவர்கள் ''குன்றுகளே! மலைகளே! எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்'' என்று புலம்பிக் கூறுவார்கள் ''உயிருள்ள பச்சைமரமாகிய எனக்கு இத்தகைய துன்பம் செய்வார்களானால் ஐயோ! பழங்கால முதல் காய்ந்து பட்டுப்போன மரங்களாகிய உங்களுக்கு ஒன்றுபட்டுத் துணிந்து எதைத்தான் செய்யமாட்டார்கள்?'' என்று இயேசு பெருமான் கூறினார்.

பாடல்: 334

**என்று துயருறு மடவார்க்கு இரங்கி இரும் துயரோடு**
**நன்று மொழிந்து அடர் சுமையால் நலிவு எய்தித் தளர்ந்து ஏகத்**
**துன்று சிலுவையை ஆங்கு ஓர் வழிப்போக்கன் தொடுத்து ஏந்தி**
**ஒன்றி வருக எனக் கொலைஞர் உத்தமரைக் கொடு போனார்**

**விளக்கம்**

என்று இவ்வாறு இயேசு பெருமான் பலவற்றைக் கூறினார். தம்மைப் பின் தொடர்ந்து மிகவும் துன்பப்படும் பெண்களுக்காக இரக்கமுற்று பெருந்துன்பத்தோடு பழமையான மொழிகளை எடுத்துக் கூறினார். தம்மை நெருக்கி அழுத்திய சிலுவையின் சுமையால் துன்பம் அடைந்து உடல் தளர்ந்து சென்றார். அப்பொழுது அவ்வழியாக வந்த வழிப்பயனியை இழுத்து சிலுவையை அவன் மீது ஏற்றி, ''தாங்கி அவனுடன் சேர்த்து வருவாயாக'' ஏ்னறு கொலையாளிகள் மேலோராகிய இயேசு பெருமானைக் கல்வாரிக்குக் கொண்டு போனார்கள்.

பாடல்: 335

**பெண்டிர் எலாம் அழுது அரற்றப் பிள்ளைகள் எலாம் கதறக்**
**கண்டு கேட்டவர் இரங்கிக் கரைந்து உருகிக் கருத்து அழிய**
**மண்டு துயர் எனும் தீயால் வயிறு எரியக் கடி நகரம்**
**பண்டு எரி வீழ்ந்து அழி சோதோம் பதி போலப் பதைத்து ஏங்க**

**விளக்கம்**

எருசலேம் மாநகரப் பெண்கள் அழுது புலம்ப பிள்ளைகள் யாவரும் வாய்விட்டுக் கதற, கண்டவர்களும் கேட்டவர்களும் மனத்தில் இரக்கம் கொண்டு வருந்தி, உருகி எண்ணம் அழிந்து மிகுதியான துன்பம் என்னும் தீயினால் வயிறு பற்றி எரிய பாதுகாவல் மிக்க எருசலேம் நகரம், முன் காலத்தில் பெருந் தீ விழுந்து அழிந்த சோதோம் நகரத்தைப் போலத் துடித்து ஏக்கம் கொண்டது.

பாடல்: 336

**பொருவூஅரிய பரலோகப் புத்தேளிர் புதுமை இதின்**
**மருவுவது எ முடிவோ என்று ஐயுற்று மறுக்கம் உறப்**
**பருவரல் கொண்டு ஐம்பூத பௌதிக மாத்திரையாய**
**சருவ சிருட்டியும் திகைத்துத் தமை மறந்து நிலைகுலைய**

**விளக்கம்**

ஒப்பு இல்லாத விண்ணுலக வானவர்கள், புதுமையான இந்த நிகழ்ச்சியால் வந்து அடையக் கூடியது. எத்தகைய முடிவாக இருக்குமோ என்று ஐயமடைந்து மனக்கலக்கம் கொள்ள, துன்பம் கொண்டு ஐம்பூதங்களான எல்லாப் படைப்புகளும் திகைத்துத் தம்மை மறந்து நிலைகுலைந்து குழப்பம் அடையவும்.

பாடல்: 337

**குழல் நூலில் பிரியாத குருத்துவமார் அருள் சீடர்**
**அழல் அனைய துயர் நலிய அழுது கரந்து உடன் செல்லப்**

**பழுதுஅறு மெய்ப் பரம்பொருளை மகவாக் கொள் பசும்தோகை**

**தழல் இடு பூம் கொடியே போல் சாம்பி உயிர் தளர்ந்து ஏக**

**விளக்கம்**

ஊசியில் நுடைக்கப்பட்ட நூல், ஊசி சென்ற வழியே செல்லுவது போல இயேசு பெருமானைக் குருவாகக் கொண்டு அவர் பின்னே சென்று கொண்டிருந்த சிறப்பு வாய்ந்த அருள் நிறைந்த சீடர்கள், சுடும் தீயினைப் போன்ற துன்பம் வருத்த, அழுது மறைந்து அக்கூட்டத்தினருடன் செல்லவும் குற்றமில்லாத மெய்யான மேலான இறைவனைத்தன் மைந்தனாகக் கொண்ட பசுமையான மயிலைப் போன்ற சாயலையுடைய மரியன்னை தீயிலிட்ட மலரையுடைய கொடி போன்று வாடி உயிர் சேர்ந்து உடன் செல்லவும்.

**பாடல்: 338**

**எண்இலா மறவோர் தம் இகல் நெஞ்சு பறையறைய**

**உள் நிலவு விசுவாசத்து உரவோர் நெஞ்சு உள் அழியப்**

**புண்ணியருக்கு உறும் கொலையின் புணர்ப்பு உன்னிப் பொருமி அழ**

**கண்ணீரும் பெருமூச்சும் ககன துருத்தியில் அடைய**

**விளக்கம்**

மன உறுதிகொண்ட அளவு இல்லாத வீரர்களின் மனம், பறையொலி கேட்டாற் போலத் துடித்துத் திடுக்கிட தங்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற வலிமையான நம்புக்கையுடையவர் மனம் உள்ளழிய, அருள் வள்ளலாகிய இயேசு பெருமானுக்கு நேர்ந்த கொலைத் தண்டனையை எண்ணி விம்மி அழுகின்ற அவர்களின் கண்ணீரும், விடும் பெருமூச்சும் வானவெளியாகிய தோல் பையை அடைந்தன.

**பாடல்: 339**

**இப் பரிசு பெரும் துக்கக் குறி மல்கி எ உயிரும்**

**செப்பஅரிய துயர் உழப்பச் செருசலையைப் புறம் போக்கி**

**ஒப்புஅரிய முது மூலத்து ஒரு பொருளைக் கொண்டு உய்த்தார்**

**மைப்படு வன் மனக் கொலைஞர் வதை புரிவான் கொலைக்களத்தில்**

**விளக்கம்**

இவ்வாறு பெருந்துன்ப அடையாளம் நிறைந்து, எல்லா உயிர்களும் விளக்கிக் கூறமுடியாத துன்பத்தை அடைய எருசலேம் நகரத்தின் வெளிளே ஆதிகால முதல் செயலாற்றுகின்ற ஒப்பற்ற இறைவனை மை போன்ற கருமையான கொடிய மனத்தையுடைய கொலையாளிகள் துன்புறுத்திக் கொலை செய்வதற்காகக் கொலைக்களத்தில் கொண்டு போய்ச் சேர்த்னர்.

**பாடல்: 340**

**ஈண்டு இனி யான் புகல்வது எவன் எம்பெருமான் திருமேனி**
**தீண்டினார் சிலுவையொடு சேர்த்தினார் செம் கையிலும்**
**காண்தகு சேவடியிலும் வெவ் இருப்பாணி கடாவினார்**
**நீண்ட சிலுவையை எடுத்து நிறுத்தினார் நிலம் கீண்டு**

**விளக்கம்**

இவ்விடத்தில் இனி நான் சொல்லுவதற்கு ஏ்னன இருக்கிறது? யான் வணங்கும் இயேசு பெருமானுடைய மேன்மையான உடலைக் கொடுங் குற்றமுள்ள மனிதர்கள் தங்கள் கைகளினால் தொட்டார்கள். சிலுவையோடு சேர்த்துப் படுக்க வைத்தார்கள். அவருடைய நன்மை செய்த செம்மையான கைகளிலும், காணதற்குச் சிறந்த செம்மையான திருவடிகளிலும் கொடிய இரும்பாணிகளை அடித்தார்கள் நிலத்தில் குழிதோண்டி நீண்ட சிலுவையை அக்குழியில் எடுத்து நிறுதினார்கள்.

**பாடல்: 341**

**மற்று இரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்**
**செற்றமொடு குருசு ஏற்றிக் கொலை மாக்கள் செயல் ஒழிய**
**சொற்ற மறைத் திருவசனம் துலக்கமுறச் சுருதி முதல்**
**குற்றவாளிகளோடு நடு நின்றார் குருசு மிசை**

**விளக்கம்**

குற்றவாளிகளாகிய மற்ற இரண்டு திருடரையும் வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் சிலுவையில் அறைந்து கொலைத் தொழில் செய்யும் கயவரின் செயல் முற்றுப் பெற முன் கூறப்பட்ட திருமறை வாக்கியங்கள் நிறை வேற, மறைகளுக்குத் தலைவரான இயேசு பெருமான் சிலுவையில் குற்றவாளிகளோடு நடுவில் தொங்கினார்.

**பாடல்: 342**

**தன் அரிய திருஂமேனி சதைப் புண்டு தவிப்பு எய்திப்**
**பன்ஂஅரிய பல பாடு படும் போதும் பரிந்து எந்தாய்**
**இன்னது என அறிகில்லார் தாம் செய்வது இவர் பிழையை**
**மன்னியும் என்று எழில் கனி வாய் மலர்ந்தார் நம் அருள் வள்ளல்**

**விளக்கம்**

இயேசு பெருமானின் அருமையான தூய்மையான உடலின் தசை சிதைந்து, துன்பமடைந்து, சொல்லுதற்குக் கடினமான பல பாடுகளைப் படுகின்ற சமயத்திலும் தம்மைத் துன்புறுத்தியவர்களிடத்தில் அன்புகொண்டு, ‘‘எம் தந்தையே இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள். இவர்களின் குற்றங்களை மன்னித்தருளும்’’ என்று நம் அருள்வள்ளல் த்ம் அழகுமிகுந்த கொவ்வைக் கனி போன்ற செந்நிற வாய்திறந்து கூறினார்.

**பாடல்: 343**

**இத்தகைய அரும் பொறையும் மனநலமும் இயைந்தவரே**
**வித்தகனுக்கு அடித் தொழும்பர் எனத் தகு மெய்க் கிறிஸ்தவர் மற்று**
**இத்தகைய குணம்ஂஇலரும் கிறிஸ்தவர் என்று இசை பெறுதல்**
**செத்தவரைத் துஞ்சினவர் என உரைக்கும் சீர்மைத்தால்**

**விளக்கம்**

இயேசு பெருமானைப் போன்ற இத்தன்மை வாய்ந்த தன் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளும் அருமையான பொறுமையும் பகைவரையும் மன்னிக்கின்ற நல்ல மனமும் பொருந்தியவரே அறிவான இறைவனின் அடியார்கள் என்று சொல்லத் தகுந்த உண்மைக் கிறித்தவராவர். இத்தன்மை வாய்ந்த நற்பண்பு இல்லாதவர்களைக் கிறித்தவர் என்று சொல்லுவது, இறந்த போனவர்களைத் தூங்குகின்றவர்கள் என்று சொல்லும் தன்மையுடையதாகும்.

**பாடல்: 344**

**கீண்டு இருப்பு முளை உடலைக் கிழித்து உருவி வதைப்புண்டு**
**மாண்டுபடும் போது இவர்க்கு மன்னியும் என்று உரைத்த மொழி**
**ஈண்டு இவரே உலகினுக்கு ஓர் இரக்ஷகர் என்று எடுத்துரைக்கும்**
**வேண்டுமோ இனிச் சான்றும் இதை விடுத்து வேறு ஒன்றே**

**விளக்கம்**

இரும்பு ஆணி உடலைக் கிழித்து, ஊடுருவிச் செல்ல அதனால், அதனால் பல துன்பங்களை அடைந்து இறந்துபடும் வேளையிலும் சிலுவையிலிருந்து இவர்களுக்கு மன்னிப்பு அருளும் என்று கூறிய மொழி இங்கு இவ்வுலக மக்களுக்கு விடுதலை அளிக்கக்கூடிய இறைவன் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறும் இனி இதைத் தவிரித்து வேறு ஒரு சான்று வேண்டுவதில்லை.

**பாடல்: 345**

**மன்றாடும் அருள் சீவ வசனத்தை வன் மறவோர்**
**ஒன்றாகப் பொருள்செய்யார் உடை களைந்து பங்கிட்டார்**
**குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்**
**என்று ஆகடியமான எழுத்து இட்டார் சிலுவை மிசை**

**விளக்கம்**

தங்களுக்காக இறைவேண்டல் செய்கின்ற அருள்மிகுந்த நிலை வாழ்வு மொழிகளை உரோமக் கொடிய போர் வீரர்கள் ஒரு பொருளாக எண்ணாமல் அலட்சியம் செய்து இயேசு பெருமானின் நீண்ட சட்டையைக் கழற்றித் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். குறைவு ஒன்றும் இல்லாத 'நசரேயன் யூதர்குல அரசன்' என்று ஏளனமாக எழுதிச் சிலுவையின் மீது வைத்தனர்.

**பாடல்: 346**

**கேடு அணவு தலைவரொடு கெழுமிய பல் யூதர்களும்**
**மாடு அணவிக் காக்குநரும் வழி வரு புன் மனத்தவரும்**
**பாடு அணவி வருந்தும் நம பரம சுதனைப் பழித்துத்**
**தூடணங்கள் பல பேசித் துணிந்து புறக்கணித்து இகழ்ந்தார்**

**விளக்கம்**

கெடுதியையே சார்ந்து வாழும், தலைவர்களோடு தொடர்பு கொண்ட மிகுதியான யூதர்களும், பக்கத்திலே இருந்து காவல் புரிய வேண்டிய ரோமக் காவலர்களும். அவ்வழியே வரும் இழித்த மனத்தையுடையவரும், மிகுந்த பாடுகளை ஏற்று வருந்தும் நம்முடைய இறைமைந்தனைப் பழிச்சொற்களை மிகுதியாகப் பேசித் துணிந்து பொருட்படுத்தாமல் இகழ்ந்தார்கள்.

**பாடல்: 347**

**வணங்காத முரண் கழுத்தர் வல் உருக்கில் கடினம் உறீஇக்**
**குணம் காணாக் கொடு மனத்தர் கூறிய தீ மொழி ஒன்றோ**
**அணங்கு ஆரும் குருசு மரத்து அறையுண்ட ஒரு திருட்டுப்**
**பிணம் காணா இகழ்ந்ததுவும் பிதற்றியது பெருமானை**

**விளக்கம்**

வணங்காத தன்மையையுடைய முரட்டுக் கழுத்தினையுடைய வரும் வலிமையான இரும்பு உருக்கு எ.்.கினைப் போன்று கடின முற்று, நற்பண்பை அறியாத

கொடிய மத்தினையுடைய வரும் பலதீய வசை மொழிகளைக் கூறினார். அச்சம் மிகுந்த சிலுவை மரத்தில் அறையப்பட்ட இருவரில் ஒரு திருடன் தான் பிணமாகப் போவதை அறியாது இயேசு பெருமானை அறிவில்லாமல் இகழ்ந்து கூறினான்.

**பாடல்: 348**

**அடும் கொலைஞர் பொருட்டு அமலன் அகம் கனிந்த அருள் திறமும்**
**கெடும் கொடியர் உணர்வு இன்றிக் கிளந்த பழி மொழிச் செருக்கும்**
**நடுங்கி உயிர் நலி சோரன் நச்சு மனத்து இயற்கையும் ஓர்ந்து**
**ஒடுங்கு உயிர் மற்றொரு சோரன் உளம் பொறுக்காது உரைக்கின்றான்**

**விளக்கம்**

துன்புறுத்திக் கொல்லும் தொழிலையுடையவர்களுக்காகத் தூய இறைமைந்தனாகிய இயேசு பெருமான், உள்ளம் உருகிக் கூறிய அருள்மொழிகளின் ஆற்றலையும், கேட்டினையுடைய கொடியவர்கள் அறிவு இல்லாமல் இழிவான சொற்களைக் கூறும் அகந்தையையும் அஞ்சி உயிர் அழிவுறும் நிலையில் உள்ள கள்ளனின் நஞ்சு மனத்தன்மையையும் ஆழ்ந்து சிந்தித்த மற்றொரு கள்ளன், தன் மனம் பொறக்க முடியாமல் வாய்திறந்து கூறத் தொடங்கினான்.

**பாடல்: 349**

**எஞ்சுறா மரணத் தீர்ப்பு இயைந்து உழந்தும் ஏழை நீ**
**அஞ்சுவாய்ூஅலையே இ அமையத்தும் அமலனுக்கு**
**நஞ்சு அனைய நமக்கு ஈது நேர்ந்தது மெய் நடுநிலைமை**
**விஞ்சி யாம் விளைத்த கொடு வினைப் பயனை அடைகின்றேம்**

**விளக்கம்**

‘‘தவிர்க்க முடியாத மரணத் தீர்ப்பினைப் பெற்ற வருந்தும் நிலையில் இருந்தும் அறிவல்லாதவனாகிய நீ இறைவனுக்கு இந்த நேரத்திலும் அஞ்சமாட்டாய் நஞ்சினைப் போன்ற கொடியோராகிய தம் இருவருக்கும் நடந்த இது உண்மையாகவே அறமாகும்.

மிகுதியாக நாம் செய்த கொடிய செயல்களுக்கான பயனைத்தான் நாம் அனுபவிக்கிறோம்'' என்றான்.

**பாடல்: 350**

**மற்று இதனை உணராது வன் நெஞ்சோய் மாசுஅணுகா**
**நல் தவனை இகழுவது நன்மையோ நன்மை அலால்**
**குற்றம் இவரிடத்து உளதேல் கூறுதி என்று அறக் கடிந்து**
**தெற்றென உள் குழைந்து உரைத்தான் ஜீவ வழித்-தலை நின்றான்**

**விளக்கம்**

''கொடிய மனத்தினையுடையவனே இந்த உண்மையை நீ அறியாமல் குற்றமில்லாத நல்ல செயல்களையே செய்கினற் சிறந்த வரை இகழ்ந்து கூறுவது நன்மை தரும் செயல் ஆகாது. நன்மையே அல்லாமல் குற்றம் இவரிடத்தில் இருக்கமானால் என்னிடம் சொல்லுவாகாக'' என்று அவனை மிகவும் கடிந்து கொண்டு உண்மையான நிலையைத் தெளிவாக அறிந்துக்கொண்டு நெஞ்சம் நெகிழ்ந்து நிலைவாழ்வின் வழியில் நின்ற அவன் கூறினான்.

**பாடல்: 351**

**உள்ள நாள் முழுதும் மறம் உஞற்றி ஆக்கினை உழக்கும்**
**கள்ளன் இவன் எனினும் மனம் கண்டறிந்த சத்தியத்தைத்**
**தெள்ளிதுடன் வெளிப்படுத்திச் சிந்தை உடைந்து உளம்திரும்பிக்**
**கொள்ளையிடத் துணிந்தான் நித்தியவாழ்வைக் குறிக்கோடி**

**விளக்கம்**

தன்னுடைய வாழ்நான் முழுவதும் கொடுங்குற்றச் செயல்களையே செய்து தண்டனையை அனுபவிக்கும் கள்ளன் இவன் என்றாலும் தன் மனத்தில் கண் அறிந்த உண்மையைத் தெளிவாக வெளிப்படுத்தி (முன் கொள்ளையிட்டவன் இப்போது) மனம் உடைந்து மனம் திரும்பி நிலையான வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு அதனைக் கொள்ளையிடத் துணிந்தான்.

**பாடல்: 352**

**சாக் குறிகள் அடுக்கா முன் தனு கரணம் தளரா முன்**
**மீக் கிளரும் நெடுமூச்சு விரவா முன் விழி மயங்கி**
**நாக் குழறி வீழா முன் நல் உணர்வுற்று அருள் கள்ளன்**
**நோக்கினான் தலை திருமி நுவல்ஒருஅரும் புண்ணியப் பொலிவை**

**விளக்கம்**

(மனம் மாறிய கள்ளன்) தான் இறப்பதற்குரிய அடையாளங்கள் தன்னை நெருங்குவதற்கு முன், தன் உடலும், உடல் உறுப்புகளும் தளர்ச்சி அடைவதற்கு முன், மேலே எழுந்து வரும் பெருமூச்சு தன்னை வந்து அடைவதற்கு முன், கண்களன் ஒளி குறைந்து, நாவின் பேச்சுத் தடுமாறி உடல் தரையில் விழுவதற்கு முன் இயேசுபெருமானின் அருளை நாடிய கள்ளன் நல்ல அறிவு பெற்று தன் தலையைத் திருப்பிச் சொல்லுவதற்கு அரிய அருள் வருவடித்தின் பேரழகைக் கண்டான்.

**பாடல்: 353**

**காண்தகைய பெரும் கருணைக் கற்பகத்தை எதிர் கண்டு**
**மாண் தகைய அன்பினொடு மானதாஞ்சலி வழங்கி**
**ஆண்டகை நும் அரசியலில் அடியேனை நினைந்து அருள**
**வேண்டினேன் என இரந்து வேண்டினான் மிக விரும்பி**

**விளக்கம்**

(மனம் மறிய கள்ளன்) காணுதற்குச் சிறந்த மிகுந்த அருளையுடைய கேட்டதைக் கேட்டவாறு தரும் கற்பக மரத்தைப் போன்ற இயேசு பெருமானைச் சிலுவையில் எதிரே கண்டு மாட்சி மிகந்த அன்புடன் தன் மனதிலே வழிபட்டு, மிகவும் விரும்பி ‘‘ஆண்டவரே உம் ஆட்சியில் வரும்போது அடியோனகிய என்னை நினைத்தருளும் என உம்மை வேண்டுகிறேன் என மிகவும் விரும்பி இரந்து வேண்டிக்கொண்டான்.

## உயிர்த்தெழுந்த காண்டம்

**பாடல்: 426**

**இரு நிலம் உய்யக் கொண்ட எம் பிரான் ஆக்கை ஈமம்**
**மருவியவாறு ஈதாக மறுத்து உயிர்த்தெழுந்த உண்மை**
**திருமுறை கிளக்கும் வண்ணம் தெரிப்பல் என்று அமலன் போற்றிப்**
**பொருவூஅரும் பத்தி என்னும் புனிதை மேல் புகல்வதானாள்**

**விளக்கம்**

இப்பெரிய உலகம் இரட்சிப்படையுமாறு எம்பிரானெடுத்த சரீரம் இடுகாடடைந்த விதம் இவ்வாறிருக்க அவர் மரித்தபின் உயிர்த்தெழுந்த சத்தியத்தை வேதாகமத்தில் சொல்லிய வண்ணம் உனக்கெடுத்துரைப்பேனென்று ஒப்பற்றி பக்தியொன்னும் பெண்ணானவள் கடவுளைத் துதித்து பின்னர் நடந்தவைகளைச் சொல்லலானாள்.

**பாடல்: 427**

**மைந்த கேள் நம் பிரான் இ மா நிலத்து உயிர்த்தெழுந்த**
**விந்தையைத் தரிசித்து ஏத்தும் விழைவினால் விபுதராவார்**
**அந்தரத்து ஈண்டிப் பல்லாண்டு அணி இசை அலர்த்துமா போல்**
**சிந்து நீர்ச் சுனையும் காவும் புள் ஒலி சிறந்த மாதோ**

**விளக்கம்**

மகனே கேட்பாயாக நம்பெருமான் இப்பூலோகத்தில் உயிர்த்தெழுந்த அற்புதத்தை தரிசித்து அவரைத் துதிக்கும் ஆசையால் பரிசுத்தவான்களாவார்கள் ஆகாயத்திலிருந்து மங்கள கீதம் பாடும் தொனியைப் போல ஆற்று நீரோட்டமும் சுனையின் நீரும் சோலையிலுள்ள பட்சி ஜாதிகளின் சப்தமும் விளங்கின.

**பாடல்: 428**

**விண்ணுற நிவந்த நானா வியன் சினைப் பொதும்பர் மென் பூம்**
**சுண்ணமும் மலரும் தீம் தேன் தொகுதியும் வானம் தூய**
**ஒள் நிறப் பனி நீரோடு கலந்து மென் கால் கொண்டு ஓச்சல்**

**புண்ணியன் எழுச்சிக் கோலம் புனைந்து எனப் பொலிந்தது அன்றே**

**விளக்கம்**

வானத்தையளாவும் படி உயர்ந்த பலவிதமான பெரிய மரங்கள் நிறைந்த சோலையில் மருகின்ற பொதுவான புஷ்பங்களிலிருந்து மகரந்தப் பொடியுடன் ஒழுகும் இனிய மலர்த் தேனின் பெருககானது வானத்திலிருந்து வீழுகின்ற பிரகாசமான நிறத்தையுடைய பனி நீரோடு கலந்துதென்றல் காற்றுடன் வீசுதலானது புண்ணிய புருஷன் எழுந்த கோலத்தையடைந்தாற்போல் விளங்கினது.

**பாடல்: 429**

**மருப் படி கமல வாவி மறி திரை முழவம் ஆர்ப்ப**

**அருப்புநாண்மலர் வாய் கிண்டி அழி பசும் தேறல் மாந்திச்**

**சுருப்பு இசை சுருதி காட்டப் புள் ஒலி இசையில் துன்னத்**

**திருப்பள்ளியெழுச்சி கூடும் செவ்வியை ஒத்தது அம்மா**

**விளக்கம்**

வாசனையுடைய கமல மலர்கள் நிறைந்த குளங்களில் மறித்து அடிசகும் அலைகள் மத்தளத்தைப் போல் தொளிக்க அன்று மலர்ந்த அருப்பின் வாயைக் கிளறி அதிலுள்ள இனிய தேனையுண்டு வண்டுகள் சுருதியிசை கூட்ட பட்சிகள் இராகக்கைப் பாட உயிர்த்தெழும் எப்பிரானுக்கு நித்திரையிலிருந் தெழுப்பும் பொருட்டுப்பாடும் கீதத்தையொத்திருந்தது.

**பாடல்: 430**

**கோதிஇலாப் புனித அன்பு குலவு நீர் அகத்து நம்மான்**

**பாத பங்கஜம் மலர்ந்த பரிசு எனப் பளிங்கில் தோன்றும்**

**சீத நீர்ப் பொய்கை எங்கும் செழும் கடி கமழும் தூய**

**மாதர் மென் கமலப் போது வள்ளவாய் மலர்ந்த மாதோ**

**விளக்கம்**

அன்பென்னும் நீரையுடைய குற்றமற்ற பரிசுத்தவான்களது மனமென்னும் குளத்தில் நம பெருமானது பாதங்களாகிய தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்த தன்மையையுடைய கண்ணாடியைப் போலுந் தெளிந்து குளிர்ந்த நீரையுடைய குளங்ளெங்கும் செழித்த வாசைன நிறைந்த பரிசுத்தமான அழகிய மெல்லிய கமலப் புஷ்பங்களின் கிண்ணத்தைப் போன்ற அகன்ற வாய்கள் மலர்ந்தன.

**பாடல்: 431**

**வையகம் புதைத்த கங்குல் வாருணி அற்றம் நோக்கித்**
**துய்ய தண் மதியம் என்னும் துயல்வரு சுறவத்தோடு**
**மையற விளங்கும் வான மீன் ஒளி மழுங்கி மாய**
**வெய்ய வலைஞன் தோன்றான் விடி வலை வீசினானால்**

**விளக்கம்**

பூமியை மறைந்த இருளெனனுங் கடலைச் சமயம் பார்த்து பரிசுத்த குளிர்ந்த சந்திரனென்னும் சுற்றும் சுறா மீனின் குற்றாற்று விளங்கும்வான நட்சத்திரங்களும் ஜோதி குறைந்து மறைந்து போக சூரியன் என்னும் செம்படவன் மரைந்து நின்று விடியற்காலம் என்னும் வலையை வீசினான்.

**பாடல்: 432**

**மெய் கண்ட இடத்துப் பொய்மை வெளுத்து என வெளுத்தது இந்து**
**கைகண்ட களவின் ஆக்கம் கரந்து எனக் கரந்த விண்மீன்**
**பொய் கண்டு மருண்ட உள்ளம் போல் ஒளி இழந்த தீபம்**
**மை கண்ட கங்குல் வாட்டும் வைகறை கண்டு கண்டே**

**விளக்கம்**

மிகக் கரிய இருட்டைப் போக்கும் விடியற்காலத்தைப் பார்த்த அளவிலே உண்மையானது உண்மையே என்று ரூபிக்குங் காலத்தில் பொய்யானது. வெளுத்துப் போவது பேல சந்திரன் வெளுத்துப் போயிற்று. கையிலே வைத்திருந்த திருட்டுப்

பொருளைச் மறைத்து விடுவது போல நட்சத்திரங்கள் மறைந்து போயின. பொய்க் குற்றக்கைச் சாட்டுங்காலத்தில் உண்மையான உள்ளம் மகிழ்ட்சியடைவது போல் தீபங்கள் ஒளியை இழந்தன.

**பாடல்: 433**

**இன்னது ஓர் அமையம்-தன்னில் இரு நில உலகுக்கு எல்லாம்**
**பன்னரு நலத்தவாய பரகதிப் பயனை ஈட்டித்**
**துன்னிய ஜட வியோகத் துயிலுணர் சூழ்ச்சியே போல்**
**உன்னத தேவமைந்தன் உயிர்த்தெழுந்து அருளிப் போந்தார்**

**விளக்கம்**

இத்தகைய நல்ல சமயத்தில் இப்பெரிய உலகத்திற்கு எல்லாம் விஷ்தரிக்க முடியாத நன்மை பொருந்திய மேட்ச கதியின் பயனைச் சம்பாதித்து நிறைந்த நிஷ்டையிலிருந்து கலைந்து எழுந்த தன்மையைப் போல் மேன்மை தங்கிய தேவ குமாரனாகிய எம்பிரான் உயிர்த்தெழுந்தருளிப் போனார்

**பாடல்: 434**

**வார்த்தையாய் நடுவர் ஆகி மன் உயிர்க்கு இரக்ஷை நல்க**
**மூர்த்தியாய்ச் சமாதி கூடி முறை வழாது உயிர்த்தெழுந்த**
**தீர்த்தனைத் தரிசித்து ஏத்தி ஜெயஜெய என்று போற்றிக்**
**கீர்த்தன நறும் பூ மாரி பெய்தனர் கெழுமி விண்ணோர்**

**விளக்கம்**

ஆதியிலே வாரத்தையுமாய் திரித்துவத்தில் நடு நாயமுமாய் மானிடர்கட்கு இரஷிப்பளிக்க இரஷ்ணிய மூர்த்தியுமாணவர் மரணத்துக்குள் அடங்கிய தீர்க்கதரிசன ஒழுங்கு கெடாவண்ணம் ஜீவனடைந்த தெழுந்த பரிசுத்தனது வரவுகண்டு திரணடெழுந்த வானோர்கள் அவரை தரிசித்துப் பலவாறு புகழ்ந்து ஜெய ஜெய வாழ்த்தி சங்கீதத்துடன் புஷ்பமாரி பெய்தார்கள்.

**பாடல்: 435**

**தன்மமும் தவமும் ஓங்கித் தழைத்தன அருள் மெய் வேத**
**கன்மமும் ஒழுக்கும் வல்லே கதித்தன கருணை பூத்த**
**நன்மையும் மெய்மை-தானும் நடம் நவின்று உலகம் எங்கும்**
**வன்மமும் பகையும் தேய வளர்ந்தன மருவி மாதோ**

**விளக்கம்**

உலகமெங்கும் தருமமும் தவங்களும் தழைத்தோங்கி நின்று வளர்ந்தன சத்திய வேதத்திற்கு சொல்லப்படும் காரியங்களும் அதன்படி நடத்தலுமான செய்கைகள் மிகவும் மலிந்தன. கருணை நிறைந்த நன்மை செய்வதும் உண்மைப் பேசி உபசாரஞ் செய்வதுமே நிாத்தனமாடுவது போல் நிறைந்த வளர்ந்தன. இதனால் மூடவைராக்கிய தொலைந்து போயின.

**பாடல்: 436**

**அறம் தலையெடுத்தது ஒல்லை ஆரணத் துழனி ஓங்கிச்**
**சிறந்தது ஜென்ம தோடத் தீக்கருமத்தின் மூழ்கி**
**இறந்து பாழ்பட்டோர் ஆவிக்கு ஈறிஇலா ஜீவன் வந்து**
**பிறந்தது சுகிர்த போதம் பிறங்கியது அவனி எங்கும்**

**விளக்கம்**

உலக முழுவதும் தருமமானது தலையெடுத்து விளங்கியது. பழமையான வேதத்தின் ஓசையானது கூறக கேட்கப்பட்டுச் சிறந்தோங்கி நின்றது ஜென்ம தோஷத்தீய கருமத்துள்ளேயே மூழ்கிக் கிடந்து இறந்து பாழாகினவர்களின் ஆவிக்குங்கூட இப்பொழுது அழிவிலாத ஜீவன் கிடைத்தது. ஒவ்வொருவருக்கும் சுகானந்த போதம் தும்பி விளங்கியது.

**பாடல்: 437**

**ஆய பேரஅன்பு மல்கும் ஆழியின் உதித்து மாந்தர்**
**மீ உயர் விண்ணோராக விளங்கு புண்ணிய வேதாந்த**

**ஆயிரம் கரங்கள் ஓச்சி அலர் பரஞ்சுடரைக் காண்பான்**

**சே ஒளி பரப்பிக் கீழ்-பால் தினகரன் உதயம் செய்தான்**

**விளக்கம்**

நிலைபெற்ற பெரிய அன்பு பொருந்திய கடலினிடத்தே யுதித்து மனிதவர்க்கங்களைப் பெருமை தரும் உயர்ந்த விண்ணோராக விளங்கும்படி செய்யும் புண்ணியம் பொருந்திய வேதசாஸ்திர ஞானபோதத்தின் ஆயிரங் கிரணங்களைப் போன்று தன்னுடைய கிரணங்களென்னும் கரங்களை நீட்டிக்கொண்டு சிவந்த ஒளியை வீசிக் கொண்டு எக்காலத்தும் பிரகாசத்தைத் தருகின்றவரும் அவைகளுக்கும் மேலான சுடராக விளங்குறவருமாகிய எம்பெருமான் செல்வதன் தரிசனத்தைக் காணும்பொருட்டுச் சூரியன் கீழக்குத் திசையிலிருந்து புறப்பட்டான்.

**பாடல்: 438**

**நிருமல மூர்த்தி ஏவ நிரைய பாதலம் புகுத்தி**

**வருமம் மிக்கு உரத்த பேயை வன் சிறைப் படுத்தி மீண்டும்**

**கரும பூமியிலே தம்மான் கழல் நிழல் கருதி வந்த**

**தரும சக்கரமே என்னத் தயங்கினன் தபனன் மாதோ**

**விளக்கம்**

ஜெகதீசன் ஆகக்கியாபித்த வண்ணம் வைராக்கியம் மிகுந்த சாத்தானை நரகமாகிய பாதாளத்திலே அழுந்தவிட்டு மீண்டும் மக்களைத ் துன்புறுத்தா வண்ணம் அப்பேயைப் பாதாளத்திலேயே சிறையிட்டு தம்முடைய பிதாவாகிய சர்வேஸ்வான் திருவடிகளை நினைந்த வண்ணம் இக்கரும வினைக் குரித்தான பூமியிலே உயிர்த்தெழுந்து மீண்டும் வந்த தரும சக்கரமாகிய நமது ஏசுபிரானுக்கு கொப்பென்று யாவரும் நினைக்க சூரியன் மேலெழுந்து விளங்கினான்.

**பாடல்: 439**

**ஜெகம் எலாம் கெடுத்த பேயைச் சிதைத்து அழல் சிறைக்குள் ஆக்கிச்**

**சகலமும் அடிப்படுத்த தன் ஒரு குமரேசற்குப்**

**பகவனாம் பரம தாதை பரிவுடன் தரித்த வெற்றி**

**மகிமை ஒண் மௌலி போலும் திகழ்ந்தனன் வயங்கு வெய்யோன்**

**விளக்கம்**

உலக முழுவதையுங் கெடுத்த சாத்தானை அழித்து அக்கினியினின்று மீளாத சிறைக் குள்ளாக்கி சர்வ ஜீவர்களும் தனக்குத் தொண்டு புரியுமாறு செய்வித்த தனது ஒப்பற்ற குமரேசற்குக் கடவுளாகிய பரமதாதை அவ்வெற்றிக் கடையாளமாக அவர் அன்புடன் சூட்டிய மகிமை பொருந்திய கிரீடத்தைப் போலும் சுடரை விரித்துச் சூரியன் விளங்கினான்.

**பாடல்: 440**

**அலகுஇலா உயிர்கள் எல்லாம் அரும்பெறல் மகிழ்ச்சி பூத்த**

**குலவு கோடு ஆதி ஆய கொழும் கடி மலர்கள் பூத்த**

**விலகஅரும் அவித்தை நீங்கி மெய் ஒளி உளம் திகழ்ந்தது**

**உலகு சூழ் கங்குல் நீங்கி உதயமும் திகழ்ந்தது எங்கும்**

**விளக்கம்**

எண்ணிக்கைக் கடங்காத ஜீவகோடிகள் எல்லாம் பெறுவதற்கு கருமையான சந்தோஷத்தால் நிறைந்தன. பொருந்திய கொம்பு முதலிய ஐந்துவகை வாசனையுள்ள புஷ்பங்கள் பூத்தன. நீக்குவதற்கு இயலாத அஞ்ஞானம் நீங்கி மனிதர்களின் இருதயத்தில் மெஞ்ஞானம் உதயமானது. உலகத்தைச் சுற்றியுள்ள இருளும் நீங்கி உதயகாலம் எங்குமுண்டாயது.

**பாடல்: 441**

**வண்டு உண விரிந்த செந்தாமரை முகம் மலர்ச்சி காட்டித்**

**தண்டலை தாழ்த்தி மென் பூத் தடம் சினைக் கரத்தால் நல்கி**

**எண் தகு புள்ளின் ஆய இன் இசை எடுத்துப் போற்றி**

**மண்டல மடந்தை ஈசன்மைந்தனை வணக்கம் செய்தாள்**

**விளக்கம்**

பூமி என்னும் பெண்ணானவள் வண்டுக்ள தேனை உண்ணும்படியாக விரிந்து மலரும் செந்தாமரை மலரின் மூலமாகத் தனது முக மலர்ச்சியைக் காட்டித் தனது தலையைத் தாழ்த்துவது போல் சோலையிலுள்ள விருட்சங்களைத் தாழச் செய்து, தனது விசாலமான கரங்கள் போன்றதாகிய மரக் கொம்புகளினால் புஷ்பங்களைச் சொரிந்து தனது குரலால் பாடுவது போல் எண்ணத்தகும் பட்சிகளின் இனிய ஓசையால் பாடித் துதித்து தேவகுமாரனை வணங்கினான்.

**பாடல்: 442**

**மயல் உறும் பாவ தோட மருங்கு அறக் கெடுத்து மாந்தர்**
**உய வரும் நலம் கொண்டு ஐயன் உயிர்த்தெழ ஊர்த்த நன்மை**
**வியன் நிலத்து எங்கும் ஓடிப் பரந்து உடன் விழாக்கொண்டு என்ன**
**துயிலுணர்ந்து எழுந்து ஜீவத் தொகுதிகள் களித்த மாதோ**

**விளக்கம்**

மயக்கத்தை உண்டுபண்ணக் கூடிய பாவ தோஷங்கள் இடமற்றுப் போகும்படி கெடுத்து மானிடா உய்வதற் கேதுவாகும் நன்மையைக் கருதி அவர் உயிர்த்தெழுந்த விசேஷமானது விசாலமான உலகம் முழுவதும் விரைவில் பரவ நித்திரை தெளிந்தெழுந்த ஜீவ ஜெந்துக்களின் கூட்டங்கள் காலையில் விழாக் கொண்டாடியதைச் சந்தோஷமாக ஆரவாரம் செய்தன.

**பாடல்: 443**

**கண்ணிய நிசிக்குள் ஆய கழி பெரும் துயிலை வீசி**
**எண்ªஇலா உயிர்கள் காலை ஏம்பலோடு எழுந்த காட்சி**
**மண் இயல் வினையின் மாய்ந்த மன்பதை உயிர்த்தெழுந்த**
**புண்ணியர் தமக்குள்ளாகப் புத்துயிர் அடைந்தால் போலும்**

**விளக்கம்**

கணக்கிலடங்காத ஜீவராசிகள் வலையாகிய இரவிலகப்பட்டடிருந்து மிகுதியான நித்திரையை வட்டொழுந்து சந்தோஷத்துடன் அதிகாலையிலெழுந்த புண்ணிய புருஷனில் பூலோகத்தில் இயற்கையில் உள்ள மானிட ஜவனை புதிய உயிரை அடைந்தார் போலுமாயிற்று.

**பாடல்: 444**

> **எந்தவாறு அடையும் நம்மில் ஈறுஇலா ஜீவன் என்னாச்**
> **சிந்தனை மருளேல் நம்மான் புண்ணியம் ஜீவர்க்கு எல்லாம்**
> **சொந்தமாம் விசுவசித்தோர் சுவர்க்க பேர்இன்பம் துய்ப்பர்**
> **அந்தரியாமி யேசு என்பதை அயரேல் ஐய**

**விளக்கம்**

நித்திய ஜீவன் நமக்கெப்படி உண்டாகுமென்று மனக்கவலைப் படுவானேன. நம்பொருமானது அருள் மானிட ஜீவர்க்கெல்லாஞ் சொந்தமாகும் அதை விசுவாசித்தவர்கள் மோட்ச பேரின்பத்தை அடைவார்கள். இயேசு நாதர் எங்கும் நிறைந்த கடவுள் என்பதைச் சற்றுஞ் சந்தேகியாதே.

**பாடல்: 445**

> **வரைவு இன்றிக் கிருபை யார்க்கும் பொது என வழுத்தினாலும்**
> **பரமன் முன்குறித்தோன் உள்ளம் ஒன்றிலே பழுக்கும் பத்தி**
> **தரணி வான் கிரணம் எந்தத் தலத்தினும் தங்குமேனும்**
> **இரவி காந்தத்தின் அன்றோ இரும் கனல் பிறக்கும் அம்மா**

விளக்கம்

சூரியனது ஒளி எவ்விடத்திலும் பிரகாசிக்கக் கூடியதாயிருந்த போதிலும் சூரிய காந்தக் கண்ணாடியில் மட்டுமே பெரிய நெருப்புண்டாகும். அதுபோல கடவுளது அருள் எவருக்கும் பொதுவானதென்று சொன்னாலும் ஜெகதீசன் சமுகத்தில் அவரருளை

கிரகிக்கக் கூடிய தன்மையையுடையவாகளது இருதயத்தில் மட்டுமே பூரண பக்தியுண்டாகும்.

**பாடல்: 446**

**ஒரு நரன் வழியே பாவம் உலகத்தை உடற்றாநிற்ப**

**ஒரு நர தேவன் ஈட்டும் புண்ணியம் உலகுக்கு அந்தப்**

**பருவரல் துடைத்து நித்ய பரகதிப் பயனை நல்கல்**

**திருஅருள் மாட்சிக்கு ஏற்ற திவ்விய முறை என்று ஓர்தி**

**விளக்கம்**

ஒரே மனிதன் மூலமாகப் பாவம் இவ்வுலகத்தை வருந்த நானும் தேவனுமாகிய ஒருவரது புண்ணியம் இவ்வுலகத்திற் பற்றிய அத்துன்பத்தையொழித்து நித்திய மோட்ச கதியின் பயனை அளிப்பது தெய்வ இலட்சயத்திற்குறிய ஒழுங்கென்பதை அறிவாயாக.

**பாடல்: 447**

**நம் பிரான் உயிர்த்தெழுந்த நலம் பெறு முகூர்த்தம்-தன்னில்**

**அம்புவி அதிர அஞ்சிக் காவலர் அயர்ந்து வீழ**

**உம்பர்-நின்று இழிந்த தேவதூதர் ஓர் இருவர் ஒல்லை**

**இம்பரில் சேமவைப்பை எதிர்ந்தனர் பகைவர் எஞ்ச**

**விளக்கம்**

நம்பெருமான் உயிர்தெழுந்த நன்மை மிகும் அந்நேரத்தில் பூமியை காவலர்கள் பயத்தால் சோர்ந்து விழ, வான உலகத்திலிருந்து இறங்கி இரண்டு தூதர்கள் இப்பூலோகத்தில் உள்ள உடுகாட்டைப் பகைவர் பயப்படுமாறு விரைவாக வந்து சேரந்தனர்.

**பாடல்: 448**

**இருள் புலர் காலை கண்ட ஏந்துஇழைமார் ஓர் மூவர்**

**தெருளுறீஇ எழுந்து எம் ஐயன் சேமவைப்பு-அதனை அண்மி**

**மருள்அறச் சமாதி வாயில் திறவுண்ட மரபை நோக்கி**

**வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்து உளம் திகைத்து மாதோ**

**விளக்கம்**

இருள் ஒழிந்த காலை நேரத்தைக் கண்ட ஸ்த்திரீகள் மூவர் இச்சிந்தனையுடைய நமது எஜமானனின் சமாதிக்குச் சென்று சமாதியின் கதவு திறந்திருக்குத்தன்மையைச் சந்தேகமறப்பார்த்து மனந்திகிலடைந்து ஒன்றுச் தோன்றாதவர்களாய்க் கலங்கி நின்றார்கள்.

**பாடல்: 449**

**ஆயிடை அருகர் நின்றும் அவிர் ஒளி மின்னின் ஆர்ந்த**

**தூ உடை பரித்த தேவதூதர் ஓர் இருவர் தோன்றி**

**நீயிர் இச் சேமவைப்பில் நேடுவது எவன்-கொல் ஜீவ**

**நாயகன்-தன்னை முன்னம் நவின்ற வாசகத்தை ஓர்-மின்**

**விளக்கம்**

அவ்விடத்தில் மிகவும் பிரகாசமான மின்னலையொத்த பரிசுத்தமான உடை தரித்த இரண்டு தேவதூதர்கள் அவர்கள் சமீபத்தில் தோன்றி நீங்கள் இக்கல்லறையில் யாரைத் தேடுகிறீர்கள் ஜீவனுக்கதிபதியானவர் தன்னைக் குறித்து முன்னமேயே சொல்லியுள்ள விஷயங்களை யோசித்துப்பாருங்கள் என்றும்

**பாடல்: 450**

**ஈண்டு உளார்அல்லர் ஜீவன் இயைந்து எழுந்தருளினார் அக்**

**காண்தகு நம்பி நும் முன் கலிலெய நாடு சேர்வர்**

**பூண்ட மெய் அன்பருக்குப் புகலும் இப் புதுமை என்னாச்**

**சேண் தலத்து எழுந்து போனார் நிகழ்ந்தவை தெரியச் செப்பி**

**விளக்கம்**

அவரிங்கேயில்லை ஜீவன் பெற்ற உயிர்த்தெழுந்தருளியுள்ளார். காணக் கிடைக்கப் பெற்ற நம்பிரான் உங்களுக்கு முன்னே கலிலிலேயா நாட்டைச் சேர்ந்தவர்.

இந்த ஆச்சரியத்தை மெய்யன்பு கொண்ட சீடர்களுக்குச் சொல்லுங்கள் என்று நடந்த காரியத்தை  சொல்லியி பின் மேலே எழுந்து போயினா்.

**பாடல்: 451**

**உன்னதேசன் உயிர்த்தெழுந்தார் எனச்**
**சொன்ன சொல் அமுதம் செவி தோய்தலும்**
**மன்னும் நித்தியூவாழ்வு கைவந்து எனப்**
**பொன்ாஅனார்க்குள் சிறந்தது புத்துயிர்**

**விளக்கம்**

உன்னத ஈசன் உயிர்த்தெழுந்தார் என்னும் அமிர்தத்தைப் போன்ற செய்தி அந்த ஸ்திரீகள் காதில் பட்டவுடனே நிலையுள்ள மோட்ச பாக்கியம் தங்களுக்கு கிடைத்துள்ளன அவர்களுக்கு புதிய உயிர் சிறந்து தோன்றியது.

**பாடல்: 452**

**வள்ளல் சொற்ற வசனமும் வைகறைப்**
**பள்ளி-நின்று எழு பான்மையும் தம்முளே**
**உள்ளி உள்ளத்து வட்டு எழும் ஓகையும்**
**தெள்ளிது அச்சமும் கொண்டு தியங்கினார்**

**விளக்கம்**

நம்பிரான் சொன்ன விஷயத்தையும் அதிகாலையில் அவர் சமாதியினின்று உயிர்த்தெழுந்த தன்மையையும் தமக்குள்ளே நினைத்து மனதில் உண்டாகும் சந்தோஷத்தால் நிறைந்து பயம் கொண்டு நடுங்கினார்.

**பாடல்: 453**

**உரைாஇறந்த உவகைப் பெரும் கடல்**
**கரைபுரண்டு கதித்த துக்காக்கினி**
**விரைவில் மாய்ந்திட மெல்இயலார் எழுந்து**
**உரைசெய்வாம் திருதொண்டர்க்கு என்று ஓடினார்**

**விளக்கம்**

விஸ்தரிக்க முடியாத சந்தோஷமாகிய கடல் கரை புரண்டு தங்கினது. துக்கமென்னும் அக்கினி சீக்கிரத்தில் ஒழிய அம்மாதரெல்லாம் எழுந்து இதைச் சீடர்களுக்கு சொல்லுவோம் என்று வேகமாகப் போனார்கள்.

**பாடல்: 454**

**தூதர் சொற்ற சுமங்கல வார்த்தை கொண்டு**
**ஏதம்இல்லவர் ஏகுழி எம் உயிர்**
**நாதன் கண் எதிர் தோன்றி நலம் கிளர்**
**மாதரீர் நன்கு வாழ்க என வாழ்த்தினார்**

**விளக்கம்**

குற்றமற்ற ஸ்திரீகள் தூதர் சொன்ன மங்கள வாரத்தையை மனதில் கொண்டவர்களாய்த் திரும்பிப் போகும் சமயத்தில் எம்முயிர் நாதன் அவர்கள் கண்முன் தோன்றி நன்மை மிகுந்த மாதார்காள் நீங்கள் நன்கு வாழ்க என்று வாழ்த்தினார்.

**பாடல்: 455**

**அருளின் வாழ்வை அறம் கிளர் ஆரணப்**
**பொருளை அன்பின் புணரியைப் புங்கவர்**
**தெருளும் சின்மய தேசிக மூர்த்தத்தை**
**மருள் ஒன்று இன்றி மடந்தையர் நோக்கியே**

**விளக்கம்**

அருளவதாரத்தை தருமமே உருவாகக் கொண்ட வேத மூர்த்தியை கருணாசமுத்திரத்தை வானோர் நன்றாயறிந்து கொள்ளும் அறிவின்மயமாகிய ஆசாரிய வடிவைச் சந்தேகமன்றி அம்மாதர்கள் பாரத்து.

பாடல்: 456

**உழுவல் அன்பொடு உளம் கனிந்து ஒல்லெனக்**
**கழுதின் வன் தலையைத் தெறு கால் துணை**
**தொழுது வீழ்ந்தனர் பல் முறை தோத்திரித்து**
**எழுது பாவைஃஅன்னார் இனிது ஏத்தினார்**

**விளக்கம்**

சித்தரித்த பதுமை போன்ற அந்த ஸ்திரீகள் தொடர்ந்து வரும் அன்பினால் மனங்கனிந்து கொடிய சாத்தானின் தலையை மிதிக்கும் இருபாதங்களையம் விரைவில் வணங்கிப் பலமுறை தோத்தரித்து இனிமையாக அவரை வாழ்த்தினார்கள்.

பாடல்: 457

**நன்று யாவும் நலிவுறு சீடருக்கு**
**இன்று இயம்பி எனைக் கலிலேய நாட்டு**
**ஒன்ற விள்ளு-மின் உள்ளம் கலங்கல்-மின்**
**என்று உரைத்துக் கரந்தனர் எம்பிரான்**

**விளக்கம்**

உடனே எம்பிரான் அம்மாதர்களைப் பாரத்து பயப்பட வேண்டாம் நீங்கள் மனவருத்தப்படும் சீடர்களிடம் நலமுடன் சென்று நீங்கள் கண்டவைகளைச் சொல்லி என்னைக் கலிலியோ நாட்டில் வந்த காணம்படி அவர்கட்குத் தெரியப்படுத்துங்கள் என்றுரைத்து மறைந்தருளினார்.

பாடல்: 458

**ஓகை மா நறவு உண்டு களித்த அத்**
**தோகைமார் பனொரு திருஃதொண்டர்-பால்**
**ஏகி ஈசன் எழுச்சியும் யாவையும்**
**சோகம் நீங்க வகுத்தனர் சொல்லினார்**

**விளக்கம்**

சந்தோஷமொன்னும் பெருமை பொருந்திய தேனை உண்டு களித்த அம்மாதர்கள் பதினோரு சீடர்களிடம் சென்று எம்பிரானுயிர்த்தெழுந்த விஷயம் யாவையும் அவர்கள் சஞ்சலம் நீங்குமாறு தெளிவாகச் சொன்னார்கள்.

**பாடல்: 459**

**அணங்குஅனார் உரை கேட்டு மெய் ஆரணக்**
**குணங்கள் பூத்த குருத்துவர் ஆர்உயிர்**
**உணங்கி மீண்டு இங்கு உயிர்த்தெழல் ஒல்வதோ**
**இணங்குறாது என எய்தினர் ஐயமே**

**விளக்கம்**

சத்திய வேதத்தின் தன்மையை அறிந்த ஆசாரியராகிய சீடர்கள் தெய்வப் பெண்களையொத்த இவர்களின் வாரத்தையைக் கேட்டு அருமையான உயிர் நீங்கியி பின் மறுபடியும் அச்சரீரம் உயிர்பெற்றெழுவது சாத்தியமோ அது கூடாத காரியம் என்று சந்தேகப்பட்டனர்.

**பாடல்: 460**

**முற்று அறிந்த முழுமுதல் முன் உறச்**
**சொற்ற வாய்மையும் உள்ளிலர் தொக்கு உடன்**
**இற்று இது உண்மை இன்னே தனி ஈமத்தின்**
**உற்று அறிந்திடுவாம் என ஓடினார்**

**விளக்கம்**

சகலமும் அறிந்த முழுமுதற் கடவுளாகிய எம்பெருமான் முன்னமே சொல்லியிருந்தவைகளை நினைக்கவில்லை உடனே நாம் ஒன்றுசேர்ந்து ஒப்பற்ற சமாதிஸ்தலத்திற்கு சென்று இதன உண்மையை இப்பொழுதே கண்டறிவோமென ஓடினா்

பாடல்: 461

**ஒன்றும் அன்பன் உலம் பெரு பேதுரு**
**என்ற சீடர் இருவரும் ஈமத்தில்**
**சென்று அகத்து உறத் தேடினர் காண்கிலர்**
**மன்றல் யாக்கையைச் சிந்தை வருந்தியே**

**விளக்கம்**

அன்புள்ள மலைக்குச் சமானமான பேதுருவாகிய இரு சீடர்களும் ஈமத்தின் உள்ளே நுழைந்து வாசனைத் திரவியமிட்ட சரீரத்தைத் தேடியுங் காணாது மனம் வருந்தினர்.

பாடல்: 462

**திருமி ஏகினர் சீடர் மகதலேன்**
**ஒரு மடந்தை நம் உன்னத ஜீவனைக்**
**கரும பூமியில் கண்டு அருள் பெற்று உடன்**
**தருமசீலரைச் சார்ந்தனள் சாற்றினாள்**

**விளக்கம்**

சீடர்கள் திரும்பிப் போனார்கள். ஒப்பற்ற ஸ்திரீயாகிய மகதலேனா மரியாளோ நமது உன்னத மூர்த்தியைக் கல்லறைத் தோட்டத்தில் கண்டு அவரது அருளை அடைந்து உடனே சீடர்கள் சென்று அதைத் தெரிவித்தாள்.

பாடல்: 463

**தாயை நாடிய கன்று எனத் தற்பரன்**
**சேயை நாடித் தவிக்கின்ற சீடனாம்**
**தூயன் மூழ்கு துயர்கடல் நீத்து உய**
**நாயகன் திருசேவையை நல்கினார்**

**விளக்கம்**

தாய்ப் பசுவைத் தேடுங் கன்றைப் போல தெய்வகுமாரனை நாடித் தவிக்கின்ற சீடனாகிய பரிசுத்த பேதுரு அடைந்திருக்கும் துன்பக் கடலினின்று கரையேறி உய்யுமாறு எம்பெருமான் அவனுக்குத் தரிசனமானார்.

**பாடல்: 464**

**எம்மவூருக்கு அன்று ஏகிய சீடரின்**
**மம்மர் நீங்க மதி விளக்கு ஏற்றியும்**
**அம்ம அங்கு அவரோடு உணவு ஆற்றியும்**
**செம்மல் சிந்தை தெருட்டினர் செவ்விதின்**

**விளக்கம்**

அன்று எம்மா என்னும் ஊருக்குச் சென்று பக்தர்களின் அறியாமை நீங்குமாறு அவர்களது அறிவை வெளிப்படுத்தியும் அங்கு அவர்களுடன் போஜனம் செய்தும் எம்பிரானச்சமயத்தில் அவர்கள் மனதை நன்றாகத் தெளிவாக்கியருளினார்.

**பாடல்: 465**

**ஈண்டு காட்சி எதிர்ந்தவர் எய்தி யாம்**
**மீண்டு எழுந்து அருள் வித்தகன்-தன்னை நேர்**
**காண்டல் செய்து உடன் உண்டு களித்தனம்**
**மாண்ட போதனரீர் என்று வாழ்த்தினார்**

**விளக்கம்**

இங்கு அவரைத் தரிசித்தவர்கள் மாட்சிமை பொருந்திய அறிவுடையோராகும் சீடரிடஞ் சென்று நாங்கள் மறுபடியும் உயிர்த்தெழுந்த அற்புத மூர்த்தியை நேரில் தரிசித்து அவருடன் உண்டுங் களித்தோம் என்று சொல்லியச் சீடர்கள் வாழ்த்தினார்கள்.

பாடல்: 466

**தக்க சான்று இது என்னினும் தம்முளே**

**புக்க ஐயம் பொதிந்து புறம் செலாது**

**ஒக்க ஆங்கு ஒரு உறையுளின் உள்ளுறத்**

**தொக்கு இருந்தனர் பன்னொரு தூயரும்**

**விளக்கம்**

இது போதுமான சாட்சியாயிருந்தும் அப்பன்னிரண்டு சீடர்கள் தமக்குள்ளே புகுந்த சந்தேகமானது நீங்காமல் நிரைந்து எல்லோரும் ஒருமிக்க அங்கு ஒரு வீட்டில் கூடியிருந்தனர்.

பாடல்: 467

**ஆன போழ்தத்து அடியவர் நாப்பணே**

**தூ நலம் திகழ் மேனியில் தோன்றி நம்**

**தீன ரக்ஷக தெய்வதம் மெய்ச் சமாதானம்**

**மல்கித் தழைக்க என்றார் அரோ**

**விளக்கம்**

பலவீனரை இரட்சிக்கும் எம்பெருமான் அச்சமயத்தில் அவ்வடியார்கள் நடுவில் பரிசுத்தமான நன்மையை விளக்கும் சரீரத்துடன் தோன்றி தெய்வத்தன்மை பொருந்திய மெய்ச் சமாதானம் உங்களில் பெருகித்தழைக்க என்று கூறினார்.

பாடல்: 468

**அண்டர் நாயகன் தோன்றி அலர் இதழ்**

**விண்ட வாய்மொழி கேட்டும் விழிக்கு எதிர்**

**கண்டும் இன்னும் கலங்கினது அன்றி மெய்த்**

**தொண்டர் உள்ளம் துறந்திலது ஐயமே**

**விளக்கம்**

இப்பூலோக அதிபதியான கடவுள் நேரில் காட்சி கொடுத்தும் புஷ்பத்திற்குச் சமானமான அவரது வாயின் வாரத்தைகளைக் கேட்கும் அவரைக் கண்ணுரக் கண்டும் இன்னும் கலங்கினார்களே அன்றி அம்மெய்த்தொ்டர்களது மனதிலுள்ள சந்தேகம் நீங்கவில்லை.

**பாடல்: 469**

**ஐயமும் திகிலும் கலந்து அம் புவி**
**உய்ய வந்து இங்கு உயிர்த்தெழுந்து உன்னத**
**தெய்விகம் திகழ் மேனியைத் தேர்கிலார்**
**வெய்ய ஆவி இது என்று வெருண்டனர்**

**விளக்கம்**

சந்தேகமும் திகிலும் கலந்த மனத்தராய் இவ்வழகிய உலகம் இரட்சிப்படைய இங்கு அவதரித்து உயிர்த்தெழுந்த உன்னத தெய்வத்தின் ஜோதி விளங்கும் சரீரத்தை அறிந்து கொள்ளக் கூடாதவர்களாய் அதை ஒரு கொடிய ஆவியென்று நினைத்துப் பயந்தார்கள்.

**பாடல்: 470**

**சிந்தை தேரும் திருத் தகு தெய்விக**
**மைந்தன் ஓர்ந்து மனம் கலங்காதிர் நீர்**
**எந்த ஆவியும் யான் உறு மானவ**
**விந்தை யாக்கை படைத்தில மெய்ம்மையால்**

**விளக்கம்**

மனதில் உள்ளவைகளை அறியும் பெருமை பொருந்திய தேவ குமாரன் அறிந்த நீங்கள் கலங்க வேண்டாம் எந்த ஆவியும் நானடைந்துள்ள அற்புத சரீரத்தை மெய்யாக அடைந்ததில்லையே.

**பாடல்: 471**

> **பாரு-மின் பரிசித்து என் பதாதியை**
> **ஓரும் முன் உரை யான் அன்றி உண்மை வேறு**
> **ஆரும் இல்லர் மற்று ஐயுறலீர் எனாத்**
> **தேருமாறு தெருட்டினர் சிந்தனை**

**விளக்கம்**

என் பாத முதலிய சரீரத்தைப் பரிசோதித்துப் பாருங்கள் வேதநூற்களில் முன்னே சொல்லப்பட்டவன் நானேயல்லாமல் உண்மையாகவே வேறொருவருமில்லை என்பதை அறியுங்கள். சந்தேகப்படவேண்டாம் என்று அவர்கள் நம்புமாறு மனதை தெளியவைத் தருளினார்.

**பாடல்: 472**

> **மேலும் மேலும் பலமுறை வித்தகக்**
> **கோலம் காட்டிக் குரவர்க்குக் கோதூஅறு**
> **சீலம் மல்கத் தெரித்தனர் செம்பொருள்**
> **ஞாலம் மீது ஒரு மண்டலம் நாடியே**

**விளக்கம்**

இப்பூலோகத்தில் நாற்பது நாட்களிலிருந்து பலதரம் சீடர்கட்குத்தான் பற்பல விடங்களில் அற்புதங்களைச் செய்த போது அப்போதிருந்த கோல வடிவங்களைக் காட்டி குற்றமற்ற நல்லொழுக்கத்தை மெய்ப்பொருள் விளங்குமாறு விரும்பிக் காட்டினார்.

**பாடல்: 473**

> **ஆதி மெய் அடியார் திறத்து அன்றியும்**
> **பாதிஆயிரவர்க்கு ஒருபக்கலில்**
> **பூதலத்தில் உயிர்த்தெழு புண்ணிய**
> **நாதன் சேவை அளித்தனர் நன்கு உற**

**விளக்கம்**

உத்தம சீடர்கள் முதலாகக் காட்சி கொடுத்ததுமல்லாமல் வேறோரிடத்தில் ஐந்நூறு பேருக்கும் நன்மை உண்டாகுமாறு இவ்வுலகில் உயிர்த்தெழுந்த புண்ணியமூர்த்தி தரிசனமானார்.

**பாடல்: 474**

**இத் திறம் கிறிஸ்து இயேசுவின் ஈறுஇலா**
**மெய்த் தவத் திருமேனி விளங்கலில்**
**சித்த சஞ்சலம் நீங்கித் திகழ்ந்தனர்**
**சுத்த மெய் விசுவாசத்தில் தோம்இலார்**

**விளக்கம்**

இவ்வண்ம் மெய்த் தவத்தால் வந்த கிறிஸ்து இயேசுவின் அழியாச் சரீரத்தை ஆங்காங்கே கண்டதினாலே சுத்த மெய்விசுவாசத்தில் குற்றமற்றவர்கள் மனதில் சஞ்சலம் நீங்கப் பெற்றவர்களாய் விளங்கினர்.

**பாடல்: 475**

**அஞ்சி நெஞ்சம் அழுங்கி அயர்ந்து வீழ்ந்து**
**உஞ்ச காவலர் ஓடி உலப்புஇலான்**
**எஞ்சுறாத எழுச்சியும் யாவையும்**
**வஞ்சகக் குரவர்க்கு வகுத்தனர்**

**விளக்கம்**

பயந்து மனம் நடுங்கிச் சோர்ந்து விழுந்து தப்பிப் பிழைத்த காவற்காரர்கள் ஓடி அழிவில்லாத எம்பெருமான் குறையற்ற விதமாக உயிர்த்தெழுந்ததையும் மற்ற சங்கதிகளையும் வஞ்சகம் நிறைந்த பிரதான ஆசாரியனுக்கு விளங்கக் கூறினார்கள்.

**பாடல்: 476**

**பங்கமுற்ற பதிதர் பலர் குழீஇச்**
**சங்கம் உற்று நம் தாபதரே கரந்து**

**அங்கம் வெளவி அகன்றனர் என்ன அ**

**வெங்கணார்க்கு வெறுக்கையை வீசினார்**

**விளக்கம்**

மறுபடியும் தீமை செய்வதற்காக சமயநெறிகளில் தவறிய பாதகர் பலர் சேர்ந்து ஒன்றாய்க்கூடி ஆலோசித்து சிற்சில கொடியவர்கட்குப் பணத்தை கொடுத்து தமது சீடர்கள் அச்சரீரத்தைத் திருடி ஒளித்துக்கொண்டு போய்விட்டார்களென்று சொல்லும்படியாக ஏவினார்கள்.

**பாடல்: 477**

**களியர் பொய்ப்படு கட்டுரையோ புவி**

**தெளியும் தெய்விக மெய்ம்மை சிதைத்திடும்**

**அளிய புன்மதி ஆதி அருக்கனார்**

**ஒளி புதைந்திடுமோ விரல் ஒன்றிலே**

**விளக்கம்**

இக்கொடியவர்கள் சொல்லும் பொய் வார்த்தையோ பூலோக மறியும் தெய்வ சத்தியத்தை அழிக்கும் பரிதபிக்கக்கூடிய அற்ப புத்தியல்லவா இது. சூரியனது பிரகாசத்தை ஒர விரலில் மறைக்க முடியுமா.

**வினாக்கள்**

1. இரட்சண்ய யாத்திரகம் - குறிப்பு தருக.

2. சிலுவைப்பாடு தரும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

# அலகு - 5

## சீறாப்புராணம்

சீறா என்பதற்கு வாழ்க்கை என்பது பொருள், புராணம் என்பதற்கு வரலாறு என்பது பொருள். சீறாப்புராணம் என்பதற்கு நபிகள்நாயகத்தின் வாழ்க்கை வரலாறு என்று பொருள்.

இந்நூல் விலாதத்துக் காண்டம் (பிறப்பியற் காண்டம்), நுபுவ்வத்துக் காண்டம (செம்பொருட் காண்டம்), ஹிஜ்ரத்துக் காண்டம (செலவியற் காண்டம்) என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது. இந்நூலில் 5027 விருதப்பாக்கள் உள்ளன. பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. வானவர் ஜிப்றாயில் மூலம் திருமுறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் நுபுவ்வத்துக் காண்டத்தில் பேசப்படுகின்றன. மக்கத்தை விட்டுப் பெருமானார்ம தீனம் சென்றதும் தீன் நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் ஹிஜ்றத்துக் காண்டத்தில் வரையப்பட்டுள்ளன. சீறாப்புரானத்தில் நபிகளின் வல்லவு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை. பனூஅகமது மரைக்காயர் என்பவர் தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார். அது “சின்ன சீறா” என வழங்கப்படுகிறது.

### ஆசிரியர் குறிப்பு

உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர். செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார். நூல் முடிவுறும் முன்னரே சீதக்காதி மறைந்தார். பின் அபுல்காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது. உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற என்பது பாக்களால் ஆன நூலையும் படைத்துள்ளார்.

## நதிகடந்த படலம்

## கலிவிருத்தம்

**பாடல்: 723**

**கட்செவி பகையறுத் தரிய கானகத்**

**துட்படு மிடர்தவிர்த் தொளிரும் வள்ளலை**

**வட்படும் வேலுடை மாக்க ளியாவரு**

**நட்பொடு கலந்துட னடந்து போந்தனர்**

**விளக்கம்**

சர்ப்பத்தினது விரோதத்தை அறும்படி செய்து அரிதான அக்காட்டினகமுண்டாகும் துன்பங்களை யொழித்துப் பிரகாசியாநிற்கும் வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வஸல்லமவர்களைக் கூர்மை பொருந்திய வேற்படை தாங்கிய கைகளையுடைய அவ்வியாபாரிகளனைவரும் சினேகத்துடன் கலந்து கூடவே நடந்து போயினார்கள்.

**பாடல்: 724.**

**குறுபொறை கடந்துபோய்க் குவடு சுற்றிய**

**சிறுநதி யாறுகள் கடந்து சென்றபின்**

**மறுவுறு மதிதொடு மலையு மம்மலைப்**

**பெறுமுறை யருவியும் பிறங்கத் தோன்றின**

**விளக்கம்**

அவ்வாறுபோன அவர்கள் யாவரும் சிறிய குன்றுகளைத் தாண்டிச் சென்று மலைகளை வளைந்திராநின்ற சின்னச் சின்ன நதிகளையும் ஆறுகளையும் கடந்துபோனதின் பின்னர்க் களங்கத்தைப் பொருந்திய ஆகாயத்தின்கண் ணிருக்கின்ற

சந்திரனைத் தீண்டாநிற்கும் ஒரு மலையும் அம்மலையைப் பொருந்திய ஒழுங்கினையுடைய ஒரு நதியும் பிரகாசிக்கும்படி தெரிந்தன.

**பாடல்: 725**

**அம்மலை நதிக்கரை யடுத்துச் சீரிய**

**செம்மலுஞ் சூழ்ந்ததே சிகரு நீங்கிலாச்**

**சும்மைகொண் டிறங்கிநீ ராடித் தூநறைப்**

**பொம்மலுண் டரும்பகற் பொழுது போக்கினார்**

**விளக்கம்**

அப்போது அந்தப் பருவத்தினது ஆற்றங்கரையை சிறப்பையுடைய செம்மலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் அவர்களை வளைந்த தேசாந்தரிகளாகிய வியாபாரிகளும் நெருங்கி மாறாத சுமைகளைக் கொண்டு கீழே இறங்கி அவ்வாற்றின்கண் ஸ்நானஞ்செய்து பரிசுத்தம் பொருந்திய வாசனையுடைய பொலிவான அன்னத்தை யருந்தி அரிய அந்தப் பகற் பொழுதைக் கழித்தார்கள்.

**பாடல்: 726**

**மதுப்பிலிற் றியமரை மலரின் கொள்ளையும்**

**விதுக்கதிர் படத்தனி விரியுங் காவியு**

**மெதிர்ப்பொடு களிப்புமா குலமு மெய்திடக்**

**கதிர்க்கதி ரவன்குட கடற்கு ளாயினான்**

**விளக்கம்**

அந்தச்சமயம் தேனைச் சொரியா நிற்கும் மிகுதியான தாமரைப் புஷ்பங்களும் சந்திரனது பிரகாசமானது தம்மீது பட ஒப்பில்லாது மலராநின்ற நீலோற்பலப் புஷ்பங்களும் எதிர்த்தலுடன் துன்பமும் இன்பமும் பொருந்திடும்படிக் கிரணங்களையுடைய சூரியனானவன் மேல்பாற் சமுத்திரத்தினகம் போய்ச் சேர்ந்தான்.

பாடல்: 727

**நீருறை பறவையின் குலமு நீடரு**

**பாரினில் விலங்கின மியாவும் பண்ணறாக்**

**காருறு சோலைவாய்ச் சுரும்புங் கண்படைத்**

**தூர்வன வெவையுநல் லுறக்க முற்றதே**

**விளக்கம்**

சூரியனானவன் அவ்வாறு போய்ச்சேர ஜலத்தின்கண் வாசஞ்செய்யா நிற்கும் பட்சிகளினது கூட்டங்களும் நீட்சிபொருந்திய இப்பூமியின் கண்ணுள்ள சகல மிருகக் கூட்டங்களும் இசை மாறாத மேகமானது தங்கிய சோலையின் கண்ணுள்ள வண்டுக் கூட்டங்களும் எல்லாவிதமான ஊர்வனங்களும் தங்களது கண்களை மூடி நல்ல உறக்கத்தைப் பொருந்தின.

பாடல்: 728

**போதடைந் திருளெனும் படலம் போர்த்திட**

**மாதவ ரெனுமுகம் மதுவு மன்னருந்**

**தாதவிழ் நதிக்கரைத் தருவி னீழலிற்**

**சோதிமா முகமலர் விழிக டூங்கினார்**

**விளக்கம்**

அன்றியும், சூரியனானவன் அஸ்தமித்து அந்தகாரமென்னும் போர்வையானது எவ்விடத்தையும் மூடிட மகாதவத்தை உடையவரென்று சொல்லாநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் வியாபாரிகளான மற்றுமரசர்களும் தழைகள் அவிழாநின்ற அவ்வாற்றின் கரையின் கண்ணுள்ள விருட்ச நிழலில் பிரகாசத்தை யுடைய பெருமையுற்ற தங்களது முகத்திற் பொருந்திய தாமரைமலர் போலும் கண்களானவை தூங்கினார்கள்.

பாடல்: 729

**வனநதிப் பெருக்கெடுத் தெறிந்து மால்வரை**

**தனையமிழ்த் திடவரு வதுகொல் சார்ந்தநும்**

**மினமுட னெழுகவென் றிலங்கும் வள்ளறன்**

**கனவினிற் சபுறயீல் கழறிப் போயினார்**

**விளக்கம்**

அப்போது பிரகாசியா நின்ற வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களது சொப்பனத்தின்கண் ஜிபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள்வந்து இக்கானகத்திலுள்ள ஆறானது பிரவாகித்து அலைகளை இரு கரைகளிலும் வீசிக்கொண்டு பெரியமலைகளைத் தாழ்த்திடும்படி வருகின்றது. ஆதலால் நீர் உம்மைப் பொருந்திய உமது கூட்டத்துடன் எழும்புமென்று சொல்லிவிட்டுப் போயினார்கள்.

பாடல்: 730

**மருப்பொலி புயமுகம் மதுதன் கண்விழித்**

**தொருப்பட வெழுந்துழை யுற்ற பேர்க்கெலாம்**

**விருப்பொடு மொழிந்தனர் வெள்ளம் வந்துநம்**

**மிருப்பிடம் புரட்டுமீங் கெழுக வென்னவே.**

**விளக்கம்**

அவ்விதம் சொல்லிவிட்டுப் போகவே பரிமளம் பெருகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது கண்களைத் திறந்து எழும்பி ஒருமனப்படும்படி அங்கு பொருந்திய ஜனங்களெல்லாவருக்கும் இவ்வாற்றின் வழியாக ஜலமானது வந்து இவ்விடத்தில் நம்முடைய இருப்பிட முழுவதையும் புரளச் செய்யும். ஆதலால் நீங்கள் யாவரு மெழும்புங்களென்று பிரியத்துடன் சொல்லினார்கள்.

**பாடல்: 731**

**தெரிதர வுரைத்தசொற் றேர்ந்தி யாவரும்**

**விரைவினிற் சோலைவாய் விடுதி நீங்கியே**

**புரவியொட் டகம்பொதி பொருளுங் கொண்டணி**

**வரையினுச் சியினிடை மலிய வைகினார்.**

**விளக்கம்**

அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் தெரியும்படியாகச் சொல்லிய அச்சொற்களை அனைவர்களுந் தங்களது மனசில் தெளிந்து சீக்கிரத்தில் தாங்கள் தங்கியிருந்த அச்சோலையின்கண்ணுள்ள விடுதியை விட்டு மொழிந்துக் குதிரை ஒட்டகம் சுமைபொருள் முதலிய யாவையும் கொண்டுப் பெருகும்படி அவ்விடத்திலுள்ள அழகிய மலையினது சிகரத்தின்மேல் ஏறித் தங்கியிருந்தார்கள்.

**பாடல்: 732**

**படர்தரு திரைவயி றலைத்த பைம்புனற்**

**கடலிடை குளித்துச்செங் கதிர்க்க ரங்களா**

**லடைபடு மிருட்குல மறுத்துப் போக்கியே**

**சுடரவ னுதயமா கிரியிற் றோன்றினான்.**

**விளக்கம்**

அப்பொழுது சூரியனானவன் படர்ந்த அலைகளென்னும் வயிறானதை அலைக்கப் பெற்ற பசிய ஜலத்தையுடைய சமுத்திரத்தின்கண் மூழ்கித் தனது செந்நிறத்தையுடைய கிரணங்களென்னுங் கைகளினால் சேர்ந்த இருளினது கூட்டத்தை அறச்செய்து அழித்துப் பெருமைதங்கிய உதயபருவத்தின்கண் விளக்கமாயினான்.

பாடல்: 733

**அரிசினக் கொடுவரி யமிழ்ந்து போதரப்**

**பொரியரைத் தருக்களைப் புரட்டிப் பொங்கிய**

**நுரையிரு கரைகளு நுங்க மானதிப்**

**பிரளய மிடனறப் பெருகி வந்ததே.**

**விளக்கம்**

அவ்வாறு விளக்கமாகவே கோபத்தையுடைய சிங்கங்களும் வேங்கைகளும் சலத்தினகந் தாழ்ந்து போகப் பொரி தங்கிய அரையினை யுடைய விருட்சங்களைப் புரளச்செய்து பொலிந்த நுரைகள் இரு கரைகளையும் விழுங்கும்படி விசாலமாகப் பெருமையையுடைய அவ்வாற்றினது பெருக்கானது எவ்விடமும் பெருகி வந்தது.

பாடல்: 734

**குறவரைக் குறிஞ்சிவிட் டீழ்த்துப் பாலையின்**

**மறவரை முல்லையி லாக்கி மாசுடைத்**

**தொறுவரை நிரையொடுஞ் சுருட்டி வாரியே**

**யறைபுனற் பெருக்கெடுத் தடர்ந்த தெங்குமே.**

**விளக்கம்**

அன்றியும், குறிஞ்சி நிலத்தின் கண்ணுள்ள வேடரை அந்நிலத்தைவிட்டு மிழுத்துப் பாலைநிலத்திலாக்கிவிட்டு அந்நிலத்திலுள்ள மறவரை இழுத்து முல்லை நிலத்திலாக்கி அங்குள்ள கரியநிறத்தையுடைய இடையவரை வரிசையுடன் சுருட்டி வாரிக்கொண்டு ஒலிக்காநின்ற ஜலமானது எவ்விடமும் பெருக்கெடுத்து அடர்ந்தது.

பாடல்: 735

**கரைசுழித் தெறிந்துநீள் கயங்க ளாக்கின**

**திரையெறி கயத்தினைத் திடர தாக்கின**

**விரைகமழ் சோலைவே ரறுத்து வீழ்த்தின**

**வரைகளைப் பிடுங்கின மலிந்த நீத்தமே.**

**விளக்கம்**

அன்றியும், அவ்வாறு பெருகிய ஜலமானது இரண்டு கரைகளையுஞ் சுழியச்செய்து நீண்ட குளங்களாக்கினது. அலைகளை எறியாநிற்குங் குளத்தினை மேடுகளாக்கினது. வாசனை பரிமளிக்கின்ற சோலைகளை வேர்களுடன் அறும்படி செய்து பூமியின்கண் வீழ்த்தினது. அங்கு சூழ்ந்திருந்த மலைகளெல்லாவற்றையும் அடியோடும் பிடுங்கினது.

**பாடல்: 736**

**கரைபுரண் டுள்ளகங் களித்துக் கானிடைத்**

**திரவியந் திரைக்கரத் தெடுத்துச் சிந்தியே**

**குரைகட லெனுநதி குரிசி னந்நபி**

**மரைமல ரடிதொழ வந்த போலுமே.**

**விளக்கம்**

அன்றியும், ஒலிக்காநின்ற சமுத்திரமென்னும் அவ்வாறானது இருகரைகளிலும் புரண்டு தனது மனசினகம் சந்தோஷித்து காட்டினிடத்துள்ள திரவியங்களை அலைகளென்னுங் கைகளினால் எடுத்துச் சிதறிக் கொண்டு குரிசிலாகிய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரைமலர் போலுந் திருவடிகளை வணங்கும்படி வந்ததை நிகர்த்தது.

**பாடல்: 737**

**மானதி பெருகியெவ் வரையுஞ் சுற்றிய**

**நானிலத் திசைநெறி நடப்ப தின்மையாற்**

**றானவன் றூதொடு சார்ந்த மன்னரு**

**மீன்மின் மூன்றுநா ளிருந்து நோக்கினார்.**

**விளக்கம்**

அவ்வாறு அந்தப் பெருமைதங்கிய ஆறானது பெருக்கமுற்று எல்லா மலைகளையும் நான்கு வகைப்பட்ட இப்பூமியின்கண்ணுள்ள திசைகளினது பாதைகளையும் சுற்றிக் கொண்டது. அதனால் நடந்து செல்லுவதற்கு இடமில்லாது தானவனான ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடன் மற்றும் வியாபாரிகளான அரசர்களும் மூன்று நாள் மட்டும் குற்றமில்லாது அம்மலையின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**பாடல்: 738**

**"மலைமிசை மூன்றுநா ளிருந்து மானதி**
**யலையெடுத் தெரிந்துயர்ந் தடர்ந்த தல்லது**
**நிலைதரக் காண்கிலோ மென்ன நீண்டசஞ்**
**சலமெனுங் கடற்குளாய்த் தவித்து வாடினார்"**

**விளக்கம்**

அவ்வாறு அவர்களியாவரும் அந்த மலையின் மீது மூன்று நாள் பரியந்தம் தங்கியிருந்தும் பெருமைபொருந்திய அவ்வாறானது திரைகளையெடுத்து இருகரைகளிலும் வீசி உயர்ச்சியுற்று அடர்ந்ததேயல்லாமல் நிலைதரும்படி கண்டிலோமேயென்று சொல்லி நீட்சியுற்ற சஞ்சலமென்னும் சமுத்திரத்தினுள்ளாய்த் தவித்து வாட்டமடைந்தார்கள்.

**பாடல்: 739**

**"மனத்தினிற் றுன்புற வருந்தி மாழ்கிய**
**வினத்தவ ரியாரையு மினிதி னோக்கியே**
**கனத்தமைக் குடைநிழல் கவின்பெற் றோங்கிய**
**நனைத்துணர்ப் புயத்தவர் நவில லுற்றனர்"**

**விளக்கம்**

அப்போது பாரமான மேக்குடையினது நிழலின்கண் அழகு பெற்றோங்கா நிற்கும் தேனைப் பொருந்திய புஷ்பமாலையணிந்த புயங்களை யுடையோரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு மனசின்கண் துன்பமானது பொருந்தும்படி வருத்தமுற்று மயங்கிய தங்களது கூட்டக்காரர்களான அனைவர்களையும் இனிமையுடன் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

**பாடல்: 740**

**“இற்றைநா ளிரவிவ ணிருந்து கண்டுநா**
**மற்றைநாட் போகுவம் வருந்த லென்றனர்**
**வெற்றியும் வீரமுந் தவத்தின் மேன்மையு**
**முற்றிய மாட்சியா ரலங்கன் மொய்ம்பினார்”**

**விளக்கம்**

அப்பொழுது விஜயமும் வலிமையும் தவத்தினது மேன்மையும் முதிர்ந்த மாட்சிமையு முடையவர்களான புஷ்பமாலையணிந்த புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாலகு அலைகிவசல்லமவர்கள் நாம் அனைவர்களும் இன்றையத்தினம் இராமுழுவதும் இம்மலையின் மீது தங்கியிருந்து பார்த்துக் கொண்டு நாளையத்தினம் இங்கிருந்தும் எழும்பிப் பிரயாணமாகி நாம் குறித்துவந்த இடத்திற்கு போகுவோம். ஆனதினால் நீங்களொருவரும் மனசின்கண் வருத்தப்பட வேண்டாமென்று சொன்னார்கள்.

**பாடல்: 741**

**“இருகரை களுந்தெரிந் திலவிம் மானதி**
**பெருகவ தடிக்கடி பேது றாதுபி**
**னொருமொழி யுரைத்தவ ருளத்தின் பெற்றியைத்**
**தெரிகிலோ மெனமனந் தேம்பி னாரரோ”**

**விளக்கம்**

அவர்கள் அவ்விதம் சொல்ல இப்பெரிய ஆறானது அடிக்கடிப் பெருகுகின்றது. பார்ப்பவர்களின் கண்களுக்கு இரு கரைகளும் தோற்றவில்லை. பின்னர் மயக்கமடையாது நாளையத்தினம் சொல்லுவோமென்று ஒப்பற்ற வார்த்தை சொன்னவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மனசின்கண்ணுள்ள தன்மையை இன்னதென்றும் யாமறிந்திலோ மென்று கூறி அனைவர்களும் மனவாட்டமுற்றார்கள்.

**பாடல்: 742**

**“அவ்வுழிச் சபறயீ லடைந்து கண்டுயில்**
**செவ்விநேர் முகம்மது கனவிற் செப்பினா**
**ரிவ்விருள் விடிந்தபி னெழுந்து முன்னரோர்**
**நவ்விதோன் றிடும்வழி நடத்தி ரென்னவே”**

**விளக்கம்**

அவ்விதம் வாட்டமுறவே அழகையும் சத்தியத்தையுமுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நித்திரை செய்கின்ற அவ்விடத்தில் அவர்களின் சொப்பனத்தில் ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வானலோகத்தை விட்டும் இறங்கிவந்து சேர்ந்து இந்த அந்தகாரமொழியும்படி சூரியனுதையமான பின்னர் நீங்கள் எழும்பி உங்களின் முன்னால் ஒரு மானானது தோன்றிடும். அப்பாதையின் வழியாக யாவர்களையும் நடத்துங்களென்று சொன்னார்கள்.

**பாடல்: 743**

**“மனமுறைச் சபுறயீல் வந்து சொல்லிய**
**கனவினைக் கண்டகங் களித்துக் கண்ணிணை**
**யினைவிழித் தெழுந்தன ரெழுந்த காலையிற்**
**றினகர னெழுந்தனன் பரந்த செங்கதிர்”**

**விளக்கம்**

அவ்வாறு ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வந்து சொன்ன மனசின்கண் தங்காநிற்கும் சொப்பனத்தைப் பார்த்து மனமகிழ்ச்சி கொண்டு இரண்டு கண்களையுந் திறந்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எழும்பினார்கள். அங்ஙன மெழும்பிய சமயத்தில் சூரியனும் கீழ்பாற்கடலின்கண் உதயமாயினான். சிவந்த கிரணங்கள் எவ்விடமும் பரவின.

**பாடல்: 744**

> **"வரைபுரை புயமுகம் மதுமன் மாவொடு**
> **நிரைநிரைத் தொறுவையு நடத்தீர் நீவிரென்**
> **றுரைசெய்து பெருக்கெடுத் தோங்கு மானதிக்**
> **கரையினின் மரைமலர்க் காலி னேகினார்"**

**விளக்கம்**

அப்பொழுது மலைகளுக்கொப்பாகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் நீங்களனைவர்களும் பொருந்திய குதிரைகளுடன் வரிசை வரிசையாகிய ஒட்டகங்களையும் நடத்திக் கொண்டு வாருங்களென்று சொல்லிவிட்டுப் பிரவாகமெடுத்தோங்கா நிற்கும் அப்பெரிய ஆற்றினது கரையின்கண் தங்களது தாமரை மலர் போன்ற பாதங்களினால் நடந்து போயினார்கள்.

**பாடல்: 745**

> **"ஒட்டகம் புரவிமற் றுள்ள பேர்களு**
> **மட்டறு சரக்கொடு மலிந்து தோன்றிடத்**
> **தொட்டவெண் டிரைக்கட லகடு தூர்த்திட**
> **முட்டிய புனனதிக் கரையின் முன்னினார்"**

**விளக்கம்**

அவ்வாறு அவர்கள் போக ஒட்டகம் குதிரை முதலிய மற்றும் மிருகங்களையுள்ள யாவர்களும் தங்களது அளவில்லாத சரக்குகளோடும் பொலிவுற்று விளங்கும்படி தோண்டிய வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தினது வயிற்றை நிரப்பும் வண்ணம் மோதிய ஜலத்தினைக் கொண்ட அவ்வாற்றின் கரையின்கண் போய் முன்னினார்கள்.

**பாடல்: 746**

**"அள்ளிய பொன்னெடுத் தமைத்து வெள்ளியாற்**
**புள்ளிக ளணியணி பொறித்து வைத்தன**
**வொள்ளிய வெய்யழ கொழுக வொல்லையிற்**
**றுள்ளிய வுழையுழை யிடத்திற் றோன்றிற்றே"**

**விளக்கம்**

அப்பொழுது அள்ளிய **சொர்னத்தை** எடுத்துண்டாக்கி அதன்மேல் வரிசை வரிசையாக வெள்ளியினால் புள்ளிகள் எழுதியதை யொப்ப அவர்களின் மருங்கினிடத்தில் பிரகாசத்தையுடைய சரீரத்தின் கண்ணுள்ள அழகானது ஒழுகிடும்படி துள்ளாநிற்கும் **ஒரு மானானது சீக்கிரத்தில் வந்து தோற்றினது**.

**பாடல்: 747**

**"நதியிடை வந்துமா னடப்பக் கண்டுமா**
**மதிநிகர் முகம்மது மனத்தி லின்பமுற்**
**றிதமுற நடந்துபி னேக யாவரும்**
**புதுமைகொ லிதுவெனத் தொடர்ந்து போயினார்"**

**விளக்கம்**

அவ்வாறு அம்மானானது வந்து ஆற்றின்கண் முன்னால் நடந்து போகவும், அதை மேன்மை பொருந்திய சந்திரனுக் கொப்பான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது கண்களாற் பார்த்து மனத்தின்கண் மகிழ்ச்சி

கொண்டு இனிமை பொருந்தும்படி அம்மானின் பின்னால் நடந்து போகவும், அங்குற்ற அனைவர்களும் இ∴து அதிசயமென்று சொல்லி அந்நபிகணாயகமவர்களைப் பின்பற்றிப் போயினார்கள்.

**பாடல்: 748**

> **“உடற்பொறிப் புள்ளிக ளொளிர முன்செலு**
> **மடப்பிணை பின்செலு மக்க ளியாவர்க்குங்**
> **கடற்பெருக் கெனக்கரை கடந்து வீங்கிய**
> **தடப்பெரு நதிமுழந் தாட்கு ளானதே”**

**விளக்கம்**

அவ்வாறு சரீரத்தின்கண் பொறிக்கப்பட்ட புள்ளிகளானவைப் பிரகாசிக்கும்படி முன்னால் நடந்து செல்லும் இளம்பருவத்தையுடைய அம்மானினது பின்னால் நடந்து போகும் அவ்வியாபாரிகள் யாவர்களுக்கும் சமுத்திரத்தினது பெருக்கையொப்ப இருகரைகளையுந் தாண்டி மிகுந்த விசாலமாகிய அந்தப் பெரிய ஆறானது முழங்கால்களுக்கு அகமாயிருந்தது.

**பாடல்: 749**

> **“பெருகிய பிரளயப் பெருக்கைப் போக்குதற்**
> **கொருவனே யலதுவே றிலையென் றுன்னியே**
> **தெருளுறச் செல்குநர் செல்க வென்றனர்**
> **வரையிரண் டெனுமணிப் புயமு கம்மதே”**

**விளக்கம்**

அப்போது இரண்டு மலைகளென்று சொல்லும் படியான அழகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அதிகரித்த ஜலத்தினது பிரவாகத்தைப் போக்குவதற்கு ஏகனாகிய ஜல்லஜலாலகுவத்த ஆலாவானவனே யல்லாமல் வேறேயொருவனு மில்லையென்று உங்களது மனசின்கண்

நினைத்து அறிவு பொருந்தும்படி நடக்கப்பட்ட நீங்கள் நடந்து சொல்லுங்களென்று சொன்னார்கள்.

**பாடல்: 750**

**“இம்மொழி நன்கென விசைந்தி யாவருஞ்**
**செம்மலோ டினிதுறச் செல்லுங் காலையில்**
**விம்மிதப் புயநபி விரித்த வாசகஞ்**
**சம்மதித் திலனொரு தறுக ணாளனே”**

**விளக்கம்**

அவர்கள் அவ்வாறு சொல்லவே அங்குற்ற அனைவர்களும் இந்த வார்த்தைகள் யாவும் நல்லவையென்று பொருந்திச் செம்மலாகிய அந்நபிகள் பெருமா னவர்களோடும் இனிமையுறும்படி நடக்கின்ற சமயத்தில் விம்மிதத்தைக் கொண்ட தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் விரிவாக எடுத்துச் சொல்லிய அந்த வார்த்தைகளை ஒரு தறுகண்ணனானவன் தனது மனசின்கண் பொருந்தினா னில்லன்.

**பாடல்: 751**

**“புந்தியிற் புத்தினைப் புகழ்ந்து போற்றித்தன்**
**சிந்தைவைத் தவ்வுழைச் செல்லும் போழ்தினி**
**லுந்தியின் றிரைசுழித் துருட்டி யீழ்த்திட**
**நந்தினா னபியுரை மறுத்த நாவினான்”**

**விளக்கம்**

அவ்விதம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்ன வார்த்தைகளுக் கிணங்காது மறுத்த நாவினையுடைய அம்மனிதன் தனது புத்தியினால் விக்கரகத்தைத் துதித்து வணங்கி அவ்விக்கிரகத்தின் மீது தனது மனசைநாட்டி

அவ்வாற்றினிடத்தில் நடந்து போகின்ற சமயத்தில் ஆற்றினது சுழிகளையுடைய அலையானது அவனைச் சுழித்துப் புரட்டியிழுத்திடத் தனது சரீரம் கெட்டுப் போகும்படி மாண்டனன்.

**பாடல்: 752**

**"விதியவன் றூதர்சொன் மேவி லாதவ**

**னதியினி லிறந்தன னடுக்க மின்றியே**

**யிதமுற வுண்மைகொண் டிசைந்த பேர்முழுக்**

**கதிபெறு பவரெனக் கரையி லேறினார்"**

**விளக்கம்**

அப்போது யாவர்களும் அகிலசராசரங்களையும் இன்னபடியென்று கட்டளைசெய்து நடத்தக் கூடியவனான ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் றசூல் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வார்த்தைகளைப் பொருந்தாத அம்மனிதன் ஆற்றின்கண் மாண்டான் இனிமையுறும்படி அச்சமில்லாது மனத்திலுண்மை கொண்டு பொருந்தியவர்கள் பூரணமாகிய கதியினையடைவார்களென்று சொல்லும்படியாக அவ்வாற்றினது கரையின்கண் போயேறினார்கள்.

**பாடல்: 753**

**"சிந்துவின் றிரைப்பெருக் கெறியத் தீதிலா**

**நந்தியத் திரிபரி யாவு நன்குற**

**வந்தவை முகம்மதின் பறக்கத் தாலெனத்**

**தந்தம ரொடுபுகழ்ந் தெடுத்துச் சாற்றினார்"**

**விளக்கம்**

அவ்விதம் ஏறிய யாவர்களும் சமுத்திரத்தினலைகளின் பெருக்கைப் போல அலைகளை வீச அவ்வாற்றின்கண் குற்றமற்ற இடபம் ஒட்டகம் குதிரை முதலிய

அனைத்தும் நன்மையுறும்படி நடந்து வந்தவை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பறக்கத்தாலென்று அவர்களைப் புகழ்ந்து தங்களது உறவினர்களோடும் எடுத்துக் கூறினார்கள்.

**வினாக்கள்**

1. சீறாப்புராணம் - விளக்கம் தருக.

2. நதி கடந்த படல செய்திகளைத் தொகுத்துரைக்க.


**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தொலைபேசி எண்: 9788749246, 9944182841

EMAIL ID: spetchi29@gmail.com